# ஞானோபதேச விஸ்தரிப்பு.

இது

கர்மானிய தேசத்தில் புதிதாய் இயற்றப்பட்ட

ஞானோபதேசத்தின் மொழிபெயர்ப்பு.

(By Rev. M. Wannske)

SHIYALI

PRINTED AT THE "T. S." PRESS.

1914.

Price Annas 4.]

V-5.17
செப்பனிடுவதற்காக எடுத்துக்
கொள்ளப்பட்ட
மாதம் 1982 வருடம்
செப்பனிட்டு முடித்த
மாதம் 1982 வருடம்
ஆராய்ச்சி உதவியாளரின்
கையொப்பம்.



# முகவுரை.

## I சத்தியவேதம்.

**1. இந்த உலகத்தில் மனுஷருக்குப் பிரதான கவலையாயிருக்க வேண்டியதென்ன?**

*பராபரனுடைய கிருபையைத்தேடுகிறதும் காக்கிறதும் மோட்சம் அடைகிறதும்தானே.*

*மத்.* 6, 33. *முந்த பராபரனுடைய இராச்சியத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள் அப்போது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூட கொடுக்கப்படும்.*

*மத்.* 16, 26; *மனுஷன் லோகத்தையெல்லாம் ஆதாயப்படுத்திக்கொண்டு தன் ஆத்துமத்தைச் சேதப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன? அல்லது மனுஷன் தன் ஆத்துமத்தை மீட்கிறதற்கு ஈடாக என்னத்தைக் கொடுப்பான்?*

*பிலி.* 2, 12; *பயத்தோடும் நடுக்கத்தோடும் உங்கள் இரட்சிப்பை நடப்பியுங்கள். பிரார்த்.* 235; 4, 11. *அப். நட.* 16, 29—31; *லூக்.* 10, 38—42, *லூக்.* 12, 13—21.

**2. தேவனுடைய கிருபையைப் பற்றியும் மோட்சத்தைப் பற்றியும் நமக்கு எப்படித் தெரியும்?**

*நம்மாலும் அல்ல சிருஷ்டிப்பின் கிரியைகளினாலும் அல்ல தேவனுடைய விசேஷித்த வெளிப்படுத்தலினாலேதான்.*

1 *கொரி.* 2, 9—14; *ரோ.* 1, 19—23; *அப். நட.* 17, 22—31.

**3. தேவன் நம்முடைய இரட்சிப்புக்கென்று தம்மை எப்படி வெளிப்படுத்தினார்?**

*நம்மைப் பற்றிய தமது கிருபையுள்ள ஆலோசனையையும் சித்தத்தையும் ஆதியிலிருந்து பழைய ஏற்பாட்டின் பிதாக்களுக்கு வார்த்தைகளினாலும் கிரியைகளினாலும் அறிவித்துக் காலம் நிறைவேறினபோது தமது குமாரனாகிய இயேசுகிறிஸ்துவைக் கொண்டு அதை நிறைவேற்றி அதுமுதல் எல்லாச் சாதிகளுக்கும் அதைத் தெரியப்பண்ணுவதினாலேதான்.*

*யோ.* 1, 17. 18; *கலா.* 4, 4—5; 1 *யோ.* 4, 9. *எபி.* 1-1,—2; *பிரார்த்.* 3, 2.

**4. தேவனுடைய இரட்சிப்பின் ஆலோசனை நம்பத் தக்கவிதமாய் எதிலே அறிவிக்கப்பட்டிருக்கிறது?**

*பரிசுத்த ஆவியின் வல்லமையால் தேவன் அழைத்த சாட்சிகள் எழுதிய சத்திய வேதத்தில்தான்.*

யோ. 5, 39; வேத எழுத்துக்களை ஆராய்ந்து பாருங்கள்; ஏனென்றால் அவைகளில் உங்களுக்கு நித்திய ஜீவன் உண்டென்று எண்ணுகிறீர்களே. எனக்குச் சாட்சி கொடுக்கிறவைகள் அவைகள்தானே.

லூக். 24, 45—48; அப். நட. 1. 8, 2; பேது. 1, 21; 1 யோ. 1, 1: 3.

5. ஆதலால் நாம் சத்தியவேதத்தை எப்படி மதிக்க வேண்டும்?

அது தேவனுடைய வசனம் என்றும் நம்முடைய விசுவாசத்திற்கும் நடக்கைக்கும் தவறாத நூல் என்றும் எண்ண வேண்டும்.

சங். 119, 105; உம்முடைய வசனம் என் கால்களுக்குத் தீபமும் என் பாதைக்கு வெளிச்சமுமானது.

2 தீமோ. 3, 15; இயேசுகிறிஸ்துவின்மேலுள்ள விசுவாசத்தினால் உன்னை இரட்சிப்புக்கு ஞானமுள்ளவனாக்கப் பலமுள்ள பரிசுத்த எழுத்துக்களைச் சிறுவயது துவக்கி அறிந்திருக்கிறாய்.

யோ. 20, 31; 1 தெச. 2, 13; 2 தீமோ. 3, 16.

6. சத்தியவேதம் தான் தேவவசனம் என்று எப்படித் தன்னைக் காட்டுகிறது?

மனுஷருடைய இருதயத்தில் வேலை செய்யும் வல்லமையினால்தான்.

ரோ. 1, 16; கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்துக்காக நான் வெட்கப்படேன். ஏனெனில் அது விசுவாசிக்கிற எவனையும் முந்தி யூதனையும் கிரேக்கனையும் கூட இரட்சிப்பதற்காகத் தெய்வபலமாய் இருக்கிறது.

யோ. 6, 63; எபி. 4, 12;

7. இந்தத் தேவவல்லமை உனக்கு எப்படித் தெரிய வரும்?

நான் சத்தியவேதத்தைத் தியானத்தோடும் அதினால் இரட்சிக்கப்பட வேண்டும் என்கிற வாஞ்சையோடும் படித்து அதனுடைய வார்த்தையைத் தேவவார்த்தையாக ஏற்றுக்கொண்டு அதைக் கைக்கொள்வதால்தான்.

லூக். 11, 28; பராபரனுடைய வார்த்தையைக் கேட்டு அதைக் காத்துக்கொள்ளுகிறவர்கள் பாக்கியவான்கள்.

கந்தாக்கேயின் பிரதானி (அப். நட. 8, 30—35); பெரோவா ஊரார். (அப். நட. 17, 10 11); யோசுவா. 1, 8,, எசா. 34, 16; யோ. 7, 16. 17. பிரசங். 122, 9, 10,

---



## II ஞானோபதேசம்.

8. சத்தியவேதத்தின் சாரம் சுருக்கமாய் எந்தப் புஸ்தகத்தில் அடங்கியிருக்கிறது?

மார்த்தின் லூத்தர் சாஸ்திரியார் எழுதிய சின்ன ஞானோபதேசத்தில் தான்.

9. இந்தச் சின்னப் புஸ்தகம் ஏன் லூத்தர் ஞானோபதேசம் என்று சொல்லப்படுகிறது?

திருச்சபையைச் சீர்திருத்தின லூத்தர் சாஸ்திரியார் என்பவர் அதிலே கிறிஸ்து மார்க்கத்தின் சத்தியத்தை சத்தியவேதத்திலிருந்து எடுத்துச் சேர்த்து வரிசைப்படுத்தி வினா விடைகளாக அதைச் சுருக்கமாய் விஸ்தரித்ததால்தான்.

10. ஞானோபதேசத்தில் எத்தனை ஆதி நியாயங்கள் உண்டு?

ஐந்து:—

1. பத்துக் கற்பனைகள்.
2. விசுவாசப்பிரமாணம்.
3. கர்த்தருடைய ஜெபம்.
4. ஞானஸ்நானக்கட்டளை.
5. இராப்போசனக்கட்டளை.

# முதலாம் ஆதி நியாயம்.

11. பத்துக் கற்பனைகளாகிய நியாயப்பிரமாணத்தில் பாரபரன் நமக்கு வெளிப்படுத்துகிறதென்ன?

*நாம் செய்யவேண்டியதையும் விலக்கவேண்டியதையும் அதில் நமக்கு வெளிப்படுத்துகிறார்.*

*மீக.* 6, 8.

12. அதைத் தவிர பாரபரன் தமது சித்தத்தை எங்கே வெளிப்படுத்தியிருக்கிறார்?

*எல்லா மனுஷருடைய இருதயத்திலுமே.*

*ரோ.* 2, 14. 15.

13. அதை நாம் எப்படி அறிவோம்?

*மனச்சாட்சியானது நம்முடைய நினைவுகளையும் வார்த்தைகளையும் கிரியைகளையும் நியாயந்தீர்த்து நன்மைதீமை இன்னதென்று காட்டுகிறதனால்தான்.*

*ஆதாம்* (1 *மோ.* 3, 8) *யோசேப்பின் சகோதரர்* (1 *மோ.* 42, 2) *தாவீது* (2 *சாமு* 24, 1.) *பேலீக்ஸ்* (*அப். நட.* 24, 25) *பவுல்* (*அப். நட.* 23, 1; 24, 16; *ரோ* 9, 1) *எபி.* 13, 18.

*பிரார்த்.* 381, 7.

14. நம்முடைய உள்ளத்தில் எழுதப்பட்ட அந்த நியாயப்பிரமாணம் பாரபரனுடைய சித்தத்தை அறிவதற்கு ஏன் போதுமானதல்ல?

*ஏனென்றால் மனச்சாட்சி அடிக்கடித் தவறிப்போய் உணர்ச்சியற்றிருக்கிறது.*

*யோ.* 16, 2; *ரோ.* 1, 28—32; *எபே.* 4, 17. 18; 5, 14.

*பிரார்த்.* 122, 1.

15. ஆகையால் மனச்சாட்சியை எழுப்பிச் சீர்திருத்தப் பாரபரன் என்ன செய்திருக்கிறார்?

*இஸ்ரவேல் சனத்துக்கு எழுதப்பட்ட ஒரு நியாயப்பிரமாணத்தைக் கொடுத்தார், அதனுடைய சாரமும் தொகையும் பத்துக்கற்பனைகளே.*

2 மோ. 19, 20; 5 மோ. 5, 1—22; யோ. 1, 17; பிரார்த். 123.

16. ஞானோபதேசத்திலுள்ள கற்பனைகளும் வேதத்திலுள்ள கற்பனைகளும் ஏன் சில இடங்களில் வித்தியாசமாயிருக்கின்றன?

ஏனென்றால் அவைகள் முதலிலே இஸ்ரவேலருக்காக எழுதப்பட்டதால் அவைகளில் பழைய ஏற்பாட்டுக்கு மாத்திரம் அடுத்த சில காரியங்கள் அடங்கியிருக்கின்றன.

2 மோ. 20, 2. 4. 8—10; 5 மோ. 5, 6. 8. 12—15.

17. ஞானோபதேசத்திலுள்ள கற்பனைகளோ எல்லா மனுஷருக்கும் செல்லும் என்று நமக்கு எப்படித் தெரியும்?

கிறிஸ்துவும் அவருடைய அப்போஸ்தலரும் பழைய ஏற்பாட்டிலுள்ள பிரமாணத்துக்கு அர்த்தம் சொல்லி எக்காலத்துக்கும் செல்லும் பாகங்களை அதிலிருந்து எடுத்துக் காட்டுகிறார்கள். அவர்களுடைய உபதேசத்தை ஞானோபதேசத்தில் கண்டுபிடிக்கலாம்.

மத். 5, 17. 18; மலைப்பிரசங்கம், (மத். 5—7) மத். 15, 4—6 ரோ. 13, 8—10; எபே. 6, 1—3.

18. பத்துக்கற்பனைகளுடைய தொகை என்ன?

பராபரனைச் சிநேகிக்கிற சிநேகமும் பிறத்தியானைச் சிநேகிக்கிற சிநேகமும்தான்.

மத். 22, 37—40 இயேசு அவனுக்குச் சொன்னதாவது உன் பராபரனாகிய கர்த்தரை உன் முழு இருதயத்தினாலும் உன் முழு ஆத்துமத்தினாலும் உன் முழு வினையினாலும் சிநேகிப்பாயாக. இது முதலாம் பெரிய கற்பனையாய் இருக்கிறது, அத்தோடொத்த இரண்டாங் கற்பனையோ உனக்கடுத்தவனை உன்னைப் போல் சிநேகிப்பாயாக என்பது. இவ்விரண்டு கற்பனைகளில் எல்லா நியாயப்பிரமாணமுந் தீர்க்கத்தரிசனமும் தொங்குகிறது என்றார்.

1 தீமோ. 1, 5 கற்பனையின் இலக்கு சுத்த இருதயத்திலும் நல்மனச்சாட்சியிலும் மாயமற்ற விசுவாசத்திலும் பிறக்கும் சிநேகம் தான்.

1 யோ. 4, 16 பராபரனுக்கு நமது மேலுள்ள சிநேகத்தை நாம் அறிந்து விசுவாசித்தோம். பராபரன் சிநேகந்தானே. சிநேகத்தில் நிலைத்திருக்கிறவன் பராபரனில் நிலைத்திருக்கிறான், பராபரன் அவனிலும் நிலைத்திருக்கிறார்.

3 மோ. 19, 18; 5 மோ. 6, 5; ரோ. 13, 8—10; 1 யோ. 4, 20. 21.

19. பராபரனுடைய சிநேகத்தைப் பற்றிய கற்பனைகள் எவை?



முதல் கற்பலகையில் அடங்கிய மூன்று கற்பனைகள்.

20. பிறத்தியானுடைய சிநேகத்தைப் பற்றிய கற்பனைகள் எவை?
இரண்டாங் கற்பலகையில் அடங்கிய ஏழு கற்பனைகள்.

---

## முதலாம் கற்பலகை.

பராபரனைச் சிநேகிக்கிற சிநேகத்தைப் பற்றியது.

வினா:— முதலாங் கற்பனை என்ன?

விடை:— உன் தேவனாகிய கர்த்தர் நாமே. நமக் முன்பாக உனக்கு வேறே தேவனில்லாமல் போவதாக. உயர வானத்திலேயும் கீழே பூமியிலேயும் பூமியின்கீழ்த்தண்ணீரிலேயும் உண்டான வஸ்துக்களுக்கு ஒத்திருக்கிற சுரூபத்தையாகிலும் விக்கிரகத்தை என்கிலும் நீ உனக்கு உண்டாக்க வேண்டாம். நீ அவைகளை நமஸ்கரிக்கவும் வணங்கவும் வேண்டாம்.

வினா:— இதன்கர்த்தமென்ன?

விடை:— நாம் எல்லாவற்றையும் பார்க்கப் பராபரனுக்குப் பயந்து அவரைச்சிநேகித்துக்கொண்டு அவர்பேரில் நம்பிக்கையாயிருக்க வேண்டும்.

### I. முகவுரை.

21. உன் தேவனாகிய கர்த்தர் நாமே என்கிற வார்த்தைகளைப் பற்றி என்ன விசேஷம்?

இந்த வார்த்தைகள் எல்லாக் கற்பனைகளுக்கும் துவக்கமான வார்த்தைகள்தான்.

22. இந்த வார்த்தைகள் நமக்கு எதை நினைப்பூட்டுகின்றன?

எல்லாவற்றையும் ஆளுகிற பராபரனுடைய வல்லமையையும் நம்மை மிதமிஞ்சி ஆசீர்வதிக்கிற அவருடைய தயவையுமே.

எரே. 31, 3; சங். 95, 6. 7; சங். 100, 5.

23. ஆகையால் அவருடைய நியாயப்பிரமாணத்தை எப்படி மதிப்போம்?

அது நாம் எப்போதும் கீழ்படிய வேண்டிய ஆண்டவருடைய கட்டளையும் நம்மை மெய்ப்பாக்கியத்துக்கு நடத்துகிற தேவனுடைய உபதேசமும் என்று அறிவோம்.

சங். 19, 8—12; சங். 119, 165; ஊக். 10, 28.

## II. விலக்கு.

24. முதலாங் கற்பனையில் பராபரன் விலக்குகிறதென்ன?

ஒன்றான மெய்தேவனும் கர்த்தருமாகிய தம்மைத் தவிர வேறே தேவர்களை வணங்கும் வணக்கமே.

25. இந்தக் கற்பனையை மீறுகிற பாவத்திற்குப் பெயர் என்ன?

விக்கிரகாராதனை.

லீஸ்திரா. (அப். நட. 14, 11—18) எபேசு. (அப். நட. 19, 23—28)
சங். 115, 3—8; எசா. 42, 8; 44, 9—20; ரோ. 1, 22—25; 1 கொரி. 8, 4.

26. கிறிஸ்தவர்களுக்குள்ளும் விக்கிரகாராதனை செய்கிறவர்களார்?

தேவனல்லாததை நம்பி அதனிடத்தில் தங்களுக்கு ஒத்தாசையையும் இரட்சிப்பையும் தேடுகிறவர்களே.

மத். 10, 37 என்னிலும் அதிகமாகத் தகப்பனையாகிலும் தாயையாகிலும் சிநேகிக்கிறவன் எனக்குப் பாத்திரவான் அல்ல, என்னிலும் அதிகமாக மகனையாகிலும் மகளையாகிலும் சிநேகிக்கிறவன் எனக்குப் பாத்திரவான் அல்ல என்று இயேசு சொன்னார்.

சங். 146, 3. 4; வாக். 3, 5; எரே. 9, 23. 24; 17, 5; மத். 6, 21. 24; எபே. 5, 5; பிலி. 3, 18. 19; 1 தீமோ. 6, 17; 1 யோ. 5, 21; பிரார்த். 288, 8.

## III. விதி.

27. பராபரன் முதலாங் கற்பனையில் கற்பிக்கிறதென்ன?

நாம் தமக்கு முழு இருதயத்தாலும் ஊழியம் செய்ய வேண்டுமென்பதே.

வாக். 23, 26. என் மகனே உன் இருதயத்தை எனக்குத் தா, உன் கண்கள் என் வழிகளின்மேல் பிரியமாவதாக.

28. இருதயத்தினால் செய்ய வேண்டிய இந்த மெய்யான தேவாராதனையை நாம் எப்படி நடத்துவோம்?



நாம் எல்லாவற்றையும் பார்க்கப் பராபரனுக்குப் பயந்து அவரைச் சிநேகித்துக் கொண்டு அவர்மேல் நம்பிக்கையாய் இருப்பதால்தான்.

29. நாம் எல்லாவற்றையும் பார்க்கப் பராபரனுக்குப் பயப்பட வேண்டிய காரணம் என்ன?

அவர் சர்வ வல்லவரும் எங்கும் நிறைந்தவரும் பரிசுத்தருமாயிருக்கிறார்.

மத். 10, 28. ஆத்துமத்தைக் கொல்ல வல்லவர்களாயிராமல் சரீரத்தைக் கொல்லுகிறவர்களுக்கு நீங்கள் பயப்படாமல் ஆத்துமத்தையும் சரீரத்தையும் நரகத்தில் கெடுக்கத் தக்க வல்லவருக்கே பயப்படுங்கள்.

யோசேப்பு (1 மோ. 39, 9); சூளையிலிருந்த புருஷர் (தானி. 3, 16—30) சிங்கக்கெபியிலிருந்த தானியேல் (தானி. 6); பேதுருவும் யோவானும் (அப். நட. 4, 15—20; 5, 27–29); 1 மோ. 17, 1; சங். 5, 5; சங். 33, 8. 9; சங். 139, 1—12.

30. நாம் எல்லாவற்றையும் பார்க்கப் பராபரனைச் சிநேகிக்க வேண்டிய காரணமென்ன?

அவர் மாறாத நன்மை சொரூபியும் நம்மை முந்தி சிநேகித்தவருமாயிருக்கிறார்.

சங். 73, 25. 26; பின்னை யார் எனக்குப் பரமண்டலங்களில் இருக்கிறார்; உம்மோடே நான் இருக்கையில், பூமியில் எனக்கு வேறே விருப்பம் இல்லை. என் மாம்சமும் என் இருதயமும் மாளும்போது பராபரன் என்றென்றைக்கும் என் இருதயத்தின் கன்மலையும் என் பங்குமாய் இருக்கிறார்.

1 யோ. 4, 19; நாம் அவரைச் சிநேகிக்கக் கடவோம், எனெனில் அவர் நம்மை முந்திச் சிநேகித்தார். ஆபிரகாம் (1 மோ. 22); பேது. (யோ. 21, 15—17); சங். 18, 2. 3. சங். 37, 4; பிரார்த். 201, 1; 200.

31. நாம் எல்லாவற்றையும் பார்க்கப் பராபரன் பேரில் நம்பிக்கையாயிருக்க வேண்டிய காரணமென்ன?

அவர் உண்மையும் சத்தியமுள்ளவருமாயிருந்து கடைசியில் எல்லாவற்றையும் நன்றாக்குகிறார்.

சங். 33, 4; கர்த்தருடைய வார்த்தை செம்மையும் அவருடைய செய்கைகள் எல்லாம் சத்தியமுமாயிருக்கிறது.

சங். 37, 5. உன் வழியைக் கர்த்தருக்கு ஒப்புவித்து அவர்மேல் நம்பிக்கையாயிரு; அவரே காரியத்தை நடப்பிப்பார்.

வாக். 3, 5. உன் புத்தியின்மேல் நீ சாராமல் கர்த்தரையே உன் முழு இருதயத்தோடும் நம்பு. எசா. 49, 15; எசா. 54, 10; ஆபிரகாம். (1 மோ. 12, 1—4) தாவீது. (1 சாமு. 17, 45—47) எலியா. (1 ராசா. 17, 8—16) சங். 23; சங். 118, 8. 9; சங். 121; சங். 146, 3. 4; பிரார்த். 166, 3. 4; 110; 113; 109;

32. பராபரனுக்குப் பயப்படுகிற பயமும் அவரைச் சிநேகிக்கிற சிநேகமும் நம்மை எதற்கு ஏவுகிறது?

அவருடைய கற்பனைகளுக்குக் கீழ்ப்படியும்படி.

பிரச. 12, 13 வசனத்தின் கடைத்தொகையை எல்லாங் கேட்போமாகப் பராபரனுக்குப்பயந்து அவர் கற்பனைகளைக் கைக்கொள், ஏனெனில் இதுவே எல்லா மனுஷர்மேலும் விழுந்த கடன்.

1 யோ. 5, 3. நாம் பராபரனுடைய கற்பனைகளைக் கைக்கொள்வதே அவரைச் சிநேகிக்கிற சிநேகம், அவர் கற்பனைகள் பாரமுமல்ல.

சங். 111, 10.

33. ஆதலால் மற்ற எல்லாக் கற்பனைகளின் அர்த்தமும் எப்படித் தொடங்குகிறது?

நாம் பராபரனுக்குப் பயந்து அவரைச் சிநேகித்துக்கொண்டு என்கிற வார்த்தைகளோடே.

---

## இரண்டாம் கற்பனை.

வினா:— இரண்டாம் கற்பனையென்ன?

விடை:—உன் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தை வீணிலே வழங்காதிருப்பாயாக.

வினா:— இதற்கர்த்தமென்ன?

விடை:— நாம் பராபரனுக்குப்பயந்து அவரைச் சிநேகித்துக்கொண்டு அவருடைய நாமத்தினால் தூஷணிக்காமலும் ஆணையிடாமலும் மந்திர தந்திரம் செய்யாமலும் தப்பறை சொல்லாமலும், கபடு பண்ணாமலும் சகல இக்கட்டிலேயும் அந்த நாமத்தை வணங்கி வேண்டிக்கொண்டு புகழ்ந்து இஸ்தோத்திரம் பண்ணவேண்டும்.

### I. விலக்கு.

34. பராபரன் இரண்டாம்கற்பனையில் விலக்குகிறதென்ன?



நாம் தமது நாமத்தை வீணிலே வழங்குவதே.

35. அவருடைய நாமத்தை நாம் வீணிலே வழங்குவதெப்படி?

நாம் அதை யோசிக்காமல் வாயினால் சொல்லுவதாலும் தீமைக்கென்று உபயோகிப்பதாலும்தான்.

36. அர்த்தத்தில் எந்தப் பாவங்கள் விசேஷமாய் விலக்கப்பட்டிருக்கின்றன?

அவருடைய நாமத்தினால் தூஷணிப்பதும் ஆணையிடுவதும் மந்திர தந்திரம் செய்வதும் தப்பறை சொல்லுவதும் கபடு பண்ணுவதும்தான்.

37. பராபரனுடைய நாமத்தினால் தூஷணிக்கிறதார்?

பராபரன் தனக்கு அல்லது மற்றவர்களுக்குத் தீமை செய்ய வேண்டும் என்று விரும்புகிறவனே.

பீலெயாம் (4 மோ. 22, 6, 17; 23, 7—18) கோலியாத்து (1. சாமு. 17, 41—43) சீமேயி. (2. சாமு. 16, 5—10) பேதுரு. (மத். 26, 74) ரோ. 12, 14; யாக். 3, 9. 10.

38. பராபரனுடைய நாமத்தினால் ஆணையிடுகிறதார்?

வாக்குமூலத்திற்காகவோ வாக்குத்தத்திற்காகவோ பராபரனைச் சாட்சியாக அழைக்கிறவனே,

எலியேசர் (1 மோ. 24, 1—9); தாவீது (1 சாமு. 24, 17—23) பவுல். (ரோ. 1, 9; 2 கொரி. 1, 23; 11, 31; பிலி. 1, 8.

39. ஆணையிடுவதும் அதிகாரிகள் ஆணையைக் கேட்பதும் என் அவசியம்?

உலகத்தில் பொய்யும் வஞ்சகமும் இருப்பதால் நியாயத்தையும் சத்தியத்தையும் விசாரிக்கவும் அதைக் காப்பாற்றவும் அடிக்கடி ஆணையினால் மாத்திரம் சாத்தியப்படும்.

எபி. 6, 16; மனுஷர் தங்களிலும் பெரியவர்பேரில் ஆணையிடுகிறார்கள்; உறுதி உண்டாக ஆணை அவர்களுக்குச் சகல எதிர் பேச்சுக்கும் முடிவு.

5 மோ. 10, 20; மத். 26, 62—64; 1 யோ. 5, 19.

40. நாம் அதிகாரிகளுக்கு முன்பாக எப்படி ஆணையிட வேண்டும்?

நாம் உண்மையான மனதோடு சர்வவல்லவரும் எல்லாவற்றையும் அறிந்தவருமாகிய பராபரனுக்குப் பயந்து ஆணையிட வேண்டும்.

சங். 139, 1—4.

கோர்ட்டில் இடவேண்டிய ஆணையாவது:— சர்வத்திற்கும் வல்ல தெய்வத்துக்கு முன்பாக நான் சொல்லுகிறது சத்தியம்.

41. நாம் சத்தியம் பண்ணுவதில் எப்படித் தேவனுடைய நாமத்தை வீணிலே வழங்குவோம்?

நாம் யோசியாமல் சத்தியம் பண்ணினாலும் சரி அதிகாரினுடைய உத்திரவில்லாமல் சத்தியம் பண்ணினாலும் சரி பொய்ச்சத்தியம் பண்ணினாலும் சரி அவருடைய நாமத்தை வீணிலே வழங்குகிறோம்.

மத். 5, 37; உங்கள் சொல்லோவெனில் ஆம், ஆம், அல்ல அல்ல என்றிருக்கக்கடவது; இவைகளுக்கு மிஞ்சினது பொல்லாப்பினால் உண்டாயிருக்கிறது.

ஏரோது (மத். 14, 6—11); 3 மோ. 19, 12; மத். 5, 33—36.

42. பொய்ச்சத்தியம் பண்ணுகிறதார்?

உள்ளதை இல்லை என்றும் இல்லாததை உள்ளதென்றும் சொல்லுகிறவனும் நடந்ததைச் சொல்லாமல் மௌனமாயிருக்கிறவனும் தான்.

43. பொய்ச்சத்தியம் பண்ணுதல் ஏன் அத்தனை பெரிய பாவம்?

ஏனென்றால் பொய்ச்சத்தியம் பண்ணுகிறவன் எல்லாம் பரிசுத்த தேவனைச் சாட்சியாக அழைத்துத் துணிகரமாய் அவருடைய கோபாக்கினையை தன்மேல் கூறிக்கொள்ளுகிறான். அவரைப் பரிகாசம் பண்ணுகிறான்.

கலா. 6, 7; மோசம்போகாதிருங்கள் பராபரன் தம்மைப் பரிகாசம் பண்ண ஒட்டார், ஏனெனில் மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான். எபே. 17, 19; மத். 16, 26.

44. பராபரனுடைய நாமத்தினால் மந்திர தந்திரம் பண்ணுகிறதார்?

பராபரனுடைய நாமத்தையும் வசனத்தையும் கொண்டு இரகசியமாய் அவபக்தியான வித்தைகளைச்செய்து அதினாலே தான் விரும்பியதை அடையவும் மறைக்கப்பட்டவைகளை அறியவும் பிரயாசைப்படுகிறவனே.

எகிப்துதேசத்து மந்திரக்காரர் (2 மோ. 7, 8—12); எந்தோர்ஸ்திரீ (1 சாமு. 28, 7); ஸ்தம்பன வித்தைக்காரனாகிய சீமோன் (அப். நட. 8, 9—24); பிலிப்பி

MADRAS



வேலைக்காரி (அப். நட. 16, 16); எபேசியர் (அப். நட. 19, 13—19) 5 மோ. 18, 10—12.

45. தேவனுடைய நாமத்தினால் தப்பறை சொல்லிக் கபடு பண்ணுகிறதார்?

தேவனுடைய நாமத்தைச் சொல்லிப் பொய்யைச் சோடிக்கிறவனும் பொய் பேசுகிறவனும்தான். (கள்ளப்போதகர், மாயக்காரர்.)

யாக்கோபு (1 மோ. 27, 20; பெரிய ஏரோது (மத். 2, 7—12); பிசாசு (மத். 4, 6); பரிசேயர் (மத். 23, 13—15; 23—28); ஏசா 5, 20; எரே. 23, 16. 30—32; மத். 7, 15. 21; 15, 8; லூக். 12, 1; 2 தீமோ. 3, 5.

46. இரண்டாங் கற்பனையை மீறுகிறவர்களைத் தேவன் ஏன் விசேஷமாய் பயமுறுத்துகிறார்?

ஏனென்றால் நாம் ஒவ்வொரு ஆகாத வார்த்தைக்காகவும் அவருக்குக் கணக்குக் கொடுக்க வேண்டுமென்று அறிய வேண்டும்.

மத். 12, 36; மனுஷர் எந்த வீண்வார்த்தையைப் பேசினார்களோ அதற்கெல்லாம் நியாயம் தீர்க்கும் நாளிலே கணக்கு ஒப்புவிப்பார்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.

அன்னனியா (அப். நட. 5, 1—11); மத். 12, 35—37.

## II. விதி.

47. தேவன் இரண்டாங்கற்பனையில் விதிக்கிறதென்ன?

நாம் அவருடைய நாமத்தை அவர் அதை வெளிப்படுத்தின நோக்கத்தை நினைத்துச் சரியாய் கையாட வேண்டுமென்பதே.

48. தேவன் தமது நாமத்தை எதற்காக வெளிப்படுத்தினார்?

நாம் அவரைச் சகல இக்கட்டிலேயும் வணங்கி வேண்டிக்கொண்டு புகழ்ந்து இஸ்தோத்திரம் பண்ண வேண்டுவதற்காகத் தான்.

49. நாம் அவரை ஏன் சகல இக்கட்டிலேயும் வணங்கவேண்டும்?

ஏனென்றால் அவர் உண்மையான இரட்சகர்.

சங். 50, 15; நெருக்கப்படுகிற நாளிலே நம்மை நோக்கிக் கூப்பிடு, அப்போது உன்னை விடுவிப்போம். அதற்காக நீ நம்மை மகிமைப்படுத்தக் கடவாய்.

யாக்கோபு (1 மோ. 32, 11); தாவீது (சங். 25; சங். 130); எசேக்கியா (2 ராசா. 19, 14—19; எசா. 38, 1—5); சேஷர் (மத். 8, 25); சங். 91, 15; சங். 145, 18; பிரார்த் 166; 288, 4.

50. வேண்டிக்கொள்வதென்றால் என்ன?

துன்பமில்லாத காலத்திலும் தேவனோடு பேசுவதும் உறவாடுவதும்தான்.

சங். 19, 15; எபே. 6, 18; 1 தெச. 5, 17; காலை மாலை பாடுகிற பிரார்த்தனைகள்.

51. நாம் அவரை ஏன் புகழ வேண்டும்?

ஏனென்றால் அவருடைய ஆளுகையும் தன்மையும் அவ்வளவு மகத்துவமும் மகிமையுமாய் இருக்கிறது.

எசா. 6, 3; சங். 103; 104; 146, 2; ரோ. 11, 33—36; 1 பேது 1, 3. 4;

அறி. 4, 11; 5, 12. 13; 15, 3. 4; பிரார்த். 91, 286, 278, 275, 281, 99.

52. நாம் அவரை ஏன் இஸ்தோத்திரிக்க வேண்டும்?

ஏனென்றால் நாம் தினம் அவர் கையிலிருந்து ஏராளமான நன்மைகளைப் பெற்றுக்கொள்ளுகிறோம்.

சங். 118, 1; கர்த்தரைத் துதியுங்கள் ஏனெனில் அவர் நல்லவர், அவர் கிருபை என்றுமுள்ளது.

நோவா (1 மோ. 8, 20); யாகோபு (1 மோ. 32, 10); சமாரியன் (லூ. 17, 15—16).

சங். 50, 14. 23; 92, 2. 3; எபே. 5, 20; பிரார்த். 274.

---

## மூன்றாம் கற்பனை.

வினா:—மூன்றாங் கற்பனை என்ன?

விடை:—திருநாளை ஆசரிக்க நினைப்பாயாக.

வினா:—இதற்கர்த்தமென்ன?

விடை:—நாம் பராபரனுக்குப் பயந்து அவரைச் சிநேகித்துக்கொண்டு ஞானப்பிரசங்கத்தையுந் தேவவசனத்தையும் அசட்டைபண்ணாமல் அவைகளைப் பரிசுத்தமாக எண்ணிக்கொண்டு சந்தோஷத்துடனே கேட்டுப் படிக்க வேண்டும்.



## I. திருநாள்.

53. திருநாள் ஆவதென்ன?

கிறிஸ்தவசபை ஒழுங்காய்த் தேவாராதனைக்குக் கூடும் நாள்.

54. தேவாராதனையின் நோக்கம் என்ன?

அதிலே திருச்சபை தேவனுடைய மகத்துவமான செய்கைகளைத் தியானித்துத் தேவ ஐக்கியத்தையும் சகோதர ஐக்கியத்தையும் அனுபவித்துப் பூரிப்பதே.

சங். 26, 6. 7; அப். நட. 2, 11; ரோ. 5, 1. 2, யூதா 20.

55. தேவாராதனை எப்படி நடந்தேறுகிறது?

தேவன் தமது வசனம் சாக்கிரமெந்துக்கள் மூலமாய்த் தமது சபையண்டை வரச் சபையானது ஜெபம் பாட்டுகளோடு அவரைக் கிட்டிச் சேருகிறது.

மத். 18, 20; இரண்டுபேராவது மூன்றுபேராவது என் நாமத்திலேஎங்கே கூடியிருக்கிறார்களோ அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன்.

யாக். 4, 8; பராபரனண்டை சேருங்கள், அப்போது அவர் உங்களண்டை சேருவார்.

1 மோ. 28, 16. 17; 2 மோ. 20, 24; மத். 21, 13; 28, 20; கொலோ. 3, 16; பிரார்த். 129.

56. கிறிஸ்தவசபை ஆதியிலிருந்து வாரத்தின் முதலாம் நாளாகிய ஞாயிற்றுக்கிழமையைத் தேவாராதனைக்காகக் குறித்த காரணமென்ன?

நம்முடைய நாதர் இயேசுக்கிறிஸ்து ஞாயிற்றுக்கிழமையிலே மரித்தோரை விட்டு எழுந்தார் என்பதே.

அப். நட. 20, 7; 1 கொரி. 16, 2; அறி. 1, 10.

57. திருச்சபை இந்தக் கிழமையைத் தவிர இன்னும் வருஷா வருஷம் ஆசரிக்கிற திருநாட்கள் எவை?

இயேசுநாதர் பிறந்த பண்டிகையும் உயிர்த்த பண்டிகையும் பெந்தேகோஸ்தே பண்டிகையும் இன்னும் மற்ற பண்டிகைகளும் தான்.

58. கிறிஸ்தவசபை ஞாயிற்றுக்கிழமைகளிலும் பண்டிகை நாட்களிலும் வேலையை விட்டு ஓய்ந்திருப்பானேன்?

வேலை செய்தால் பொது தேவாராதனை நடக்க முடியாது, மேலும் இவ்வுலகத்தின் கஷ்டத்தை அனுபவிக்கிற மனுஷனுக்கு அன்புள்ள கர்த்தர் அருளிச்செய்த ஓய்வு நாளின் இளைப்பாறுதல் அவசியம் தேவை.

மரியாளும் மார்த்தாளும் (லூக். 10. 38—42); 1 மோ. 2, 2. 3; 3, 17—19; 2 மோ. 20, 9—11; 5 மோ 5, 13—15; பிரார்த். 123, 4.

மாற். 2, 27.

## II. விலக்கு.

59. மூன்றும் கற்பனையில் விலக்கப்பட்டதென்ன?

ஞானப்பிரசங்கத்தையும் தேவவசனத்தையும் அசட்டைபண்ணுவதே.

லூக். 13, 13; லூக். 10, 16.

60. ஞானப்பிரசங்கம் ஏன் வற்புறுத்தப்படுகிறது?

ஏனென்றால் தேவவசனம் வீட்டிலே மாத்திரம் வாசிக்கப்படாமல் வெளியரங்கமாகத் திருச்சபை கூடுகிற இடத்திலும் அறிவிக்கப்பட வேண்டும். இப்படி வெளியரங்கமாக அறிவிக்கப்படும் தேவவசனத்துக்கு விசேஷமான பெலனும் வாக்குத்தத்தமும் உண்டு.

மத். 24, 14; மாற். 16, 15; லூக். 24, 46—48; ரோ. 10, 14—17.

61. தேவவசனத்தை அசட்டைபண்ணுகிறதார்?

பொதுதேவாராதனையை அற்பமாக எண்ணிக் காரணமின்றி அதற்கு வராமலும் அப்படிவந்தாலும் தியானமில்லாமல் இருக்கிறவனும் ஓய்வுநாளைப் பாவநாளாக்குகிறவனும் தான்.

கலியாணவிருந்தைப்பற்றிய உவமை. (லூக். 14, 16—20); எபி. 10, 25.

## III விதி.

62. மூன்றுங்கற்பனையில் தேவன் கற்பிக்கிறதென்ன?

திருநாளைப் பரிசுத்தமாக்குதலே.

63. நாம் திருநாளை எதனால் பரிசுத்தமாக்குவோம்?

அந்நாளில் அறிவிக்கப்படும் தேவவசனத்தைப் பரிசுத்தமாக எண்ணுவதால் தான்.



64. தேவவசனத்தைப் பரிசுத்தமாக எண்ணுவதென்றால் என்ன?

நாம் அதை மனுஷருடைய வார்த்தையாக அல்ல, தேவனுடைய வார்த்தையாகவே ஏற்றுக்கொள்ளுவது.

65. தேவவசனத்தைப் பரிசுத்தமாக எண்ணுகிறவன் என்ன செய்வான்?

அவன் சந்தோஷத்தோடு தேவாராதனைக்குப் போய் அங்கே கேட்கிறதை எல்லாம் தன் இருதயத்தில் காப்பாற்றி அதன்படி நடப்பான்.

சங். 26, 8; கர்த்தாவே, உமது வீட்டின் வாசஸ்தலத்தையும் உமது மகிமையின் கூடாரஸ்தலத்தையும் நேசிக்கிறேன்.

யாக். 1, 22.

கன்னிமரியாள் (லூக். 2, 19. 51); சிமெயோன், அன்னாள் (லூக். 2, 25—38); இயேசுபிள்ளை (லூக். 2, 19); பெத்தானியாவிலுள்ள மரியாள் (லூக். 10, 39); லீதியாள் (அப். நட. 16, 14. 15); சங். 27, 4; 84; பிரச. 4, 17; லூக். 11, 28; யோ. 7, 17; 1 கொரி. 16, 1. 2; யாக். 1, 27.

66. இப்படி ஓய்வுநாளை ஆசரிக்கிற நாம் என்ன பலன் அடைவோம்?

நமது முழு ஜீவியமும் ஒரு தேவாராதனையாகும்படி நாம் திரும்பத் திரும்ப எவி யெழுப்பப்படுவோம்.

ரோ. 12, 1.

---

## இரண்டாம் பலகை.

பிறத்தியாளை நேசிக்கிற நேசத்தைப் பற்றியது.

67. இரண்டாம் பலகையின் பொருள் எந்த வேதவார்த்தையில் தொகுப்பாய் அடங்கியிருக்கிறது?

நீ உன்னைப்போல் உன் பிறத்தியானை நேசி என்கிற கற்பனையில்தான்.

5 மோ. 19, 18; மத். 22, 39; ரோ. 13, 8—10; 1 கொரி. 13.

68. நமது பிறத்தியான் ஆர்?

நமது ஒத்தாசை தேவையான எவனும் எச்சாதியானும் தெரிந்தவனும் தெரியாதவனும் மித்திருவும் சத்துருவும்.

மத். 5, 43—45. உனக்கு அடுத்தவனைச் சிநேகித்து உன் சத்துருவை பகைக்கக்கடவாய் என்பது சொல்லப்பட்டதென்று கேட்டீர்கள். (44) நானோ உங்களுக்குச் சொல்லுகிறேன் உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள் உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள் உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள் உங்களைத் தூஷணிக்கம் பண்ணுகிறவர்களுக்காகவும் உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம் பண்ணுங்கள். (45) நீங்கள் பரமண்டலங்களிலிருக்கிற உங்கள் பிதாவின் புத்திரராய் இருக்கத் தக்கதாகத் தானே; ஏனெனில் அவர் தீயோர்பேரிலும் நல்லோர்பேரிலும் தமது சூரியனை உதிக்கச்செய்து நீதியர்பேரிலும் அநீதியர்பேரிலும் வருஷிக்கப் பண்ணுகிறார்.

இரக்கமுள்ள சமாரியன். (லூக். 10, 25—37); கலா. 6, 10.

69. நாம் நமது பிரத்தியானை நம்மைப்போல் எப்போ சிநேகிப்போம்?

மனுஷர் என்னத்தை உங்களுக்குச் செய்ய வேண்டுமென்றிருக்கிறீர்களோ, அதையெல்லாம் நீங்கள் அவர்களுக்கும் அப்படியே செய்யுங்கள் என்கிற ஆண்டவருடைய வார்த்தையின்படி நாம் செய்யும்போது தான். (மத். 7, 12).

லூக். 6, 31; ரோ. 12, 15.

---

## நாலாங் கற்பனை.

வினா:—நாலாங் கற்பனை என்ன?

விடை:—உனக்கு நன்மை வருகிறதற்கும் நீ பூமியிலே நீடித்திருக்கிறதற்கும் உன் தகப்பனையும் தாயையும் சங்கித்திருப்பாயாக.

வினா:—இதற்கர்த்தம் என்ன?

விடை:—நாம் பராபரனுக்குப் பயந்து அவரைச் சிநேகித்துக்கொண்டு நம்முடைய தாய் தகப்பன்மாரையும் எசமான்களையும் அசட்டைபண்ணாமலும் அவர்களுக்குக் கோபம் வருவிக்காமலும் அவர்களைக் கனமாக எண்ணிக்கொண்டு அவர்களுக்கு ஊழியஞ்செய்து கீழ்ப்படிந்து பட்சத்தையும் சங்கையையும் காட்டி வர வேண்டும்.



### I. தாய் தகப்பன்மாரும் எசமான்களும்.

70. நமக்கு மேல்பட்டவர்களில் முதன்மையானவர்கள் ஆர்?

நம்முடைய பெற்றோர்.

71. ஏன்?

அவர்கள் நமது பெரிய உபகாரியாகிய கடவுளுக்கு அடுத்த படியில் இருப்பதனாலும் அவர்களுடைய அன்பான கரிசனை தேவ அன்பையும் கரிசனையையும் படம்போல் காட்டுவதாலும் தான்.

சங். 103, 13; எசா. 49, 15; 66, 13; மத். 7, 11.

72. பெற்றோரைப் போல் நம்மை நடத்துகிறதார்?

அவர்களைப்போல் நமது நன்மைக்கென்று கவலைப்பட்டு அதிகாரிகளாயிருக்கிறவர்கள் தான்: வீட்டிலே எசமான்களும், கோயிலிலும் பள்ளிக்கூடத்திலும் குருக்களும் உபாத்திமாரும், இராசாங்கத்தில் இராசாவும் மற்ற எல்லா அதிகாரிகளும்.

நாகமானும் அவனுடைய வேலைக்காரரும் (2 இரா. 5, 3. 13); நூற்றுக்கு அதிபதியும் அவனுடைய வேலைக்காரனும் (மத். 8, 5—9); தான் ஸ்தாபித்த சபைகளுடைய ஞானத்தகப்பனாகிய பவுல் அப்போஸ்தலன் (1 கொரி. 4, 15; 1 தெ. 2, 11. 12); தேசத்தின் தகப்பனாகிய யோசேப்பு (1 மோ. 41, 41—43).

### II, விலக்கு.

73. தேவன் நாலாங் கற்பனையில் விலக்குகிறதென்ன?

நாம் நமது தாய் தகப்பன்மாரையும் எசமான்களையும் அசட்டைபண்ணிக் கோபப்படுத்துவதே.

74. அவர்களை அசட்டை பண்ணுகிறதார்?

அவர்களைப்பற்றி அற்பமாக நினைத்துப் பேசுகிறவனும் அவர்களைத் தன்னைப் போன்றவர்களாக எண்ணி அவர்களுக்கு மேல் தன்னை உயர்த்துகிறவனும் தான்.

அப்சலோம் (2 சா. 15, 1—6); வாக். 30, 17.

75. அவர்களுக்கு எப்படிக் கோபம் வருவிப்போம்?

கீழ்ப்படியாமையினாலும் முரட்டாட்டத்தினாலும் அவமரியாதையினாலும் நன்றியறியாமையினாலும் தான்.

## III. விதி.

76. தேவன் நாலாங் கற்பனையில் விதிக்கிறதென்ன?

நாம் நமது தாய் தகப்பன்மாரையும் எசமான்களையும் கனம் பண்ண வேண்டுமென்பதே.

77. அதை எப்படிச் செய்வோம்?

நாம் அவர்களைக் கனமாக எண்ணிக்கொண்டு அவர்களுக்கு ஊழியஞ்செய்து கீழ்ப்படிந்து பட்சத்தையும் சங்கையையும் காட்டுவதால்.

78. அவர்களை எப்படிக் கனமாக எண்ணுவோம்?

வார்த்தைகளினாலும் கிரியைகளினாலும் நடக்கையினாலும் அவர்களுக்குச் செலுத்த வேண்டிய கனத்தை அவர்களுக்குக் காட்டுவதால் தான்.

3 மோ. 19, 32; நரைத்தவனுக்கு முன்பாக எழுந்து முதிர்வயதுள்ளவன் முகத்தைக் கனம் பண்ணி உன் பராபரனுக்குப் பயப்படுவாயாக, நாம் கர்த்தர்.

1 பேது. 2, 17; எல்லாரையும் கனம் பண்ணுங்கள், சகோதரரைச் சிநேகியுங்கள், பராபரனுக்குப் பயந்திருங்கள், இராசாவைக் கனம் பண்ணுங்கள்.

யோசேப்பு (1 மோ. 46, 29; 47, 7; 48, 1; 50, 1—6); சாலொமோன் 1 இரா. 2, 19.

79. அவர்களுக்கு நாம் எப்படி ஊழியஞ் செய்வோம்?

நாம் எவுதலின்றி அவர்களுக்கு உதவியாயிருந்து உண்மையான மனதோடே அவர்களுக்காகக் கவலைப்படுவதால் தான்.

யோசேப்பு (1 மோ. 45, 9—11); இயேசுநாதர் (யோ. 19, 27); 1 தீமோ. 5, 4.

80. நாம் அவர்களுக்கு எப்படிக் கீழ்ப்படிவோம்?

நாம் தேவகற்பனைக்கு விரோதமாயிராதமட்டில் அவர்களுடைய சொல்லை உற்சாகத்தோடும் பூர்த்தியாகவும் நிறைவேற்றுவதால் தான்.

எபே. 6, 1—3; பிள்ளைகளே, உங்கள் பெற்றாருக்குக் கர்த்தருக்குள் கீழ்ப்படியுங்கள் ஏனெனில் இது நீதி. (2) உனக்கு நன்றாயிருக்கிறதற்கும் உன் நாட்கள் பூமியிலே



நீடித்திருக்கிறதற்கும் உன் தகப்பனையும் தாயையும் கனம்பண்ணு. (3) இது வாக்குத்தத்தமுள்ள முதலாங்கற்பனையாயிருக்கிறது.

கொலோ. 3, 22; வேலைக்காரரே, மாமிசத்தின்படி எசமான்களாயிருக்கிறவர்களுக்கு நீங்கள் எல்லாவற்றிலும் கீழ்ப்படிந்து, மனுஷருக்கு இதமியக்காரர்போல் பார்வைக்கு ஊழியஞ்செய்யாமல் கபடில்லாத இருதயத்தோடு பராபரனுக்கு ஊழியஞ்செய்யுங்கள்.

எபி. 13, 17; உங்கள் வழிகாட்டிகளுக்கு கீழ்ப்படிந்து அடங்குங்கள் ஏனென்றால் அவர்கள் உங்கள் ஆத்துமங்களுக்காகக் கணக்கு ஒப்புவிக்கிறவர்களாய் விழித்திருக்கிறார்கள். இதை அவர்கள் பெருமூச்சுவிட்டுச் செய்யாமல் சந்தோஷத்தோடே செய்யப் பாருங்கள். ஏனென்றால் அது உங்களுக்கு நல்லதல்ல.

ரோ. 13, 1. 2; எந்த ஆத்துமாவும் மேல்பட்ட அதிகாரங்களுக்குக் கீழ்ப்படிந்திருக்கக்கடவது, ஏனென்றால் பராபரனால் உண்டாகாத அதிகாரங்கள் இல்லை உண்டான அதிகாரங்கள் பராபரனால் கட்டளையிடப்பட்டவைகள்.

அப். நட. 5, 29; பேதுருவும் அப்போஸ்தலரும் பிரத்தியுத்தாரமாகச் சொன்னதாவது மனுஷருக்குக் கீழ்ப்படிகிறதைப் பார்க்கிலும் பராபரனுக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்றார்கள்.

இயேசுபிள்ளை (லூ. 2, 51); எலியேசர் (1 மோ. 24); கப்பர்நகூம் தலைவனுடைய வேலைக்காரர் (மத். 8, 9); மத். 22, 21; 1 பேது. 2, 13.

81. அவர்களுக்கு ஊழியஞ் செய்யவும் கீழ்ப்படியவும் நம்மை ஏவுகிறதென்ன?

நன்றியறிந்த அன்பே.

82. பிறந்த வீட்டையும் தேசத்தையும் சிநேகிக்கிற சிநேகத்துக்கு என்ன பெயர்?

சுதேசாபிமானம்.

1 மோ. 12, 1; 24, 4; ரூத் 2, 11; சங். 137, 1—6; எரே. 22, 10.

## IV. வாக்குத்தத்தம்.

83. நாலாங் கற்பனையோடு தேவன் என்ன விசேஷமான வாக்குத்தத்தத்தைச் சேர்த்தார்?

உனக்கு நன்மைவருகிறதற்கும் நீ பூமியிலே நீடித்திருக்கிறதற்கும் என்கிற வாக்குத்தத்தத்தைத் தான்.

எபே. 6, 1—3.

84. இந்த வாக்குத்தத்தம் எப்படி நிறைவேறுகிறது?

நாலாங் கற்பனையைக் கைக்கொள்ளுகிறவர்களுக்குள் சமாதானமும் ஒழுங்கும் இருப்பதனால் ஆசீர்வாதமும் சுகவாழ்வும் அவர்கள் வீடுகளிலும் சனசமூகத்திலும் உண்டாகும்.

சேம், யாப்பேத். (1 மோ. 9, 26. 27); ரூத். (ரூத் 2, 11. 12);

ரேகாபியர். (எரே. 35, 18. 19); 1 திமோ. 2, 1. 2; வீட்டுச்சட்டம்.

---

## ஐந்தாங் கற்பனை.

வினா:—ஐந்தாங் கற்பனை என்ன?

விடை:—கொலை செய்யாதிருப்பாயாக.

வினா:—இதற்கர்த்த மென்ன?

விடை:—நாம் பராபரனுக்குப்பயந்து அவரைச் சிநேகித்துக்கொண்டு பிறத்தியானுடைய சரீரத்திற்குச் சேதமானாலும் பொல்லாங்கென்கிலும் வருவிக்காமல் சகலசரீர இக்கட்டிலேயும் அவனுக்கு ஒத்தாசையாய் இருந்து உபகாரம் பண்ணிக்கொண்டு வர வேண்டும்.

### I. விலக்கு.

85. தேவன் ஐந்தாங் கற்பனையில் விலக்குகிறதென்ன?

பிறத்தியானுடைய வாழ்நாள் குறைந்துபோய் அவன் சுகம் கெட்டுபோகாதபடி நாம் அவனுடைய சரீரத்திற்குச்சேதமானாலும் பொல்லாங்கென்கிலும் வருவிக்கக் கூடாது.

யாக்கோபின் மக்கள் (1 மோ. 37, 35); பேதுரு (மத். 26, 51).

எரிகோ வழியில் வந்த கொலைக்காரர் (லூக். 10, 30).

86. இந்தக் கற்பனைக்கு விரோதமான எல்லாப் பாவங்களிலும் பெரிய பாவம் என்ன?

கொலை.

முதல் கொலைப் பாதகனாகிய காயீன் (1 மோ. 4, 8).



87. கொலையானது ஏன் அவ்வளவு கொடுமையான பாவம்?

மனுஷனைத் தமது சாயலாகச் சிருஷ்டித்து ஜீவனுக்கும் மரணத்துக்கும் [illegible] ஆண்டவராயிருக்கிற பராபரனுக்குக் கொலை பாதகன் துரோகம் பண்ணுகிறான்.

1 மோ. 9, 6; 5 மோ. 32, 39; ரோ. 14, 7. 8;

88. தற்கொலையும் ஏன் இதைப் போன்ற கொடுமையான பாவம்?

ஏனென்றால் தெளிந்த மனதோடே தன்னைத்தான் கொல்லுகிறவன் எவனோ அவன் மேல்கண்ட விதமாகவே தேவனுடைய அதிகாரத்திற்குத் துரோகம் பண்ணி தன் குணப்படுதலுக்கான வழியைத் தானே தடுக்கிறான்.

சவுல் (1 சா. 31, 4); அகித்தோபல் (2 சா. 17, 23);

யூதாஸ்காரியோத் (மத். 27, 3. 5); லூக். 24, 8.

89. பிறத்தியானுடைய உயிருக்கு விரோதமான எல்லாப் பாவங்களிலும் கொலை தான் பெரிது என்று தேவன் எப்படிக் காட்டுகிறார்?

கொலை பாதகனுடைய உயிரை வாங்க மேலானவர்களுக்கு அவர் அதிகாரங்கொடுத்திருப்பதால் தான்.

1 மோ. 9, 6; எவன் மனுஷனுடைய இரத்தத்தைச் சிந்துகிறானோ அவனுடைய இரத்தம் மனுஷனால் சிந்தப்படக் கடவது, ஏனெனில் பராபரனுடைய சாயலாக அவர் மனுஷனை உண்டாக்கினார்.

ரோ. 13, 4. ஏனெனில் அவன் உனக்கு நன்மையாகப் பராபரனுடைய ஊழியக்காரனாய் இருக்கிறான். நீ பொல்லாப்பைச் செய்தாயாகில் பயப்படு, அதேனென்றால் விருதாவாய் பட்டயத்தைப் பிடித்திரான், ஏனெனில் பொல்லாப்பைச் செய்தவன்மேல் கோபாக்கினை வர அவன் நீதியைச் சரிக்கட்டுகிற தெய்வ ஊழியக்காரனாயிருக்கிறான்,

1 மோ. 6, 5. 6; 2 மோ. 21, 12; மத். 26, 52.

90. ஐந்தாங் கற்பனையை மீற நம்மை ஏவும் குணங்கள் எவை?

கோபம், பொறாமை, பகை, பழிவாங்குதல், பிறத்தியானுடைய உயிரை ஒரு பொருட்டாக எண்ணாமை, புத்தியில்லாத மிருகங்களை ஹிம்சித்தல் என்பவைகளே.

லூக். 12, 10; நீதிமான் தன் மிருக ஜீவனை விசாரிக்கிறான். ஆனால் ஆகாதவர்களின் இருதயம் குரூரமானது.

ரோ. 12, 19; பிரியமானவர்களே, நீங்கள் சரிக்குச் சரிக்கட்டாமல் தேவ கோபத்துக்கு இடங்கொடுங்கள், ஏனென்றால் நீதியைச் சரிக்கட்டுதல் நம்முடையது நாம் பதிலுக்குக் கொடுப்போம் என்று கர்த்தர் சொல்லுகிறான் என்று எழுதியிருக்கிறது.

ஏசாவின் கோபம் (1 மோ. 27, 41); யோசேப்பின் அண்ணன்மாருடைய பொறாமை (1 மோ. 37, 4. 11); சவுலின் பகை (1 சா. 18, 9—11. 29); ஏரோதுவின் பழி (மத். 14, 3); ஆசாரியனும் லேவியனும் (லூக். 10, 31, 32); செல்வன் (லூக். 16, 20. 21); மத். 5, 21. 22; எபே. 4, 31; 1 [illegible]. 3, 9; 1 யோ. 3, 15; யாக். 1, 20.

## II. விதி.

91. தேவன் ஐந்தாங் கற்பனையில் கற்பிக்கிறதென்ன?

பிறத்தியானுக்கு இரங்குதல் தான்.

மத். 5, 7; இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள் அதேனென்றால் அவர்கள் இரக்கம் பெறுவார்கள்.

லூக். 6, 36; ஆனபடியினாலே உங்கள் பிதா இரக்கமுள்ளவராயிருக்கிறதுபோல நீங்களும் இரக்கமுள்ளவர்களாகுங்கள்.

92. நாம் அவனுக்கு எப்படி இரக்கம் காட்டுவோம்?

அவன் தன் உயிரைக் காப்பாற்றிச் சுகமாய் வாழும்படி நாம் சகல சீர் இக்கட்டிலேயும் அவனுக்கு ஒத்தாசையாய் இருந்து உபகாரம் பண்ணிக் கொண்டு வருவதால் தான்.

ஏசா. 58, 7; பசியுள்ளவனுக்கு உன் அப்பத்தைப் பிட்டுக்கொடுத்து துரத்துண்ட சிறுமையானவனை வீட்டிலே சேர்த்துக்கொண்டு அம்மணமானவனைக் கண்டாயானால் அவனுக்கு வஸ்திரம் கொடுத்து உன் மாமிசமானவனுக்கு உன்னை ஒழிக்காதிருந்தால் அது அல்லவோ நாம் தெரிந்துகொள்ளுகிற உபவாசம்.

கிறிஸ்து நமது வைத்தியரும் இரட்சகருமானவர் (மத். 4, 23; 24; மாற். 1, 34); இரக்கமுள்ள சமாரியன் (லூக். 10, 33—35); மத். 25, 35. 36; ரோ. 12, 20.

93. நமது சபை சகாயமற்றவர்களுக்கு எப்படி இரக்கம் காட்டும்?

அநாதபிள்ளைகள் நோயாளிகள் விதவைகள் விருத்தாப்பியர் முதலியவர்களையும் ஆதரிக்கச் செய்யும் ஏற்பாடுகளால்.



# ஆறாங் கற்பனை.

வினா:—ஆறாங் கற்பனை என்ன?

விடை:—விபசாரம் பண்ணாதிருப்பாயாக.

வினா:—இதற்கர்த்தமென்ன?

விடை:—நாம் பராபரனுக்குப் பயந்து அவரைச் சிநேகித்துக் கொண்டு வார்த்தைகளிலேயும் கிரியைகளிலேயும் கற்புஞ் சுத்தாங்கமுமாய் நடந்து புருஷனும் பெண்சாதியும் ஒருவருக்கொருவர் பட்சத்தையும் சங்கையையும் காட்டி வர வேண்டும்.

## I. சம்சாரமார்க்கம்,

94. தேவன் ஆறாங் கற்பனையினால் எதைக் காப்பாற்றச் சித்தமாயிருக்கிறார்?

சம்சாரவாழ்க்கையை.

95. சம்சார மார்க்கம் என்றாலென்ன?

புருஷனுக்கும் பெண்சாதிக்கும் தேவனால் ஏற்பட்ட ஒரு உடன்படிக்கை, இதிலே அவர்கள் மரண பரியந்தம் சகலத்தையும் பொதுவாக வைத்து ஒருவருக்கொருவர் ஒத்தாசையாய் இருக்க வேண்டும்.

1 மோ. 2, 18; மத். 19, 4—6.

96. இவ்விதமான சம்சார மார்க்கத்தில் உட்பிரவேசிக்கிறவர்கள் தேவனுடைய ஆசீர்வாதத்தை பெறும்படிக்குத் திருச்சபையில் ஏற்பட்டிருக்கும் ஒழுங்கு என்ன?

அவர்கள் கோவிலுக்குப் போய் செர்க்கார் அதிகாரம் பெற்ற குருவால் விவாக மார்க்கத்தில் பிரவேசிக்க வேண்டும்.

97. உண்மையான கிறிஸ்தவர்களுக்கேற்ற சரியான சம்சாரமார்க்கம் எப்படி ஏற்படும்?

புருஷனும் பெண்சாதியும் கட்டாயமின்றி ஒருவரை ஒருவர் சிநேகித்த சிநேகத்தாலே சம்சார மார்க்கத்தில் பிரவேசித்து இதற்கென்று பெற்றோருடைய சம்மதத்தையும் அதிகாரிகளுடைய அங்கீகாரத்தையும் தேவனுடைய ஆசீர்வாதத்தையும் அடைவதால் தான்.

98. அப்படித் தேவ ஆசீர்வாதத்தைத் தேடாமல் புருஷன் பெண்சாதி சேர்க்கார் அங்கீகாரத்தோடு மாத்திரம் முடித்த கலியாணத்தைத் திருச்சபை ஏன் ஒப்புக்கொள்ளாது?

ஏனென்றால் அவர்கள் தேவ வசனத்தையும் திருச்சபை ஒழுங்கையும் அசட்டை பண்ணுகிறார்கள்.

## II. விலக்கு.

99. ஆறாங் கற்பனையில் தேவன் விலக்குகிற தென்ன?

விபசாரம்.

100. சமுசார உடன்படிக்கை எப்படி மீறப்படும்?

புருஷனும் பெண்சாதியும் ஒருத்தருக்கொருத்தர் கொடுத்த வாக்கைக் காப்பாற்றாமல் போவதால் தான்.

ஏரோதும் ஏரோதியாளும் (மத். 14, 3. 4); மத். 5, 32; எபி. 13, 4.

101. விபசாரத்துக்கு ஒத்த பாவங்களேவை?

மனுஷனுடைய சரீரத்தையும் ஆத்துமத்தையும் கெடுக்கிற வேசித்தனமும் முதலிய சகல அசுத்தங்களும் தான்.

1 கொரி. 6, 18. 20; எபே. 5, 3. 4.

## III. விதி.

102. ஆறாங் கற்பனையில் தேவன் விதிக்கிறதென்ன?

நாம் வார்த்தைகளிலேயும் கிரியைகளிலேயும் கற்பும் சுத்தாங்கமுமாய் நடக்க வேண்டுமென்பதே.

103. கற்புள்ளவன் ஆர்?

சுத்த மனசுடையவனும் தன் சரீரத்தையும் ஆத்துமத்தையும் கறைபடுத்தாதவன் தான்.

சங். 51, 12; சுத்த இருதயத்தை எனக்குச் சிருஷ்டியும் பராபரனே, நிலைவரமான ஆவியை என் உள்ளத்தில் புதிதாய் உண்டாக்கும்.

மத். 5, 8; இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள், அதேனென்றால் அவர்கள் பராபரனைத் தரிசிப்பார்கள்.

பிலி. 4, 8; பிரார்த். 189, 1. 7.



104. வார்த்தைகளிலேயும் கிரியைகளிலேயும் சுத்தாங்கமாய் இருக்கிறதார்?

வெட்கத்துக்கும் மானத்துக்கும் அஞ்சி அவைகளுக்கு விரோதமானதை எல்லாம் விலக்குகிறவன் தான்.

லூக். 1, 10; ரோ. 13, 13; 1 கொரி. 15, 33; எபே. 4, 29; 5, 18.

105. சம்சார மார்க்கத்தில் உள்ளவர்களுக்கு விசேஷமாய்ச் சொல்லப் பட்டிருக்கிறதேன்ன?

அவர்கள் ஒருவரை ஒருவர் தேவனாலேயே அருளப்பட்ட உயிர்த்துணையாக எண்ணி ஒருவருக்கொருவர் பட்சத்தையும் சங்கையும் காட்டி வர வேண்டும்.

எபே. 5, 22. 25; பெண்சாதிகளே, கர்த்தருக்குக் கீழ்ப்படிகிறது போல் உங்கள் சுயபுருஷருக்குக் கீழ்ப்படியுங்கள்; 25, புருஷரே உங்கள் பெண்சாதிகளைச் சிநேகியுங்கள், அப்படியே கிறிஸ்துவும் சபையைச் சிநேகித்தார்.

பிரார்த். 12, 3. 7.

## ஏழாங் கற்பனை.

வினா:—ஏழாங் கற்பனை என்ன?

விடை:—களவு செய்யாதிருப்பாயாக.

வினா:—இதன் கருத்து மென்ன?

விடை:—நாம் பராபரனுக்குப் பயந்து அவரைச் சிநேகித்துக்கொண்டு பிறத்தியானுடைய பணத்தையானாலும் சொத்துக்களை என்கிலும் திருடாமலும் அவைகளைக் கள்ள வர்த்தகங்கள் சரக்குகள் முதலானவைகளினால் நமது பாரிசமாக்கிக்கொள்ளாமலும் அவன் சொத்துக்களையும் பிழைப்புகளையும் வர்த்திக்கப் பண்ணிக் காப்பதற்கு உதவியாயிருக்க வேண்டும்.

## I. சொத்து சுதந்தரம்.

106. தேவன் ஏழாங் கற்பனையினால் எதைக் காப்பாற்றச் சித்தமாயிருக்கிறார்?

நாம் ஒவ்வொருவனுக்கும் இவ்வுலகத்தில் அருளின சொத்து சுதந்தரத்தைத்தான்.

தாலந்தைப் பற்றிய உவமை (மத். 24, 14—30); அநீத உக்கிராணக்காரன் (லூக். 16, 1—13); லூக். 12, 42; 1 கொரி. 4, 2.

107. தேவன் மனுஷருக்கு அவர்களுடைய சொத்தை எப்படிப் பங்கிட்டுக் கொடுத்திருக்கிறார்?

சிலருக்குக் கொஞ்சமாகவும் சிலருக்கு அதிகமாகவும் கொடுத்து ஒருவனையும் ஒன்றுமில்லாமல் விடவில்லை.

5 மோ. 15, 4; 1 சா. 2, 7; வாக். 22, 2; 30, 8. 9.

108. தரித்திரமும் செல்வமும் உலகத்தில் ஏன் இருக்க வேண்டும்?

அதனால் மனுஷர் மெய்ப்பாக்கியம் உலகப்பொருட்களின் பெருக்கத்தினால் உண்டாகாதென்றறிந்து ஒருவருக்கொருவர் ஒத்தாசை செய்யும்பொருட்டுத் தான்.

வாக். 13, 7; மத். 4, 4; லூக். 12, 15; 1 பேது. 4, 10.

## II. விலக்கு.

109. தேவன் ஏழாங் கற்பனையில் விலக்குகிறதென்ன?

களவு.

110. களவு செய்து இந்தக் கற்பனையை மீறுகிறதார்?

பிறத்தியானுடைய பணத்தையும் பொருளையும் பலாத்காரமாகவோ, இரகசியமாகவோ அபகரிக்கிறவனும் அதற்கு உதவியாயிருக்கிறவனும் தான்.

ஆகான் (யோசு. 7, 19—26); லூக். 10, 30; யோ. 12, 6.

111. களவுக் கொப்பான பாவங்களைச் செய்கிறதார்?

பிறத்தியானை வியாபாரத்திலும் தொழிலிலும் வேலையிலும் கூலியிலும் ஏமாற்றி வஞ்சனையால் பிழைக்கிறவனெல்லாம்.

அநீத உக்கிராணக்காரன் (லூக். 16, 1—7); சகேயு (லூ. 19, 8); 3 மோ. 19, 35. 36; 5 மோ. 24, 14; 27, 17; சங். 37, 21.

வாக். 11, 1; எரே. 22, 13; 1 தெச. 4, 6.

112. பிறரை வஞ்சித்து ஜீவனம் செய்ய அநேகர் எதனால் ஏவப்படுகிறார்கள்?

உலகப்பொருளைச் சிநேகிக்கும் சிநேகத்தாலும் உலகவாழ்வைத் தேடும் ஆசையினாலும், சோம்பலினாலும், நிர்விசாரத்தினாலும், கஷ்டக்காலத்தில் உண்டாகும் அவநம்பிக்கையினாலும் தான்.



தீமோ. 6, 10; ஏனெனில் பண ஆசை எல்லாத் தீமைகளுக்கும் வேராயிருக்கிறது, அதைச் சிலர் இச்சித்து விசுவாசத்தை விட்டு மோசம் போய் தங்களை வெகு வேதனைகளால் உருவக் குத்தியிருக்கிறார்கள்.

1 பேது. 5, 7; உங்கள் கவலையை எல்லாம் அவர் மேல் எறிந்து விடுங்கள் ஏனெனில் அவர் உங்களுக்காக விசாரிப்பாயிருக்கிறார்.

வாக். 23, 20. 21; 28, 19; மத். 6, 24. 31—33; 1 தீமோ. 6, 6—9.

## III. விதி.

113. தேவன் ஏழாங் கற்பனையில் விதிக்கிறதென்ன?

நாம் பிறத்தியானுடைய சொத்துக்களையும் பிழைப்புகளையும் வர்த்திக்கப் பண்ணிக் காப்பதற்கு உதவியாயிருக்க வேண்டும் என்பதே.

114. அதை நிறைவேற்றுவ தெப்படி?

அவன் கஷ்டப்படாமல் முன்னுக்கு வருவதற்கு நாம் அவனுக்கு நல்ல யோசனை சொல்லி அவசியமானால் சொந்தப்பொருளினாலும் உதவியாயிருப்பதால் தான்.

எபி. 13, 16; ஆனால் நன்மை செய்யவும் தர்ம ஐக்கியமாயிருக்கவும் மறவாதேயுங்கள், ஏனென்றால் இப்படிக்கொத்த பலிகளுக்கு பராபரன் இஷ்டமாய் இருக்கிறார்.

2 கொரி. 9, 6; அவனவன் தன் மனதிலே நியமித்தபடி கொடுக்கக் கடவான்; துக்கத்தினாலே அல்லது கட்டாயத்தினாலே வேண்டாம், ஏனெனில் சந்தோஷமாய்க் கொடுக்கிறவனை பராபரன் சிநேகிக்கிறார்.

5 மோ. 15, 7. 8; 22, 1—4; வாக். 19, 17; மத். 13, 7. 8; பிலி 2, 4; 1 யோ. 3, 17.

115. பிறனுடைய உதவியைத் தேடுகிறவன் முதலில் செய்ய வேண்டியதென்ன?

ஒவ்வொருவனும் முதலில் தானே தன் சொந்தப் பிரயாசையினால் தன் சொத்துச் சுதந்தரத்தை வர்த்திக்கப் பண்ணிக் காப்பாற்ற வேண்டும்.

116. இந்தக் கடமையை நிறைவேற்றுகிறதார்?

தேவனுடைய ஆசீர்வாதத்தை நம்பிச் சுறுசுறுப்பும் ஒழுங்குமுடையவனாய் வீண் செலவு செய்யாமல் ஜீவனம் பண்ணுகிறவன் தான்.

எபே. 4, 28; திருடினவன் இனித் திருடாமல் குறைச்சலுள்ளவனுக்குக் கொடுக்கத் தனக்குண்டாகக் கைகளினால் நல்ல வேலை செய்து உழைக்கக் கடவான்.

2 தெச. 3, 10; ஒருவன் வேலை செய்ய மனதில்லாதிருந்தால் அவன் சாப்பிடவும் வேண்டாமென்கிறதை நாங்கள் உங்களிடத்தில் இருக்கும் போது உங்களுக்குக் கற்பித்து இருக்கிறோம்.

1 தீமோ. 6, 6; போதுமென்ற மனதுடனே கூடிய தெய்வ பக்தியே பெரிய ஆதாயம்.

வாக். 13, 11; யோ. 6, 12; 2 தெச. 3, 10—12.

## எட்டாங் கற்பனை.

வினா:—எட்டாங் கற்பனை என்ன?

விடை:— பிறத்தியானுக்கு விரோதமாகப் பொய்ச்சாட்சி சொல்லாதிருப்பாயாக.

வினா:—இதற்கர்த்த மென்ன?

விடை:— நாம் பராபரனுக்குப் பயந்து அவரைச் சிநேகித்துக்கொண்டு, பிறத்தியானுக்குப் பொய் சொல்லாமலும் இரண்டகம் பண்ணாமலும் அவன்பேரில் பின்புறணி பேசாமலும் அவனுக்கு அவகீர்த்தி வரப் பண்ணாமலும் அவனுக்காகப் பரிந்து பேசி நல்லவைகளைச் சொல்லி எல்லாவற்றையும் நன்மையாக்க வேண்டும்.

### I. நல்ல பெயர்.

117. தேவன் எட்டாங் கற்பனையினால் எதைக் காப்பாற்றச் சித்தமாயிருக்கிறார்?

நம்முடைய கீர்த்தியை அல்லது நல்ல பெயரை.

118. நல்ல பெயர் ஏன் அவ்வளவு அருமையானது?

அதனால் நமது பிறத்தியாருடைய மதிப்பும் நம்பிக்கையும் நமக்கு உண்டாகும். அப்படி உண்டானால் நாம் அவர்கள் நடுவில் சமாதானமாய் ஜீவனம் பண்ணி ஆசீர்வாதத்தோடு உழைக்கக் கூடும்.

வாக். 22, 1; அப். நட. 6, 3;

119. நமது நல்ல பெயரை எப்படிச் சம்பாதித்துக் காப்பாற்றுவோம்?

நாம் நல் நடக்கையாய் நடந்து பொல்லாப்பென்று பிறர் சந்தேகிக்கக் கூடியவைகளையும் விலக்குவதால்.

1 தெச. 5, 22; 1 பேது. 2, 12,



### II. விலக்கு.

120. தேவன் எட்டாங் கற்பனையில் விலக்குகிற தென்ன?

நியாயஸ்தலத்திலும் மற்ற சமயங்களிலும் பிறத்தியானுக்கு விரோதமாகப் பொய்ச் சாட்சி சொல்லுதலே.

நாபோத் (1 இராசா. 21, 13); இயேசுவுக்கு விரோதமான பொய்ச்சாட்சிகள் (மத். 26, 59—61); ஸ்தேவான் (அப். நட. 6, 13. 14); வாக். 12, 17.

121. தின ஜீவியத்தில் இந்தக் கற்பனையை மீறுகிறதார்?

யோசிக்காமலோ பிறத்தியானுக்குத் தீங்கு நினைத்தோ அவனைப் பற்றி இல்லாததைச் சொல்லி இப்படி அவனுடைய நல்ல பெயரைக் கெடுத்துப் பின்புறணி பேசுகிறவர்களும் அவனுக்கு அவகீர்த்தி வரப் பண்ணுகிறவர்களும் அவனை நம்பிக்கைத் துரோகம் பண்ணுகிறவர்களும் தான்.

தெலீலா (நியா. 16, 18); அப்சலோம் (2 சா. 15, 1—4) யூதா (மத். 26, 47—49); வாக். 11, 13; மத். 7, 1—5; லூக். 6, 37. யாக். 4, 11.

122. நாவினால் செய்யப்படும் இந்தப் பாவங்களுக்குக் காரணங்கள் எவை?

குது, கோள் சொல்லும் குணம், பொறாமை, பிறர் அவமானத்துக்குச் சந்தோஷித்தல் என்றிவைகளே.

வாக். 10, 19; எரே. 9, 8; யாக். 1, 19.

123. பிறத்தியானை நஷ்டப்படுத்தாத பொய்யும் பாவம் என்று ஏன் சொல்ல வேண்டும்?

அது சத்தியமுள்ளவராகிய தேவனுக்கு அருவருப்பாயிருந்து மனுஷருக்குள் நம்பிக்கையையும் விசுவாசத்தையும் கெடுக்கிறதினால் தான்.

எபே. 4, 25; ஆனபடியினால் பொய்யைக் களைந்து அவனவன் தனக்கு அடுத்தவனுடனே மெய்யைப் பேசுங்கள் ஏனெனில் ஒருவருக்கொருவர் அவயவங்களாயிருக்கிறோம்.

வாக். 12, 22; 19, 5; யோ. 8, 44.

### III. விதி.

124. தேவன் எட்டாங் கற்பனையில் கற்பிக்கிற தென்ன?

நாம் பிறத்தியானுடைய குற்றங்களைப்பற்றி இரக்கமான தீர்ப்பு சொல்லி அவனைப் பட்சத்தோடு சரிப்படுத்தி அவனிடத்தில் காணப்படும் நற்குணத்தைப் பொறுமையின்றி ஒப்புக்கொண்டு சந்தேகமான சமயங்களில் அவனைப்பற்றி நன்மையானதையே எடுத்துச் சொல்ல வேண்டுமென்பதே.

யோனத்தான் (1 சா. 19, 4); நீக்கோதேமு (யோ. 7, 50. 54); கப்பர்நகூம் தலைவன் (லூக். 7, 4. 5); வாக். 31, 8; மத். 18, 15; கலா. 6, 1; 1 பேது. 4, 8.

125. இப்படிச் செய்ய என்ன சிந்தை வேண்டும்?

அன்போடு கூடிய உண்மையே.

வாக். 10, 12; யோ. 1, 47; 1 கொரி. 13, 6. 7; பிரார்த்.

---

## ஒன்பதாங்கற்பனை.

வினா:—ஒன்பதாம் கற்பனை என்ன?

விடை:—பிறத்தியானுடைய வீட்டை இச்சியாதிருப்பாயாக.

வினா:—இதற்கர்த்தமென்ன?

விடை:—நாம் பராபரனுக்குப் பயந்து அவரைச் சிநேகித்துக்கொண்டு, பிறத்தியானுடைய வீட்டையும் சுதந்தரத்தையும் அடைகிறதற்கு உபாயதந்திரங்களைச் செய்யாமலும், அநியாயத்தை நியாயம்போல் காண்பிக்கிறதினால் அவைகளை அபகரித்துக் கொள்ளாமலும், அவைகள் அவனிடமே இருக்கும்படிபாய்ச் சகாயமும் உபகாரமுஞ் செய்ய வேண்டும்.

---

## பத்தாங்கற்பனை.

வினா:—பத்தாங்கற்பனை என்ன?

விடை:—பிறத்தியானுடைய பெண்சாதியையாகிலும், அவனுடைய வேலைக்காரன் வேலைக்காரியையாகிலும், அவனுடைய ஆடு மாடு கழுதையையென்கிலும், மற்றும் அவனுக்கு உண்டான எதையாகிலும் இச்சியாதிருப்பாயாக.

வினா:—இதற்கர்த்தமென்ன?



விடை:—நாம் பராபரனுக்குப் பயந்து அவரைச் சிநேகித்துக்கொண்டு, பிறத்தியானுடைய மனைவியையாகிலும், பணிவிடைக்காரர்களையாகிலும், மிருகங்களையென்கிலும், பிரியப்பண்ணாமலும், பிடுங்கிக்கொள்ளாமலும், பேதலிக்கப்பண்ணாமலும், எல்லாம் அவனிடமாய் நிலைத்திருந்து, செய்யவேண்டியவைகளைச் செய்யும்படியாய்ப் பிரயாசைப்பட்டு வர வேண்டும்.

### I. விலக்கு.

126. இந்த இரண்டு கற்பனைகளிலும் விலக்கப்பட்டிருக்கிறதென்ன?

பிறத்தியான்மேல் பொறுமைகொண்டு தங்கயத்தைத்தேடித் தேவன் கொடுக்காததை விரும்புகிற இருதயத்தின் பொல்லாத ஆசையும் கெட்ட இச்சையுமே.

வாக். 21, 10; ரோ. 7, 7.

127. இந்தப் பொல்லாத குணத்தின் பெயரென்ன?

தற்சிநேகம்.

128. தற்சிநேகத்திற்கு இடங்கொடுத்தால் அதிலிருந்து பிறக்கிறதென்ன?

பொல்லாத கிரியை.

1 மோ. 4, 7; யாக். 1, 14. 15.

129. அர்த்தத்தில் லூத்தர் வற்புறுத்துகிற பொல்லாத கிரியைகளேவை?

உபாயதந்திரங்களைச் செய்து அநியாயத்தை நியாயம்போல் காண்பித்து பிறத்தியானுடைய வீட்டையும் சுதந்தரத்தையும் அடைவதற்கும் அவனுடைய பெண்சாதியையும் வேலைக்காரரையும் ஆடுமாடுகளையும் பேதலிக்கப்பண்ணுவதற்கும் முயற்சி செய்வதே.

1 மோ. 25, 1; 1 ராஜ. 21, 2; 2 சா. 15, 1.

### II. விதி.

இந்த இரண்டு கற்பனைகளிலும் கட்டளையிடப்பட்டதென்ன?

நாம் நல்ல எண்ணங்களைத் தற்சிநேகமில்லாத இருதயத்திலே உண்ணிப் பொல்லாத ஆசைகளையும் இச்சைகளையும் அடக்க வேண்டுமென்பதே.

கலா. 5, 24.

130. அர்த்தத்தின்படியே இந்தக் கனத்தை நாம் கிறிஸ்தியானுக்குக் காட்டுவதெப்படி?

*அவன் தன் வீட்டையும் சுதந்தரத்தையும் காப்பாற்றுவதில் அவனுக்குச் சகாயமும் உபகாரமும் செய்து அவனைச் சேர்ந்தவர்கள் அவனிடமாய் நிலைத்திருந்து செய்ய வேண்டியவைகளைச் செய்யும்படியாய்ப் பிரயாசைப்படுவதனாலேயே.*

பிலே. 13.

131. இந்தக் கடைசி இரண்டு கற்பனைகளும் வற்புறுத்தும் முக்கிய போதகமென்ன?

*தேவன் இருதயத்தைப் பார்க்கிறாரென்றும் சுத்த இருதயத்தையுடையவன் மாத்திரம் அவருக்கு முன்பாக நிற்கவும் அவருடைய நியாயபிரமாணத்தைக் கிறிஸ்துவின் மாதிரியின்படியே கைக்கொள்ளவும் கூடியவனாயிருக்கிறானென்றும் இக்கற்பனைகள் போதிக்கின்றன.*

1 சா. 16, 7; வாக். 4, 23.

---

## பத்துக் கற்பனைகளின் முடிவான வார்த்தை.

வினா:—இந்தப் பத்துக் கற்பனைகளுக்காகவும் கர்த்தர் திருவுளம்பற்றின் வார்த்தைகளென்ன?

*விடை:—உன் தேவனாகிய கர்த்தராயிருக்கிற நாம் எரிவந்தமுள்ள தேவனாயிருந்து நம்மைப் பகைக்கிறவர்களுக்குள்ளே பிதாக்கள் செய்த அநியாயத்தைப் பிள்ளைகளிடத்தில் மூன்று நாலு தலைமுறை மட்டும் விசாரிக்கிறவராயிருக்கிறோம். ஆனால் நம்மைச் சிநேகித்துக்கொண்டு நம்முடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர்களுக்கு ஆயிரம் தலைமுறை மட்டும் நன்மை செய்து கொண்டுவருகிறோம் என்று திருவுளம் பற்றினார்.*

வினா:—இதற்கர்த்தமென்ன?

*விடை:—பராபரன் தாம் அருளிச்செய்த இந்தப் பத்துக் கற்பனைகளையும் மீறி நடக்கிற எல்லாரையும் தண்டிப்போமென்று பயமுறுத்துகிறார். ஆனபடியினாலே நாம் அவருடைய கோபத்திற்குப் பயந்து இந்தக் கற்பனைகளுக்கு விரோதமாக நடவாமலிருக்கக் கடவோம். ஆனால் இந்தக் கற்பனைகளைக் கைக்கொள்ளுகிற எல்லாருக்கும் அவர் கிருபையும் சகல நன்மையும் செய்வோம் என்று வார்த்தைப்பாடு கொடுக்கிறார் ஆகையால் நாம் அவரைச் சிநேகித்துக்கொண்டு அவர்பேரிலே நம்பிக்கையாயிருந்து சந்தோஷமாக அவருடைய கற்பனைகளின்படியே நடக்கக் கடவோம்.*



132. இந்த முடிவான வார்த்தைகளினாலே தேவன் தமது நியாயப் பிரமாணத்தை எப்படித் திடப்படுத்துகிறார்?

*பயமுறுத்தலினாலும் வாக்குத்தத்தத்தினாலும் தான்.*

5 மோ. 11, 26—28.

133. அதனால் நாம் அறிந்துகொள்ளுகிறதென்ன?

*அவர் தமது கற்பனைகளை நிறைவேற்ற வேண்டும் என்று கண்டிப்பாயிருக்கிற எரிவந்தமுள்ள தேவன் என்பது.*

5 மோ. 4, 24; சங். 5, 5.

### I. பயமுறுத்தல்.

134. தேவன் யாரைப் பயமுறுத்துகிறார்?

*தம்மைப் பகைத்துத் தமது கற்பனைகளை மீறுகிறவர்களைத் தான்.*

135. அப்படிப்பட்ட மீறுதலுக்கு என்ன பெயர்?

*பாவம்.*

தானி. 9, 5; 1 யோ. 3, 4.

136. நாம் எத்தனைவிதமாய் தேவனுடைய கற்பனைகளை மீறலாம்?

*நினைவுகளினாலும் வார்த்தைகளினாலும் கிரியைகளினாலும் செய்யவேண்டியதைச் செய்யாமல் விட்டும் செய்யவேண்டாததைச் செய்வதினாலும் அறிந்தும் அறியாமலும் துணிகரமாயும் பலவீனத்தினாலும் யோசனையின்மையினாலும்.*

யாக். 4, 17; இப்போதும் ஒருவன் நன்மை செய்ய அறிந்தவனாயிருந்தும் அதைச் செய்யாதே போனால் அவனுக்குப் பாவமாயிருக்கிறது.

பேதுரு (மத். 26, 69—73); ஆசாரியனும் லேவியனும் (லூக். 10, 31. 32); யூதா (லூக். 22, 3—6); சங். 19, 13; மத். 36, 41; லூக். 12, 47. 48; எபி. 10, 26. 27.

137. எல்லாப் பாவமும் எதிலிருந்து பிறக்கும்?

*நம்மோடு கூடப் பிறந்த தேவனைப் பகைக்கும் பகையிலிருந்தும் உலகத்தை சிநேகிக்கும் சிநேகத்திலிருந்தும் தான்.*

மத். 5, 19; ரோ. 7, 14. 18—20; 8, 7. 8; 1 யோ. 2, 15—17.

138. நம்மோடு பிறந்த இந்தத் தாறுமாறான குணத்திற்குப் பெயர் என்ன?

ஜென்மப்பாவம்.

1 மோ. 8, 21; அப்போது கர்த்தர் தம்முடைய இருதயத்திலே சொன்னதாவது நாம் இனிப் பூமியை மனுஷன் நிமித்தமாகத் திரும்பச் சபியோம் ஏனெனில் மனுஷனுடைய இருதயத்தின் தோற்றுதல் அவன் சிறு வயது துவக்கிப் பொல்லாததாயிருக்கிறது. இனித் திரும்ப நாம் செய்ததுபோலே எல்லாச்சீவாத்துமாவையும் சங்கரியோம் என்றார்.

யோ. 3, 6; மாமிசத்தினால் பிறந்தது மாமிசமாய் இருக்கிறது ஆவியினால் பிறந்தது ஆவியாயிருக்கிறது.

ரோ. 3, 23; எல்லாரும் பாவம் செய்து பராபரனுடைய மகிமையற்றவர்களாயிருக்கிறார்கள்.

பிரார்த். 151, 1.

139. தேவன் தமது கற்பனைகளை மீறுகிறவர்களை எப்படிப் பயமுறுத்துகிறார்?

அவர்களுடைய பாவத்தை விசாரித்துத் தண்டிப்போமென்று சொல்லுகிறார்.

வாக். 14, 34; எரே. 2, 19; கலா. 8, 10; 6, 7.

140. தேவன் பாவிகளை எப்படித் தண்டிக்கிறார்?

அவர்களுடைய மனச்சாட்சியால் அவர்களை வாதித்து அவர்களை இம்மையில் துன்பப்படுத்தி மறுமையில் நித்தியகாலமாய் வேதனைக்குட்படுத்துவதால் தான்.

ரோ. 6, 23; ஏனென்றால் பாவத்தின் சம்பளம் மரணம்; பராபரனுடைய கிருபை வரமோவெனில் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசு மூலமாய் வரும் நித்திய ஜீவன்.

ஆதாம். ஏவாள் (1 மோ. 3, 7—10. 17—19); ஜலப்பிரளயம் (1 மோ. 6—7); சோதோம் கொமோரா (1 மோ. 19, 24. 25); செல்வன் (லூக். 16, 23); எருசலேம் (லூக். 19, 41–44); ஏசா. 48, 22; மத். 25, 46; யோ. 8, 34; ரோ. 2, 6. 8. 9.

141. பூமியில் அவருடைய தண்டனை எதுவரையில் செல்லும்?





மூன்றும் நாலாம் தலைமுறை மட்டும் தான், அப்படிப் பிள்ளைகளும் பிள்ளைகளின் பிள்ளைகளும் தகப்பன்மாருடைய பாவத்தினால் துன்பமடைவார்கள்.

சவுலுடைய குடும்பம் (1 சா. 15, 28; 31, 2); எரோபெயாம் (1 இரா. 15, 29); ஆகாப் (2 இரா. 10, 11); எரே. புலம். 5, 7.

142. தேவனுடைய இந்தப் பயங்கரமான தண்டனை நம்மை எதற்கு ஏவ வேண்டும்?

நாம் அவருடைய கோபத்துக்குப் பயந்து இந்தக் கற்பனைகளுக்கு விரோதமாக நடவாமலிருப்பதற்கு.

எபி. 10, 30. 31;

## II. வாக்குத்தத்தம்.

143, இந்த வாக்குத்தத்தம் யாருக்குக் கொடுக்கப்பட்டது?

பராபரனைச் சிநேகித்து அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர்களுக்குத் தான்.

1[illegible] பராபரன் அவர்களுக்கு வாக்களிக்கிறதென்ன?

ஆயிரம் தலைமுறைமட்டும் அதாவது அவர்களுடைய கடைசி சந்தானம்வரையில் இருமையும் [illegible] நன்மைகளும் தான்.

1 தீமோ. 4, 8; ஏனெனில் சரீர அப்பியாசம் அற்பப் பிரயோசனமுள்ளது. தேவபக்தியோ எல்லாவற்றிற்கும் பிரயோசனமாயிருந்து இச்சீவனுக்கும் வரும் சீவனுக்கும் வாக்குத்தத்தம் பெற்றிருக்கிறது.

ஆபிரகாமுடைய ஆசீர்வாதம் (1 மோ. 12, 2. 3); தாவீதின் சந்ததிகள் (2 சா. 7, 12—14; 1 இரா. 11, 12. 13).

சங். 5, 13; 54, 12; 103, 17. 18; லூக். 10, 28; ரோ. 2, 6. 7.

145. இந்த வாக்குத்தத்தத்தினால் நாம் அறிந்துகொள்ளுகிறதென்ன?

தண்டிப்பதைப் பார்க்கிலும் நன்மைசெய்வது பராபரனுக்கு அதிகப் பிரியம் என்பது.

146. இதை யறிந்த நாம் எதற்கு ஏவப்படுகிறோம்?

நாம் அவரைச் சிநேகித்துக்கொண்டு அவர்பேரிலே நம்பிக்கையாயிருந்து சந்தோஷமாக அவருடைய கற்பனைகளின்படிச் செய்வதற்குத் தான்.

சங். 37, 37; 1 யோ. 4, 19; பிரார்த். 182, 6.

## III. நியாயப் பிரமாணத்தின் சரியான உபயோகம்.

147. ஆகையால் நாம் தேவனுடைய நியாயப் பிரமாணத்தை எப்படி மதித்து உபயோகிப்போம்?

*தேவனுக்கு விரோதமான இச்சைகளையும் செய்கைகளையும் தடுக்கும் தாழ்ப்பாளாகவும் நமது பாவக்குற்றங்களைக் காண்பிக்கும் கண்ணாடியாகவும் நமது நடக்கைக்கு நூலாகவும் தான்.*

1 தீமோ. 1, 8—10; ரோ. 3, 20; மீகா. 6, 8; பிரார்த். 123, 11.

148. முதலாம் ஆதி நியாயத்துக்கும் மற்ற ஆதி நியாயங்களுக்கும் வித்தியாசம் என்ன?

*பராபரன் நம்மிடத்தில் கேட்கிறது, இன்னதென்று முதலாம் ஆதி நியாயத்தில் சொல்லியிருக்க அவர் கேட்கிறதை நாம் செய்வதற்கு நமக்கு எதனால் புத்தியும் பெலனும் வரும் என்பதை மற்ற ஆதிநியாயங்கள் காட்டும். (அதாவது விசுவாசத்தால், ஜெபத்தால், சாக்கிரமெந்துகளால்).*

---



# இரண்டாம் ஆதி நியாயம்.

---

## விசுவாசப்பிரமாணம்.

### முகவுரை.

149. பராபரனை விசுவாசிப்பது என்றால் என்ன?

*அவர் மேல் முழு நம்பிக்கையாயிருப்பது தான்.*

*எபி.* 11, 1; *விசுவாசத்தினாலே ஈசாக்கு யாக்கோபையும் ஏசாவையும் வருங்காரியங்களைக் குறித்து ஆசீர்வதித்தான்.*

*விசுவாசிகளுடைய தகப்பன் ஆபிரகாம்* (1 *மோ.* 12, 1—7; *ரோ.* 4, 17—21; *எபி.* 11, 17—19); *விசுவாசத்தின் சாலிகள்* (*எபி.* 11), *யோ.* 20, 29; 2 *தீமோ.* 1, 12.

150. இப்படிப்பட்ட நம்பிக்கை எதனாலுண்டாகும்?

*பராபரனுடைய கிருபையுள்ள சித்தத்தையும் நமது இரட்சிப்புக்கென்று அவர் செய்த மகத்துவமுள்ள கிரியைகளையும் தெரிவிக்கிற அவருடைய திருவசனத்தினால் தான்.*

*அத்தேனே பட்டணத்தில் பவுல் அப்போஸ்தலன் செய்த பிரசங்கம்* (*அப். நட.* 17, 22—31); *லூக்.* 16, 19—31; *ரோ.* 10, 13—17; *எபி.* 11, 6.

151. தேவ வசனம் தேவனைப்பற்றிச் சொல்லுகிறதை எவ்விடத்தில் சுருக்கமாய்க் கண்டு பிடிக்கலாம்?

*அப்போஸ்தலர் விசுவாசப்பிரமாணத்திலே. அந்த அறிக்கையின் பேரில் எல்லாக்கிறிஸ்தவர்களும் ஞானஸ்நானம் பெற்றிருக்கிறார்கள், அதினால் அதற்குக் கிறிஸ்தவ விசுவாசப் பிரமாணமென்கிற பெயருமுண்டு.*

152. வினா:—விசுவாசப் பிரமாணமாவதென்ன?

*விடை:—பரலோகத்தையும் பூலோகத்தையும் படைத்த சர்வத்திற்கும் வல்ல பிதாவாகிய பராபரனை விசுவாசிக்கிறேன்.*

*அவருடைய ஒன்றான குமாரனாகிய நம்முடைய நாதர் இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிறேன் இவர் பரிசுத்த ஆவியினால் கர்ப்பமாக உற்பவித்து கன்னிமரியாளிடத்தினின்று பிறந்து பொந்தியு பிலாத்து என்கிறவன் கீழ்ப் பாடுபட்டு சிலுவையில்*

அறைந்து மரித்தடக்கப்பட்டார். பாதாளங்களில் இறங்கி மூன்றாம் நாள் மரித்தோரிடத்திலிருந்து உயிர்த்தெழுந்தருளினார். பரமண்டலங்களுக்கு ஏறி சர்வத்திற்கும் வல்ல பிதாவாகிய பராபரனுடைய வலது பாரிசத்திலிருக்கிறார். அவ்விடத்திலிருந்து சீவனுள்ளோரையும் மரித்தோரையும் நடுத்தீர்க்க வருவார்.

பரிசுத்த ஆவியானவரை விசுவாசிக்கிறேன். பொதுவான பரிசுத்த சபையும் பரிசுத்தவான்களுடைய ஐக்கியமும் பாவமன்னிப்பும், மாமிச உயிர்த்தெழுதலும், நித்திய சீவனும் உண்டென்று விசுவாசிக்கிறேன்.

153. இது அப்போஸ்தலர் விசுவாசப் பிரமாணமென்று ஏன் சொல்லப்படுகிறது?

அது அப்போஸ்தலர் காலம் முதல் ஞானஸ்நானம் பெற விரும்புகிறவர்களால் அறிக்கையிடப்பட்டு அப்போஸ்தலருடைய போதகத்தைச் சுருக்கமாய் காட்டுவதால் தான்.

154. அதிலே எத்தனை பங்குகள் உண்டு?

மூன்று. 1. சிருஷ்டிப்பைப் பற்றியது.
2. இரட்சிப்பைப் பற்றியது.
3. பரிசுத்தமாக்குதலைப் பற்றியது.

155. ஒவ்வொரு பிரிவிலும் விசுவாசிக்கிறேன் என்று ஏன் சொல்ல வேண்டும்?

ஒவ்வொரு மனுஷனும் தனக்கென்று தான் விசுவாசிப்பது அவசியம்; அந்நியருடைய விசுவாசமல்ல சொந்த விசுவாசமே இரட்சிக்கும்.

மத். 25, 8. 9.

---

## முதலாம் பிரிவு,

### சிருஷ்டிப்பைப் பற்றியது.

வினா:—விசுவாசப் பிரமாணத்தின் முதலாம் பிரிவென்ன?

விடை:—பரலோகத்தையும் பூலோகத்தையும் படைத்த சர்வத்திற்கும் வல்ல பிதாவாகிய பராபரனை விசுவாசிக்கிறேன்.

வினா:—இதற்கர்த்த மென்ன?



THE REGISTRAR



விடை:—பராபரன் என்னையும் சகல வஸ்துக்களையும் உண்டாக்கி எனக்குச் சரீரத்தையும் ஆத்துமாவையும் கண் காது முதலான சகல அவயவங்களையும் புத்தியையும் சகல இந்திரியங்களையும் அளித்து இற்றை வரைக்கும் காத்து நடத்தி வருகிறார் என்று விசுவாசிக்கிறேன். அல்லாமலும் என் சரீரத்துக்குஞ் சீவனுக்கும் வேண்டிய சகல ஆகாரமாகிய அன்ன வஸ்திரம் பிழைப்புத்தொழில் பெண்சாதி பிள்ளை வீடுவாசல் ஆடுமாடு நிலமுதலிய சகல ஆஸ்திகளையும் அவர் எனக்குக் கட்டளையிட்டு என்னை அநுதினமும் பரிபூரணமாகப் பராமரித்து, சகல மோசங்களுக்கும் என்னை மறைத்து, சகல பொல்லாங்குகளுக்கும் தற்காத்து இரட்சித்து வருகிறாரென்று விசுவாசிக்கிறேன். அவர் இவை எல்லாவற்றையும் பிதாவடைவான கிருபாகடாட்சத்தினாலேயுஞ் சுத்த தயையினாலேயும் யாதொரு புண்ணியமும் பாத்திரமும் இல்லாத எனக்குச் செய்துகொண்டுவருகிறார். நானோவெனில் இவை எல்லாவற்றிற்காகவும் நன்றியறிந்தவனாய் அவரைத் தோத்தரிக்கவும் அவருக்கு ஊழியஞ் செய்து கீழ்படிந்து நடக்கவுங் கடனாளியாயிருக்கிறேன். இது உண்மையான வார்த்தை.

### I. பிதாவாகிய பராபரன்.

156. முதலாம் பிரிவின்படி யாரை விசுவாசிக்கிறாய்?

வானத்தையும் பூமியையும் உண்டாக்கின சர்வ வல்லமையுள்ள பிதாவாகிய பராபரனை.

157. அவரை ஏன் பிதா என்று அழைக்கிறோம்?

அவர் நம்மைச் சிருஷ்டித்து இயேசுகிறிஸ்துவினால் நம்மைத் தமக்கு பிள்ளைகளாக்கிக்கொண்டார்.

கலா. 3, 26; எல்லாருங் கிறிஸ்து இயேசுவைப்பற்றும் விசுவாசத்தினாலே பராபரனுடைய பிள்ளைகளாயிருக்கிறீர்கள்.

1 யோ. 3, 1; நாம் பராபரனுடைய பிள்ளைகளென்று அழைக்கப்படுவதிலே பிதா நமக்கு எத்தனை பெரிய சிநேகத்தை அருளினார் என்று பாருங்கள். இது நிமித்தம் லோகம் நம்மை அறியாது, ஏனெனில் அது அவரை அறிந்ததில்லை.

மத். 1, 27; யோ. 1, 18; 14, 6; 1 யோ. 4, 9.

158. இந்தப் பிதா சர்வ வல்லவர் என்று ஏன் சொல்லுகிறோம்?

அவர் எல்லாவற்றிற்கும் ஆண்டவராயிருந்து, தாம் விரும்புகிறதை எல்லாம் செய்யக்கூடியவராயிருக்கிறார்.

1 மோ. 17, 1; 1 நாளா. 29, 11. 12; லூக். 1, 37.

## II. பிதாவாகிய பராபரனுடைய கிரியைகள்:— சிருஷ்டிப்பும் பராமரிப்பும்.

159. பராபரன் எதினால் தமது சர்வவல்லமையைக் காட்டியிருக்கிறார்?

*வானத்தையும் பூமியையும் உண்டாகினதால் தான்.*

ரோ. 1, 19; அபி. 4, 11.

160. பராபரனுடைய வசனம் உலகத்தின் சிருஷ்டிப்பைப்பற்றி என்ன சொல்லுகிறது?

*பராபரன் காணப்படுகிறதும் காணப்படாததுமான எல்லாவற்றையும் தமது வார்த்தையால் உண்டாக்கி எல்லா சிருஷ்டிகளுடைய உற்பத்தியையும், தன்மையையும், நோக்கத்தையும் நியமித்தார் என்கிறது.*

சங். 33, 9; என்னெனில் அவர் சொல்ல ஆகும் அவர் கட்டளையிட நிற்கும்.

1 மோ. 1; சங். 33, 6; சங். 104; 115, 3; கொலோ. 1, 16; எபி. 11, 3.

161. சத்தியவேதத்தில் காணப்படாத எந்த சிருஷ்டிகளைப் பற்றிச் சொல்லியிருக்கிறது?

*தேவதூதர்களைப் பற்றித் தான், இவர்கள் பராபரனுடைய சமுகத்திலும் உலகத்திலும் அவருக்கு ஊழியஞ் செய்கிற ஆவிகள்.*

ஏசா. 6, 1—3; மத். 18, 10; லூக். 15, 10; எபி. 1, 14.

162. காணப்படுகிற எல்லாச் சிருஷ்டிகளிலும் மேன்மையான சிருஷ்டி யார்?

*பராபரனுடைய சாயலாகச் சிருஷ்டிக்கப்பட்டு அவருடைய ஐக்கியத்துக்கென்றும் மற்றெல்லா வஸ்துக்களின் ஆளுகைக்கென்றும் குறிக்கப்பட்ட மனிதன் தான்.*

1 மோ. 1, 26—28; அப். நட. 17, 28. 29.

163. பாவத்தில் விழுந்த மனிதனிடத்தில் பராபரனுடைய சாயல் இன்னும் எதனால் விளங்கும்?

*யோசிக்கவும் தீர்மானிக்கவும் பராபரனுடைய வசனத்தை அறியவும் கூடிய புத்தியுள்ள மனசினாலே தான்.*



164. ஞானோபதேசம் உன்னுடைய உற்பத்தியைப் பற்றிச் சொல்லுகிறதென்ன?

*பராபரன் என்னைச் சிருஷ்டித்து எனக்குச் சரீரத்தையும் ஆத்துமத்தையும் கண் காது முதலான சகல அவயவங்களையும் புத்தியையும் சகல இந்திரியங்களையும் அளித்தார் என்பதே.*

சங். 139, 14; பிரார்த். 278, 3; 283, 5.

165. இன்றைக்கு நீ சுகத்தோடே சீவனோடேயும் இருந்தால் அது யாருடைய தயவு?

*என்னையும் உலகத்தையும் சிருஷ்டித்துப் பராமரித்துவருகிற பரமபிதாவின் தயவு தான்.*

1 மோ. 8, 22; யோபு. 10, 12; பிரார்த். 288, 3.

166. அவர் உன்னை எப்படிப் பராமரித்து வருகிறார்?

*என்னுடைய ஜீவியத்துக்கு வேண்டிய சகல நன்மைகளையுங் கொடுத்துச் சகல மோசங்களுக்கும் என்னை மறைத்துச் சகல பொல்லாங்குகளுக்கும் என்னைத் தற்காத்து இரட்சிக்கிறதனால் தான்.*

167. அவர் அளிக்கும் நன்மைகள் எவை?

*அன்னவஸ்திரம் பிழைப்புத்தொழில் பெண்சாதி பிள்ளை வீடு வாசல் ஆடு மாடு முதலியவைகள் தான்,*

சங். 104, 13—15; சங். 127; 128; பிரார்த். 99, 6.

168. ஆகலால் சர்வ வல்லவராகிய சிருஷ்டிகரை என்ன பெயர் சொல்லி அழைக்கலாம்?

*என் சரீரத்திற்கும் ஜீவனுக்கும் வேண்டிய சகலத்தையும் கொடுக்கிற என் உண்மையான உபகாரி.*

சங். 37, 25; நான் இளைஞனாயிருந்தேன், முதிர்வயதும் ஆனேன், ஆனால் நீதிமான் கைவிடப்பட்டதையும் அல்லது அவன் வித்து அப்பம் தேடுகிறதையும் கண்டேன் இல்லை.

சங். 145, 15. 16; மத். 6, 25—33.

169. நீ மோசங்களுக்கும் ஆபத்துக்களுக்கும் ஏன் பயப்படத் தேவையில்லை?

*இவைகள் என்னை அணுகாதபடி என் பராபரன் என்னைக் காப்பாற்றுகிறார். இவை*

கள் அனுப்புகிறாலும் என்னுடைய நன்மைக்கென்றே பலிக்கும்படி செய்வார் என்றறிவேன்.

1 மோ. 50, 20; நீங்கள் எனக்கு விரோதமாகப் பொல்லாத நினைவாயிருந்தீர்கள் பராபரனோ இன்று சனத்தை உயிரோடே காக்க இந்நாள் வரைக்கும் இருக்கிறபடி செய்யும்படிக்கு அதை நன்மையாக நினைத்தார்.

எரே. 29, 11; எனெனில் நீங்கள் காத்திருக்கும் முடிவை உங்களுக்குக் கொடுக்கும்படி நாம் உங்கள்பேரிலே நினைத்திருக்கிற நினைவுகளை நாம் அறிவோமென்று கர்த்தர் சொல்லுகிறார். அவைகள் தீமைக்கு அல்ல சமாதானத்துக் கடுத்த நினைவுகள் தானே.

மத். 10, 29. 30; ஒரு காசுக்கு இரண்டு அடைக்கலான் குருவிகள் விற்கிறது அல்லவோ? என்றாலும் உங்கள் பிதாவை யன்றி அவைகளிலொன்றும் தரையிலே விழாது. உங்கள் தலையின் சகல மயிர்களும் எண்ணப்பட்டிருக்கிறது.

ரோ. 8, 28; தீர்மானத்தின்படியே அழைக்கப்பட்டிருந்து பராபரனைச் சிநேகிக்கிறவர்களுக்கு எல்லாக் காரியங்களும் நன்மைக்கு உதவி செய்கிறதென்று அறிந்திருக்கிறோம்.

சங். 23, 4; சங். 121; பிரார்த். 246; 99, 7. 8.

## III. நன்றியறிதலின் கடமை.

170. இப்படி உனக்காகக் கவலைப்படுவதற்குப் பராபரன் எதனாலே ஏவப்படுகிறார்?

என்னுடைய புண்ணியத்தினாலும் பாத்திரத்தினாலும் அல்ல தமது பிதாவடைவான கிருபாகடாட்சத்தினாலும் சுத்த தயவினாலும் தான்.

1 மோ. 32, 10; தேவரீர் உமது அடியானுக்குச் செய்துவந்த எல்லாக் கிருபைகளுக்கும் எல்லா உண்மைக்கும் நான் எம்மாத்திரம், எனெனில் நான் என் கோலும் கையுமாய் இந்த யோர்தானைக் கடந்து போனேன், இப்போது நானோவெனில் இரண்டு பரிவாரங்களை யுடையவனானேன் என்றான்.

சங். 103, 8; கர்த்தர் மன உருக்கமும் இரக்கமும் நீண்ட சாந்தமும் மிகுந்த கிருபையுமுள்ளவர்.

எரே. புலம், 3, 22; பிரார்த். 281, 3.

171. இதற்காக நீ அவருக்குச் செய்ய வேண்டியது என்ன?



நான் இவை எல்லாவற்றிற்காகவும் நன்றியறிந்தவனாய் அவரை இஸ்தோத்தரிக்கவும் அவருக்கு ஊழியம் செய்து கீழ்ப்படிந்து நடக்கவும் கடனாளியாயிருக்கிறேன்.

சங். 50, 14; சங். 103, 2; 118, 1; ரோ. 12, 1; பிரார்த். 201, 2.

172. இது உண்மையான வார்த்தை என்பதற்கு அர்த்தம் என்ன?

நான் அறிக்கையிட்டதை விசுவாசித்துச் செய்ய வேண்டியதைச் செய்வேன் என்பதே.

---

## இரண்டாம் பிரிவு.

173. இரண்டாம் பிரிவின் சாரமும் முழுக்கிறிஸ்தவ திருச்சபையின் ஆதியறிக்கையும் என்ன?

என்னை இரட்சித்த இயேசுகிறிஸ்து என் கர்த்தர் என்று விசுவாசிக்கிறேன் என்பதே.

யோ. 20, 28; பிலி. 2, 11.

174. ஏன் இரட்சிப்பு நமக்குத் தேவை?

எனென்றால் நாம் சுபாவத்தால் கெட்டுப்போய் சபிக்கப்பட்டவர்களாய்ப் பராபரனை விட்டுத் தூரப்பட்டுப் பாவம், மரணம், பிசாசு என்றிவைகளுக்கு அடிமைகளானோம்.

லூ. 15; லூ. 19, 10; எபே. 2, 3. 12.

175. நம்முடைய நாதர் இயேசுகிறிஸ்து யார்?

அவர் அநாதியாய்ப் பிதாவினிடத்தில் பிறந்த மெய்யான தேவனும் கன்னிமரியாளிடத்தில் பிறந்த மெய்யான மனுஷனுமாயிருக்கிறார்.

யோ. 3, 16; மத். 11, 27; யோ. 1, 1—3.

176. ஆகையால் அவரிடத்தில் எந்தப் பெரிய இரகசியத்தைப் பார்க்கிறோம்?

அவருக்குள் தெய்வீக சுபாவமும் மனுஷீக சுபாவமும் அதிசயமாயும் பிரிக்கக் கூடாத வண்ணமாயும் இணைக்கப்பட்டிருக்கின்றன.

யோ. 14, 9; கொ. 2, 9; பிரார்த். 235, 2.

177. தேவகுமாரன் மனுஷ சுபாவத்தை எடுத்துக்கொண்ட காரணம் என்ன?

*தாம் தேவனுக்கும் மனுஷருக்கும் சரியான மத்தியஸ்தன் ஆகும்படிக்குத்தான்.*

சங். 49, 8; 1 தீமோ. 2, 5. 6; எபி. 2, 14. 17.

178. விசுவாசப்பிரமாணத்தில் அவருடைய மனுஷ அவதாரத்தைப்பற்றி என்ன சொல்லப்பட்டிருக்கிறது?

*அவர் பரிசுத்த ஆவியினால் கர்ப்பமாக உற்பவித்துக் கன்னிமரியாளிடத்தில் பிறந்தார்.*

லூக். 1, 26—35; கலா. 4, 4; கிறிஸ்து பிறப்பின் பாட்டுகள்.

179. இந்த வார்த்தைகளுக்கு அர்த்தமென்ன?

*அவருடைய பிறப்பு தேவாவியினால் உண்டாகிப் பரிசுத்தமாயிருந்ததால் அவர் பாவமில்லாத மெய்யான மனுஷனாகப் பிறந்தார் என்பதே.*

பிலி. 2, 7; யோ. 8, 46.

180. அவர் சுன்னத்து பண்ணப்படும்போது பெற்றுக்கொண்ட இயேசு என்கிற நாமத்திற்கு அர்த்தமென்ன?

*ஒத்தாசை செய்கிறவர், இரட்சகர், மீட்பர், மோட்சப்பாக்கியத்தை கொடுக்கிறவர் என்பதே.*

மத். 1, 21; லூக். 2, 21.

181. வேதத்தில் அவருக்குக் கொடுக்கப்பட்ட கிறிஸ்து அல்லது மேசியா என்கிற பெயருக்கு அர்த்தம் என்ன?

*இரட்சிப்பை உண்டு பண்ண அபிஷேகம் பண்ணப்பட்டவர் என்பதே.*

மத். 11, 3; 16, 16; யோ. 20, 31; அப். 2, 36.

182. இயேசு கிறிஸ்து எப்போ இரட்சிப்பின் கிரியையைத் தொடங்கினார்?

*யோர்தான் நதியில் ஞானஸ்நானம் பெற்றபோது.*

மத். 3, 13—17.

183. அந்தக் கிரியையை அவர் எவ்விதமாய் நடப்பித்தார்?

*அவர் முதல்முதல் செய்கையிலும் வார்த்தையிலும் வல்லமையுள்ள தீர்க்கதரிசியாய்த் தமது பரமபிதாவுக்குப் பரிபூரணமாகக் கீழ்படிந்து யாமிசத்தின்படித் தமக்குச் சகோதரரான மனுஷர் பேரில் இரங்கி அவர்களுக்கு ஊழியம் செய்து போதகம் பண்ணி அற்புதங்களைச் செய்தார்.*



மத். 20, 27; மத். 24, 35.

184. அவர் செய்த போதகமென்ன?

*அவர் தம்மைப் பற்றியும் தம்மால் வருகிற வானராக்கியத்தைப் பற்றியும் சாட்சி கொடுத்தார்.*

யோ. 8, 12; யோ. 14, 6.

185. அவர் செய்த அற்புதங்களின் நோக்கமென்ன?

*அவர் தாம் தேவனால் அனுப்பப்பட்டவரென்றும் பிசாசின் அதிகாரத்துக்கும் காற்று முதலிய பூதியங்களுக்கும் ஆண்டவரென்றும் அவைகளால் காண்பித்தார்.*

மத். 9, 6; 11, 4. 5.

186. அவர் இரண்டாவதாக இரட்சணிய வேலையை எதனால் முடித்தார்?

*குற்றமில்லாமல் பட்ட பாடுகளினாலும் மரணத்தினாலும் தான்.*

187. அவர் பூமியில் சஞ்சரிக்கும்போது அனுபவித்த பாடுகளென்ன?

*அவர் ஊழியக்காரன் ரூபமெடுத்து ஏழையும் நீசனுமாகிச் சீஷருடைய மந்த புத்தியினாலும், சத்துருக்களுடைய பகையினாலும் சனத்தின் குணப்படாமையினாலும் வெகு பாடு பட்டார்.*

மத். 8, 20; லூக். 19, 41—43.

188. அவர் அதிக பாடுபட்டதெங்கே?

*அவர் பிடிக்கப்பட்ட கெத்சேமனே தோட்டத்திலும், அவர் குற்றமில்லாமல் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்பட்ட சங்கத்தின் முன்பாகவும் இந்த அந்நியாயமான தீர்ப்பை உறுதிப்படுத்தின அக்கியான துரையாகிய பொந்தியு பிலாத்துவுக்கு முன்பாகவும் அவர் கொலையுண்ட கொல்காத்தாமலையிலும் தான்.*

கிறிஸ்து பாடுபட்ட சரித்திரம், கிறிஸ்துவின் பாடுகள் மரணத்தைப் பற்றிய பாட்டுகள்.

189. அவர் எவ்வித மரணத்தை அடைந்தார்?

*அதிக கொடூரமும் இழிவும் சாபமுமுள்ள சிலுவை மரணத்தையே.*

கலா. 3, 13; பிலி. 2, 8.

190. அவர் மரித்த பிறகு என்ன செய்தார்?

அவர் அடக்கம் பண்ணப்பட்டுப் பிரிந்து போன ஆவிகள் இருக்கிற பாதாளத்தில் இறங்கினார்.

அப். நட. 2, 25—31; பிரார்த். 56, 1.

191. மனுஷர் தேவகுமாரனாகிய அவரைக் கொலை செய்யக் கூடிய தெப்படி?

மனுஷருடைய பிரதான ஆசாரியராகிய அவர் அவர்களுக்காகத் தம்மை பலியிட்டுப் பொன்னினாலும் வெள்ளியினாலும் மீட்கப்படாத அவர்களுடைய ஆத்மாக்களுக்காகத் தமது பரிசுத்தமும் விலையுயர்ந்ததுமான இரத்தத்தை மீட்கும் பொருளாகச் சிந்த அவர் சித்தமாயிருந்ததனாலேயே.

மத். 26, 53; மத். 10, 45.

192. அவர் தமது பாடு மரணங்களினாலேயன்றி வேறெதனாலும் நம்மை ஏன் மீட்க முடியவில்லை?

ஏனென்றால் அவைகளினால் மாத்திரம் அவர் நமது குற்றத்தையும் தண்டனையையும் தமது மேல் சுமந்து தேவனுடைய கோபாக்கினையை நம்மை விட்டு விலக்கக் கூடியதாயிருந்தது.

எச. 53, 4. 5; பிரார்த். 461, 51; 41, 4—6.

193. இயேசு கிறிஸ்துவினால் நாம் எப்படி எல்லாப் பாவங்களிலிருந்தும் இரட்சிக்கப்பட்டிருக்கிறோம்?

அவர் நம்முடைய பாவத்துக்காக ஈடு செலுத்தினபடியினால் அது மன்னிக்கப்படக் கூடியது; நாம் அதற்கு இனிமேல் ஊழியம் செய்யாதபடி அதன் வல்லமை முறிந்துபோயிற்று.

1 யோ. 1, 7; பிரார்த். 2, 8; 441, 3.

194. நாம் அவரால் எப்படி மரணத்திலிருந்து இரட்சிக்கப்பட்டிருக்கிறோம்?

அவர் கோபாக்கினையை விலக்கினதால் நாம் நித்திய மரணத்திலிருந்து இரட்சிக்கப்பட்டோம், ஆகையால் நாம் சரீரமரணத்திற்கும் இனி பயப்படத் தேவையில்லை; ஏனென்றால் நாம் அதனால் தேவனிடத்தி லிருந்து பிரிக்கப்படாமல் அவரோடு ஐக்கியமாகிறோம்.



யோ. 11, 25. 26; பிலி. 1, 21; பிரார்த். 306, 1. 2; 312, 8.

195. இதனால் நாம் பிசாசின் வல்லமையிலிருந்து இரட்சிக்கப்பட்ட தெப்படி?

பாவத்தின் தோஷத்திற்கும் அதிகாரத்திற்கும் உள்ளாகி மரணாக்கினைக்கு ஆளானவர்கள்மேல் மாத்திரம் பிசாசுக்கு அதிகாரமுண்டு.

யோ. 12, 31; 1 யோ. 3, 8; பிரார்த். 264, 3.

196. தமக்குச் சம்பாதித்துக்கொண்டார் என்கிற வார்த்தை எதை விசேஷமாய் உணர்த்துகிறது?

இரட்சகருடைய கசப்பான பாடுகளையும் இரத்த வேர்வையையும் அவருடைய இரட்சணிய கிரியையின் மகிமையான பலனையுமே.

1 கொ. 7, 23.

197. இதின் பலன் என்ன?

இனி இயேசுகிறிஸ்து நம்முடைய ஆண்டவரும் இராசாவுமாயிருக்க நாம் அவருக்குச் சொந்தமும் அவருடைய இராச்சியத்தின் குடிகளுமாயிருப்பது தான்.

பிரார்த். 263, 11. 12.

198. நமது இரட்சகருடைய இராச்சியம் எத்தன்மையானது?

அது இந்த லோகத்துக்கு அடுத்ததாயிராமல் ஆவிக்குரியதாயிருப்பதால் அதிலே தேவனுடைய சித்தம் நம்முடைய இருதயங்களிலும் மனச்சாட்சிகளிலும் ஆளுகை செய்கிறது.

199. இந்த இராச்சியத்தின் குடியாகிய நீ நிறைவேற்றவேண்டிய பாக்கியமான கடமை என்ன?

நான் என் ஆண்டவரும் இராசாவுமாகிய இயேசுகிறிஸ்துவுக்கு ஊழியஞ்செய்து அவருக்கென்று பிழைப்பதும் மரிப்பதும் என் கடமை.

ரோ. 14, 7. 8; பிரார்த். 46, 5; 48, 9; 104, 4.

200. அவருடைய இராச்சியத்தில் உனக்குக் கிடைக்கும் மகிமையான நன்மைகள் எவை?

நித்திய நீதியும் கபடற்ற உண்மையும் பேரானந்தமுமே. பிரார்த். 235, 6.

201. உன்னுடைய இரட்சிப்பின் நிச்சயம் எதனால் உண்டாயிருக்கிறது?

என் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து உயர்த்தப்பட்டிருப்பதால்.

202. தேவன் அவரை எப்படி எல்லாருக்கும் முன்பாக உயர்த்தினார்?

அவர் அவரை மூன்றாம் நாளிலே மரித்தோரிலிருந்து உயிரோடு எழுப்பினார்.

203. இரட்சகருடைய உயிர்த்தெழுதலினால் உனக்கு என்ன நன்மை கிடைத்தது?

அது என் இரட்சிப்பின் முத்திரையும் என் விசுவாசத்தின் ஒன்றான அஸ்திபாரமுமாயிருக்கிறது.

1 கொ. 15, 17. 19; கிறிஸ்து உயிர்த்தெழுந்த பண்டிகையின் பாட்டுகள்.

204. இயேசுநாதர் தாம் உயிரோடெழுந்ததைச் சீஷருக்கு ரூபிக்க என்ன செய்தார்?

அவர் நாற்பது நாளாய்த் தம்மை உயிரோடெழுந்தவராக அவர்களுக்குக் காண்பித்து அவர்களோடு தேவனுடைய இராச்சியத்தைப் பற்றி பேசினார்.

205. அவர் இப்பூமியில் சஞ்சரித்த காலத்தையும் செய்த வேலையையும் எப்படி முடித்தார்?

அவர் பரத்துக்கேறி பூலோக பந்தங்களுக்கு நீங்கலாகி தெய்வ வல்லமையையும் மகிமையையும் பெற்றுத் தம்மைச் சேர்ந்தவர்களுக்கு எத்தேசகாலமும் சமீபமாயிருக்கிறார்.

மத். 28, 30; கிறிஸ்து பரத்துக்கேறின பண்டிகையின் பாட்டுகள்.

206. இப்போது அவரை விசுவாசத்தினால் எங்கே தேடுகிறாய்?

சர்வ வல்லமையுள்ள பிதாவின் வலது பாரிசத்திலே. அவரோடு அவர் ஆண்டு தமது திருச்சபையை முடியக் காப்பாற்றி வருகிறார்.

மத். 23, 12.

207. அவர் கடைசியில் தம்முடைய மகிமையை எப்படி வெளிப்படுத்துவார்?

அவர் கடைசி நாளில் ஜீவனுள்ளோரையும் மரித்தோரையும் நியாயந்தீர்க்கவும் மகிமையின் நித்திய இராச்சியத்தை ஸ்தாபிக்கவும் வெளியரங்கமாக வருவார். அப்போது நாவு யாவும் இயேசுகிறிஸ்து கர்த்தர் என்று அறிக்கை பண்ண வேண்டும்.

2 கொ. 5, 10; பிரார்த். 316.

---



119460

## மூன்றாம் பிரிவு.

### பரிசுத்தமாக்குதலைப்பற்றியது.

விசுவாசப் பிரமாணத்தின் மூன்றாம் பிரிவென்ன?

பரிசுத்த ஆவியானவரை விசுவாசிக்கிறேன். பொதுவான பரிசுத்த சபையையும் பரிசுத்தவான்களுடைய ஐக்கியமும் பாவமன்னிப்பும் மாமிச உயிர்த்தெழுதலும் நித்திய ஜீவனும் உண்டென்று விசுவாசிக்கிறேன்.

இதற்கர்த்தமென்ன?

நான் என் சுய புத்தியினாலும் பலத்தினாலும் என் கர்த்தராயிருக்கிற இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கவும் அவரைச் சேர்ந்து அண்டிக் கொள்ளவுங் கூடவே கூடாது. ஆகையால் பரிசுத்த ஆவியானவர் சுவிசேஷத்தைக்கொண்டு என்னை வரவழைத்து தம்முடைய வரங்களால் என்னைப் பிரகாசிப்பித்து, மெய்யான விசுவாசத்தினால் என்னைப் பரிசுத்தமாக்கி, காப்பாற்றி வருகிறாரென்று விசுவாசிக்கிறேன். இப்படியே அவர் பூமியிலுள்ள எல்லாத்திருச்சபையையும் வரவழைத்து, கூட்டிச் சேர்த்து, பிரகாசிப்பித்து, பரிசுத்தமாக்கி, மெய்யான ஏக விசுவாசத்திலே இயேசு கிறிஸ்துவினிடத்தில் காப்பாற்றிக் கொண்டு வருகிறார். அவர் இந்தத் திருச்சபையில் எனக்கும் விசுவாசமுள்ள யாவருக்கும் தினந்தோறும் சகல பாவங்களையுங் கிருபையாய் மன்னித்துக்கொண்டு நடுத்தீர்வை நாளிலே என்னையும் இறந்துபோன யாவரையும் எழுப்பி எனக்கும் இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கிற யாவருக்கும் நித்திய ஜீவனைக் கொடுப்பார் இது உண்மையான வார்த்தை.

208. இரண்டாம் பிரிவின் முக்கியமான பொருள் என்ன?

ஆண்டவரும் மீட்பருமாகிய இயேசு கிறிஸ்துவே அன்றி வேறொருத்தரும் என்னை இரட்சிக்க முடியாது என்பதே.

209. ஆகையால் நீ முக்கியமாய்ச் செய்ய வேண்டியதென்ன?

நான் கிறிஸ்துவண்டை சேர்ந்து அவரை என் ஆண்டவரும் இரட்சகருமாக விசுவாசிக்க வேண்டும்.

அப். நட. 4, 12; வேறொருவரிடத்திலும் இரட்சிப்பு இல்லை, வானத்தின் கீழே மனுஷரில் வேறொரு நாமம் அதினால் நாம் இரட்சிக்கப்பட வேண்டுமென்று கட்டளையிடப்பட்டதுயில்லை.

அப். நட. 16, 31; கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பேரிலே விசுவாசி அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள்.

யோ. 6, 35.

210. மூன்றாம் பிரிவின் அர்த்தத்திலே உன்னைப் பற்றி என்ன சொல்லப்பட்டிருக்கிறது?

கிறிஸ்துவண்டை போகிற வழி எனக்குத் தெரியாததாலும், தெரிந்தாலும் அதிலே செல்ல எனக்கு மனசும் சக்தியும் இல்லாததாலும் நான் என் சுய புத்தியினாலும் பலத்தினாலும் விசுவாசிக்க முடியாது என்பதே.

செல்வமுள்ள வாலிபன் (மாற். 10, 17—22).

யோ. 6, 44; 1 கொரி. 2, 14; எபே. 4, 18.

211. விசுவாசிக்கிறதற்கு உனக்கு வெளிச்சத்தையும் பலத்தையும் கொடுக்கிறதார்?

பரிசுத்த ஆவியானவரே, அவர் என்னைக் கிறிஸ்துவண்டை நடத்துகிறார்.

மத். 16, 17; 1 கொரி. 12, 3; பிலி. 2, 13.

212. பரிசுத்த ஆவியானவருடைய இந்தக் கிரியைக்கு என்ன பெயர்?

பரிசுத்தமாக்குதல்.

## I. பரிசுத்த ஆவியானவரும் இரட்சணிய ஒழுங்கும்.

213. பரிசுத்த ஆவியானவர் யார்?

பிதாவினிடத்திலிருந்தும் குமாரனிடத்திலிருந்தும் புறப்படுகிற பராபரனுடைய ஆவி தான்.

யோ. 15, 26.

214. பரிசுத்த ஆவியானவருடைய கிரியையைப் பற்றி சத்திய வேதத்தில் என்ன சொல்லப்பட்டிருக்கிறது?

அவர் ஆதியிலிருந்து உலகத்தில் உழைத்துத் தீர்க்கதரிசிகளைக் கொண்டு பேசிப் பெந்தெகொஸ்தே நாளில் கிறிஸ்துவின் ஆவியாகச் சீஷர்மேல் ஊற்றப்பட்டு அவரைப்பற்றி அவர்களுக்குச் சாட்சி பகர்ந்து அவர்களுடைய இருதயங்களைப் பரிசுத்தப்படுத்திவருகிறார் என்பதே.

1 மோ. 1, 2; யோ. 16, 7—14; அப். நட. 2, 1—18.



1 கொரி. 2, 10. 11; 2 பேது. 1, 21.

215. அவர் எந்த எத்தனங்களைக் கொண்டு மனுஷருடைய இருதயங்களில் உழைக்கிறார்?

பராபரனால் கட்டளையிடப்பட்ட கிருபையின் எத்தனங்களாகிய தேவவசனத்தையும் சாக்கிரமெந்துக்களையும் தான்.

யோ. 17, 17. 20; ரோ. 10, 17; 1 கொரி. 12, 13; 1 பேது. 1, 23; பிரார்த். 116, 2.

216. பரிசுத்த ஆவியானவர் உன்னிடத்தில் தமது கிரியையை ஆரம்பித்ததெப்படி?

நான் கிறிஸ்துவண்டைச் சேர்ந்து நித்திய நன்மைகளை அனுபவிக்க அவர் என்னைச் சுவிசேஷத்தைக் கொண்டு வரவழைத்தார்.

மத். 11, 28—30; பிரயாசைப் பட்டுப் பாரஞ்சுமந்தவர்களாகிய நீங்கள் எல்லாரும் என்னண்டை வாருங்கள், நான் உங்களை முசிப்பாற்றுவேன். என் நுகத்தடியை உங்கள்மேல் ஏற்றுக்கொண்டு என்னிடத்திலே கற்றுக்கொள்ளுங்கள், ஏனென்றால் மெத்தனவும் மனத்தாழ்மையுமாயிருக்கிறேன். அப்படியே உங்கள் ஆத்துமங்களுக்கு முசிப்பாறுதல் கிடைக்கும், ஏனெனில் என் நுகத்தடி மெதுவும் என் சுமை லேசுமாயிருக்கிறதென்றார்.

இராசகுமாரனின் கலியாணம் (மத். 22, 2—14);

பெரிய விருந்து (லூக். 14, 16—24); மாற். 16, 15; 2 தெச 2, 13. 14; பிரார்த். 331, 4.

217. சுவிசேஷம் என்றால் என்ன?

கிறிஸ்துவையும் அவர் சம்பாதித்த தேவகிருபையையும் பற்றிய நல்ல செய்தி தான்.

1 தீமோ. 1, 15; லூக். 2, 10. 11; ரோ. 1, 16. 17.

218. நீ இந்த அழைப்புக்குச் செவிகொடுக்கும்படி பரிசுத்த ஆவியானவர் இன்னும் உன்னிடத்தில் செய்கிறதென்ன?

அவர் தேவவசனத்தைக் கொண்டு என் இருதயத்தைத் தமது வரங்களினால் (உண்மையான அறிவினால்) பிரகாசிப்பிக்கிறார்.

யோ, 16, 13; அப். நட. 16, 14; 2 கொரி. 4, 6; எபே. 5, 14.

பிரார்த். 129, 2; 79, 2; 84, 2.

219. அவர் தேவவசனத்தைக் கொண்டு எதை விசேஷமாய்க் காண்பிக்கிறார்?

அவர் என் குற்றத்தையும் பரிதாபமான நிலைமையையும் ஒன்றான இரட்சாகிய இயேசு கிறிஸ்துவையும் காண்பித்து என் பாவங்களைப் பற்றிய மனஸ்தாபத்தையும் பாவ மன்னிப்பைப் பற்றிய ஆசையையும் கிறிஸ்துவிடத்தில் அடைக்கலம் தேட வேண்டுமென்ற ஆவலையும் என்னில் எழுப்புகிறார்.

மத். 5, 4. 6; லூக். 15, 17—20; யோ. 16, 8—11; ரோ. 3, 20; கலா. 3, 22; பிரார்த். 178, 9.

220. அதனால் உன்னுடைய ஆத்துமத்தில் உண்டாகிறதென்ன?

மெய்யான விசுவாசம்.

221. உன்னுடைய விசுவாசம் மெய்யான விசுவாசம் என்று எப்போது சொல்லக் கூடும்?

பராபரன் கிறிஸ்துவின் நிமித்தம் ஏழைப் பாவியாகிய எனக்கு மன்னித்தார் என்று நான் சுவிசேஷத்தினால் நிச்சயம் அடைந்திருக்கும்போது தான்.

வலதுபக்கத்துக் கள்ளன் (லூக். 23, 42); 1 கொரி. 2, 2; 1 பேது. 1, 13; பிரார்த். 162, 1; 167, 1. 2; 178, 6; 265, 3. 4.

222. மனஸ்தாபத்தோடு பாவத்தை விட்டு விசுவாசத்தோடு பராபரனண்டை திரும்புதல் என்றாலென்ன?

குணப்படுதல் அல்லது மனம் மாறுதல்.

மத். 3, 2; மாற். 2, 17; லூக். 15, 10; 24, 47.

அப். நட. 3, 19; 11, 18; ரோ. 2, 4.

223. நீ மெய்யான விசுவாசத்தால் அடைகிற தென்ன?

பரிசுத்தமாகுதல், அதாவது பாவ மன்னிப்பும் பராபரனுடைய ஐக்கியத்தில் புதிய ஜீவனும்.

லூக். 7, 48—50; அப். நட. 10, 43; 26, 18; 1 கொரி. 6, 11; கலா 2, 20; 2 தெச. 2, 13; 1 யோ. 5, 11. 12.

224. சத்தியவேதத்தில் பாவமன்னிப்புக்கு என்ன பேயர் உண்டு?

நீதிமான் ஆக்குதல்.

ஆயக்காரன் (லூக். 18, 14).



225. நீதிமான் ஆக்குதல் என்றால் என்ன?

பராபரன் என்னைக் குற்றமில்லாதவனும் நீதியுள்ளவனும் என்று தீர்ப்பதே.

மத். 12, 36. 37; ரோ. 5, 18.

226. பராபரன் பாவியை எப்படி நீதியுள்ளவனென்று தீர்க்கக் கூடும்?

நான் விசுவாசத்தால் கிறிஸ்துவைப் பற்றிக் கொண்டால் பராபரன் கிருபையாக அவருடைய நீதியை என்னுடைய நீதியாக எண்ணிக்கொள்ளுகிறார். அப்போது நான் சந்தோஷத்தோடு:—என் நீதி இயேசுதானே—அவர் இல்லாவிட்டால்—பிதாவுக்கு முன் நானே—நான் பாவியானதால்—விழிக்கவும் கூடாதே—என் இயேசுவன்றியே—ரட்சிப்புக் கிடையாதே—என் மீட்பர் அவரே, என்று பாடுவேன்.

ரோ. 3, 28; ஆனபடியால் மனுஷன் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளையல்லாமல் விசுவாசத்தினாலே நீதிமானாக்கப்படுகிறான் என்று தீர்க்கிறோம்.

ரோ. 3, 22—26; எபே. 2, 8. 9; பிலி. 3, 8. 9; பிரார்த், 18, 13. 14; 178.

227. விசுவாசத்தால் நீதிமானாக்கப்பட்டவர்கள் அடைகிற தென்ன?

இரட்சிப்பின் நிச்சயத்தாலும் பராபரனோடுள்ள சமாதானத்தாலும் கனியுதிர்ந்த அன்பினாலும் உண்டாகிற தேவனுடைய பிள்ளைகளுக்குரிய புதிய ஜீவன் தான்.

ரோ. 8, 14—17. 31—39; 14, 17; கலா. 3, 26; எபே. 3, 12; 1 யோ. 3, 1; 1 யோ. 4, 19; பிரார்த். 265.

228. இந்தப் புதிய ஜீவன் எதனாலே காணப்படுகிறது?

பராபரனுடைய கற்பனைகளின்படியேயும் கிறிஸ்துவின் மாதிரியின்படியேயும் நடக்கிற நடக்கையினாலே தான்.

எசே. 36, 26. 27; மத். 7, 17. 18; கலா. 5, 6. 22—25; எபே. 2, 10; 1 யோ. 5, 3; எபி. 12, 14; யாக். 2, 17; பிரார்த். 235, 7.

229. விசுவாசத்தால் உண்டாகும் இந்தப் பெரிய மாறுதலுக்குச் சத்தியவேதத்தில் என்ன பெயர் உண்டு?

புதிதாகுதல் அல்லது மறுபிறப்பு.

2 கொ. 5, 17; 1 யோ. 5, 1.

230. நீ மறுப்படிக் கிருபையை விட்டுப் பின்வாங்காதபடிப் பரிசுத்த ஆவியானவர் உன்னிடத்தில் செய்ய வேண்டியதென்ன?

நான் கிறிஸ்துவண்டை நிலைத்திருக்கும்படி அவர் என்னைச் சகல சோதனைகளுக்கும் மோசங்களுக்கும் தற்காத்து மெய்யான விசுவாசத்தில் காப்பாற்ற வேண்டும்.

1 தீமோ. 6, 12; விசுவாசத்தின் நற்போராட்டத்தைப் போராடு நித்திய ஜீவனைப் பிடித்துக்கொள்; அதற்கு நீ அழைக்கப்பட்டவனும் அநேகஞ் சாட்சிகளுக்கு முன்பாக நல்லறிக்கையை அறிக்கை பண்ணினவனுமாமே.

அறி. 2, 10; மரண பரியந்தம் உண்மையாயிரு, அப்போது உனக்கு ஜீவனின் கிரீடத்தைத் தருவோம்.

அறி. 3, 11; இதோ சீக்கிரமாய் வருகிறேன். ஒருவனும் உன் கிரீடத்தை வாங்காதபடி உனக்குள்ளதைப் பிடித்துக்கொண்டிரு.

மத். 24, 12. 13; 26, 41; யோ. 15, 4. 5; 17, 11; 1 கொரி. 1, 9; 1 கொரி. 15, 58; பிலி. 1, 6; 2 தெச. 3, 3; 2 தீமோ. 1, 14; பிரார்த். 79, 3.

## II. திருச்சபை.

231. நீ பரிசுத்த ஆவியானவரால் எந்த ஐக்கியத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறாய்?

பரிசுத்த ஆவியானவர் பெந்தெகொஸ்தே நாள் முதல் எல்லா ஜாதிகளிடத்திலிருந்தும் சேர்த்து இயேசு கிறிஸ்துவினிடத்தில் முடிவு பரியந்தம் காப்பாற்றி வருகிற பரிசுத்தவான்களுடைய ஐக்கியத்தில் தான்.

அப். நட. 2, 1—13. 37—41; எபே. 2, 19; 1 பேது. 2, 9; மத். 16, 18; லூக். 12, 32; யோ. 10, 27. 28; பிரார்த். 79, 1; 264.

232. இதைப் பற்றி மூன்றாம் பிரிவிலே என்ன சொல்லப்பட்டிருக்கிறது?

பொதுவான பரிசுத்த சபையும் பரிசுத்தவான்களுடைய ஐக்கியமும் உண்டென்று விசுவாசிக்கிறேன் என்பதே.

233. திருச்சபையின் அவயவங்களை ஐக்கியப்படுத்துகிற கட்டு என்ன?

அவர்கள் எல்லாரும் கிறிஸ்துவைத் தங்கள் ஆண்டவராகப் பற்றிக்கொள்ளும் மெய்யான ஏக விசுவாசம் தான்.

234. ஆகையால் ஞானோபதேசத்தில் திருச்சபைக்கு என்ன பெயருண்டு?

பொதுவான பரிசுத்த சபை, அதாவது பூமியிலுள்ள மெய்க் கிறிஸ்தவர்களின் கூட்டம்.



235. இந்தத் திருச்சபையைப் பற்றி விசுவாசிக்கிறேன் என்று ஏன் சொல்லவேண்டும்?

ஏனென்றால் மெய்க் கிறிஸ்தவர்கள் இன்னார் என்று நமக்கு அல்ல கிறிஸ்துவுக்கு மாத்திரம் தெரியும்.

கொலோ. 3, 3; 2 தீமோ. 2, 19; எபி. 11, 1.

236. நாம் பார்க்கக் கூடிய திருச்சபைக்கு அடையாளங்கள் இல்லையா?

உண்டு, எவை எனில், விசுவாசத்தை உண்டாக்கும் சுவிசேஷத்தின் பிரசங்கமும் சாக்கிரமெந்துக்களுடைய பரிமாறுதலும் அந்த விசுவாசத்தைக் காட்டும் அறிக்கையும் நடக்கையும் தான்.

மத். 10, 32; இப்போதும் எவனாகிலும் மனுஷர் முன்பாக என்னை அறிக்கை பண்ணினால் அவனை நானும் பரமண்டலங்களிலிருக்கிற என் பிதா முன்பாக அறிக்கை பண்ணுவேன்.

யோ. 13, 35; நீங்கள் ஒருவருக்கொருவர் நேசமுள்ளவர்களாயிருந்தால் இதனால் எல்லாரும் நீங்கள் எனக்குச் சீஷர் என்று அறிவார்கள்.

எசா. 55, 11; ரோ. 10, 10—17; 2 கொரி. 4, 13.

237. ஆகையால் திருச்சபை எப்பேர்ப்பட்டது?

கிருபை சாதனங்களின் உபயோகத்தால் அது காணப்படுகிறதும் விசுவாச ஐக்கியத்தினால் அது காணப்படாததுமாயிருக்கிறது.

238. கிருபையின் சாதனங்களைக் கொண்டு திருச்சபை உலகத்தில் நிறைவேற்ற வேண்டிய கடமைகள் என்ன?

அது உலகத்தின் இரட்சிப்புக்கென்று ஏற்பட்டதால் அது மிஷியோன் கிரியையை நடப்பித்துச் சுவிசேஷத்தால் எல்லாச்சாதிகளையும் கிறிஸ்துவண்டை கொண்டுவர வேண்டும்.

கடுகு விதை, புளித்தமா (மத். 13, 31—33;) மத். 24, 14; மத். 28, 19; மாற். 16, 15; யோ. 17, 20; 1 தீமோ. 2, 4.

239. திருச்சபையின் புறம்பான ரூபத்தில் காணப்படுகிற குறைவுகள் என்ன?

அழைக்கப்பட்டாலும் கிறிஸ்துவின் பங்கு பெறாதவர்களும் திருச்சபையிலிருக்கிறார்கள், மேலும் அது பல சபைகளாகப் பிரிந்திருக்கிறது.

கோதுமையும் களையும் (மத் 13, 24—30); வலை (மத். 13, 47—50); மத். 7, 21; 20, 16; 1 கொ. 3, 11. 12; பிரார்த். 117.

240. அப்படி இருந்தும் நீ திருச்சபையைப் பற்றி ஏன் நம்பிக்கையற்றுப் போகக் கூடாது?

ஏனென்றால் அது பரிசுத்த ஆவியின் வாசஸ்தலமும் அவர் வேலை செய்யும் இடமும் என்னுடைய ஞானத்தாயுமாயிருக்கிறது. அதனுடைய வேலையில்லாமல் நான் தேவனுடைய பிள்ளை ஆகவும் நித்திய இரட்சிப்பை யடையவும் முடியாது.

1 கொரி. 3, 16; கலா. 4, 26; 2 தீமோ. 3, 14; எபி. 10, 25.

241. நீ எந்தச் சபையில் சேர்ந்திருக்கிறாய்?

சுவிசேஷத்தைச் சுத்தமாய்ப் பிரசங்கித்துச் சாக்கிரமெந்துக்களைக் கர்த்தருடைய கட்டளைப் பிரகாரமாகப் பரிமாறிவரும் சுவிசேஷ லுத்தரன் சபையில் தான்.
பிரார்த். 116.

## III. இரட்சிப்பின் பரம நன்மைகளும் அதின் முடிவும்.

242. இரட்சிப்பின் பரம நன்மைகள் எத்தனை விதமானது?

மூன்று விதமானது: பாவமன்னிப்பு, மாமிச உயிர்த்தெழுதல், நித்தியஜீவன்.

243. நீ திருச்சபையில் விசுவாசத்தோடு சேர்ந்து இப்போது அநுதினமும் தாராளமாய் அநுபவிக்கிற நன்மை என்ன?

பரிசுத்த ஆவியானவர் எல்லா விசுவாசிகளுக்கும் சுவிசேஷத்தில் வாக்களித்துப் பாவசங்கீர்த்தனத்திலும் இராப்போசனத்திலும் திரும்பத்திரும்ப அருளி முத்திரை இடும் பாவமன்னிப்பே.

சங். 103, 2—4; 130, 7. 8; எசா. 1, 18; 55, 7; ரோ. 8, 1. 16.

2 கொரி. 5, 18. 19; கொலோ. 1, 14; 1 யோ. 1, 9; 2, 1—2; பிரார்த். 110, 4—6; 166, 5;

244. நீ கிறிஸ்துவை விசுவாசித்தாலும் உனக்கு ஏன் இன்னும் அநுதினமும் பாவமன்னிப்புத் தேவை?

ஏனென்றால் என்னுடைய இருதயமும் ஜீவியமும் இன்னம் பூரணமாகப் பரிசுத்த ஆவியால் புதுப்பிக்கப்படாமல் எனக்குள் இன்னம் வாசம்பண்ணும் பாவம் நான் செய்கிற நல்ல கிரியைகளையும் அசுத்தப்படுத்துகிறது.



மத். 26, 41; ரோ. 7, 18; பிலி. 3, 12. 13; 1 யோ. 1, 8. 10; யாக். 3, 2; பிரார்த். 260, 8.

245. திருச்சபையின் அவயவமாகிய உனக்குக் கொடுக்கப்பட்ட வாக்கு என்ன?

நான் ஒரு நாளிலே எல்லாப்பாவத்திலிருந்தும் பலவீனத்திலிருந்தும் விடுதலையாகிப் பூர்ணமான நிலைமைக்கு வருவேன் என்பதே.

ரோ. 8, 17—23; 1 கொரி. 13, 10; 15, 43; 2 கொரி. 1, 20—22; 2 தீமோ. 4, 18; 2 பேது. 3, 13; பிரார்த். 333, 5; 308, 7. 9.

246. அது எப்போது நடக்கும்?

பூலோகத்துக்கடுத்த மாமிச சிந்தையை எல்லாம் தகர்த்து என் ஆத்துமத்தைப் பராபரனிடத்தில் அனுப்பிவைக்கும் சரீரமரணத்துக்குப் பிற்பாடு தான்.

அறி. 14, 13; கர்த்தருக்குள் சாகிற மரித்தோர் இது முதலாய்ப் பாக்கியவான்கள், ஆம் தங்கள் வேலைகளை விட்டு இளைப்பாறத்தானே என்று ஆவியானவர் சொல்லுகிறார். அவர்கள் கிரியைகளோ அவர்களுடனே கூடப் பின் செல்லுகிறது என்றது.

யோ. 12, 24; 1 கொரி. 15, 26. 36; 37, 50—52; 2 கொரி. 5, 1. 4. 7. 8; பிலிப். 1, 23; பிரார்த். 338, 4; 323, 1.

247. உன்னுடைய சரீரமும் மரணத்தின் வல்லமையிலிருந்து விடுதலையாக்கப்படுவதெப்போது?

பரிசுத்த ஆவி என்னையும் செத்துப்போன யாவரையும் உயிரோடு எழுப்பி எனக்கு ஒரு புது மகிமையான சரீரத்தைக் கொடுக்கப்போகிற கடைசிநாளிலே தான்.

யோ. 5, 24—29; 11, 23—26; அப். நட. 24, 15; ரோ. 8, 11; 1 கொரி. 15, 20—26; 42—44; 53—58; பிலி. 3, 20. 21; பிரார்த். 308.

248. அப்போது உனக்காகவும் கிறிஸ்துவை விசுவாசிக்கிற யாவருக்காகவும் தொடங்குகிறதென்ன?

நான் எல்லாப் பாவமும் கண்ணீரும் அவஸ்தையுமின்றி நித்திய சந்தோஷத்தோடும் பாக்கியத்தோடும் பராபரனை முகமுகமாகப் பார்க்கப்போகிற புதிய பூமியில் கிடைக்கும் நித்திய ஜீவன் தான். அதுதான் பராபரனுடைய வழிகளின் இலக்கு, அதுதான் நான் முழுத் திருச்சபையோடும் அறிக்கையிடுகிற நமது விசுவாசத்தின் அந்தம்.

அறி. 21, 4; எல்லாக் கண்ணீரையும் பராபரன் அவர்கள் கண்களில் இல்லாமல் துடைப்பார், இனி மரணமும் இல்லை இனித் துக்கமாகிலும் அலறுதலாகிலும் வருத்தமாகிலும் இல்லை, ஏனெனில் முந்தினவைகள் போய்விட்டது என்று உரைத்தது.

மத். 25, 46, ரோ. 8, 17. 18. 38. 39; 2 கொ. 4, 17. 18; 1 பேது. 1, 3. 4, 8. 9; 1 யோ. 3, 2; அறி. 7, 14—17; 21, 1—3; பிரார்த். 323.

249. எந்தத் தெய்வீக இரகசியம் அப்போது உனக்குத் தெளிவாகும்?

திரித்துவத்தின் இரகசியமே. என்னைச் சிருஷ்டித்த பிதாவும், என்னை இரட்சித்த குமாரனும், என்னைப் பரிசுத்தமாக்கின பரிசுத்த ஆவியானவரும் மூன்று தெய்வீக ஆட்களாயிருக்கிறார்கள். அவர்களை நான் ஒரே சர்வ வல்லமையுள்ள நித்திய தேவனாய் அறிந்துகொள்ளுவேன். அவராலும், அவரைக் கொண்டும், அவருக்கென்றும், சகல வஸ்துக்களும் உண்டாயிருக்கிறது. அவர் என்றென்றைக்கும் ஸ்தோத்தரிக்கப்பட்டவர்.

2 கொரி 13, 13; மத். 3, 16. 17; மத். 28, 19; யோ. 15, 26; ரோ. 11, 33—36; 1 கொரி. 12, 4—6; பிரார்த். 91, 286.

---

# மூன்றாம் ஆதி நியாயம்.

## கர்த்தருடைய ஜெபம்.

250. இந்தச் செபம் ஏன் கர்த்தருடைய செபம் என்னப்படுகிறது?

ஆண்டவரே ஜெபம்பண்ண எங்களைப்போதிவியும் என்று சீஷர் இயேசுநாதரைக்கேட்டபோது அவரே அதை அவர்களுக்குச் சொல்லிக்கொடுத்தார்.

மத். 6, 9—13; லூக். 11, 1—4.

251. ஆகையால் கிறிஸ்தவ சபை அதை எப்படி மதிக்கவேண்டும்?

இது கிறிஸ்தவசபையில் எக்காலத்திற்கும் செல்லும் பொது ஜெபமும் ஜெபம் பண்ண வேண்டிய மாதிரியை நமக்குக் காண்பிக்கும் ஜெபமுமாம் என்று கிறிஸ்தவர்கள் அறிய வேண்டும்.

மத். 6, 7—9; பிரார்த். 212.

252. அதிலே எத்தனை பாகங்கள் உண்டு?

மூன்று:— துவக்குகிற வார்த்தை, ஏழு மன்றாட்டுகள், முடிக்கிற வார்த்தை.

### துவக்குகிற வார்த்தை.

வினா:—கர்த்தருடைய ஜெபத்தைத் துவக்குகிற வார்த்தை என்ன?

விடை:—பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே.

வினா:—இதன் அர்த்தமென்ன?

விடை:—பராபரன் நமக்கு மெய்யான பிதாவென்றும் நாம் அவருக்கு மெய்யான பிள்ளைகளென்றும் நாம் விசுவாசித்து, பிரியமுள்ள பிள்ளைகள் தங்கள் பட்சமுள்ள பிதாவை மன்றாடுவதுபோல் நாம் சந்தோஷத்தோடும் முழு நம்பிக்கையோடும் அவரைச்சேர்ந்து மன்றாடும்படிக்கு, அவர் இந்த வார்த்தையினால் நம்மை நயம் பண்ணி இழுக்கப் பிரிய சித்தமாயிருக்கிறார்.

253. இரட்சகருடைய சித்தத்தின்படி நாம் ஜெபம் பண்ணும்போது தேவனை எப்படி அழைத்துக் கூப்பிட வேண்டும்?

நாம் அவரை பிதாவே என்று அழைக்க வேண்டும்.

254. இப்படிச் சொல்லக் கர்த்தர் நமக்கு ஏன் கட்டளை இடுகிறார்?

தேவனண்டைச் சேரத் தைரியம் அடைந்து அவர் நமக்கு மெய்யான பிதாவென்றும் நாம் அவருக்கு மெய்யான பிள்ளைகளென்றும் நிச்சயமாய் நம்பும்படித்தான்.

எசா. 49, 15; 63, 16; எரே. 31, 20; கலா. 4, 6; எபே. 3, 14. 15; 1 யோ. 3, 1.

255. இதை நம்புகிற நாம் எப்படி ஜெபம் செய்வோம்?

பிரியமுள்ள பிள்ளைகள் தங்கள் பட்சமுள்ள பிதாவைச் சேர்ந்து மன்றாடுகிறதுபோல் நாம் சந்தோஷத்தோடும் முழு நம்பிக்கையோடும் பரம பிதாவைச் சேர்ந்து மன்றாடுவோம்.

ரோம. 8, 15. 16; எபேசி. 3, 12; 1 யோ. 5, 14; எபி. 4, 16; யாக். 1, 6. 7.

256. எங்கள் பிதாவே என்று கர்த்தர் நம்மை ஏன் சொல்லச் சொல்லுகிறார்?

ஏனென்றால் ஒரே தகப்பனுடைய பிள்ளைகளாகிய நாம் உடன்பிறந்தவர்க்குரிய சிநேகத்தோடு சேர்ந்து ஒருவருக்காக ஒருவர் மன்றாட வேண்டுமென்பதை அவர் நமக்கு நினைப்பூட்ட மனதாயிருக்கிறார்.

எபே. 4, 6; 1 தீமோ. 2, 1—2.

257. பரமண்டலங்களிலிருக்கிற என்கிற வார்த்தையைக் கர்த்தர் ஏன் சேர்க்கச் சொல்லுகிறார்?

சர்வவல்லமையுள்ள பரமபிதாவை நோக்கி மன்றாடுகிற நாம் நம்முடைய இருதயத்தைப் பூலோகத்தை விட்டுப் பரலோகத்திற்கு நேராக ஏறெடுக்க வேண்டியது அவசியமென்பதைக் கவனிக்கும்படித் தான்,

யோ. 4, 24; பராபரன் ஆவியாயிருக்கிறார், அவரைப் பணிந்துகொள்ளுகிறவர்கள் ஆவியிலும் உண்மையிலும் பணிய வேண்டியது.

சங். 103, 19; சங். 121, 1. 2; பிலிப். 3, 20; யாக். 1, 17.

258. ஏழு மன்றாட்டுகளையும் எப்படிப் பிரிக்கலாம்?

இரண்டு பங்காகத் தான்:—முதல் மூன்று மன்றாட்டுகள் தேவனுடைய மகிமையைப் பற்றியது. கடைசி நாலு மன்றாட்டுகள் நமக்கு வேண்டியவைகளைப் பற்றியது.

## முதலாம் மன்றாட்டு.

வினா:—முதலாம் மன்றாட்டென்ன?

விடை:—உம்முடைய நாமம் அர்ச்சிக்கப்படுவதாக.



வினா:—இதனர்த்தம் என்ன?

விடை:—பராபரனுடைய நாமம் தன்னில்தானே அர்ச்சியசிஷ்ட நாமமாயிருக்கிறது. ஆனால் அது நம்மிடத்திலேயும் அர்ச்சிக்கப்பட வேண்டுமென்று இந்த மன்றாட்டிலே மன்றாடிக்கொள்ளுகிறோம்.

வினா:—அவருடைய நாமம் நம்மிடத்தில் அர்ச்சிக்கப்படுவதெப்படி?

விடை:—பராபரனுடைய திருவசனம் தப்பிதமில்லாமல் நம்மிடத்தில் சுத்தமாய் போதிக்கப்பட்டு நாம் அதன்படி பராபரனுடைய பிள்ளைகளுக்கொத்த ஞான நடத்தையாய் நடந்தால் அவருடைய நாமம் நம்மிடத்தில் அர்ச்சிக்கப்படும். தயையுள்ள பரமபிதாவே, நாங்கள் இப்படிச்செய்ய எங்களுக்கு ஒத்தாசை செய்தருளும். ஆனால் பராபரனுடைய திருவசனத்திற்கொத்திராதபடி போதிக்கிறவனும் நடக்கிறவனும் எவனோ அவன் நமக்குள் பராபரனுடைய நாமத்தை அர்ச்சிக்காமல் தூஷணிக்கிறான். தயையுள்ள பரமபிதாவே நாங்கள் இப்படிச்செய்யாதபடிக்கு எங்களைக் காத்தருளும்.

259. முதலாம் மன்றாட்டில் நாம் எதற்காக ஜெபிக்கிறோம்?

நம்முடைய பரமபிதா தம்மை எப்படி வெளிப்படுத்தினாரோ அப்படிப் பூலோகத்தார் அவரை அறிந்து கனப்படுத்தித் துதிப்பதால் அவருடைய நாமம் பரிசுத்தப் படவேண்டும்,

சங். 72, 19; 100, 2; எசா. 6, 3; 42, 8; யோ. 17, 16; பிரார்த். 91.

260. இந்த மன்றாட்டிலே நாம் விசேஷமாய்க் கவனிக்க வேண்டியதென்ன?

தேவனுடைய நாமம் நம்மிடத்திலும், நம்முடைய இருதயங்களிலும், வீடுகளிலும், நம்முடைய தேசத்திலும் சாதியிலும் அர்ச்சிக்கப்பட வேண்டுமென்பதே.

யோசுவா. 24, 15. 24; சங். 115; 1 கொ. 10, 31; 1 பேது. 2, 9.

261. பராபரனுடைய நாமம் நம்மிடத்தில் அர்ச்சிக்கப்படுவதெப்படி?

அவர் தம்மை நமக்கு வெளிப்படுத்தின திருவசனம் தப்பிதமில்லாமல் நம்மிடத்தில் சுத்தமாய்ப் போதிக்கப்பட்டு நாம் அதின்படி பராபரனுடைய பிள்ளைகளுக்கொத்த ஞான நடத்தையாய் நடந்தால்தான்.

சங். 93, 5; மத். 5, 16; யோ. 17, 17; கொலோ. 3, 17; 2 தீமோ. 1, 13; 1 பேது. 1, 15.

262. அந்த நாமம் எதனால் அர்ச்சிக்கப்படாமல் தூஷணிக்கப்படும்?

கள்ளப்போதகத்தினாலும், தங்களைக் கிறிஸ்தவர்களென்று சொல்லுகிறவர்களுடைய துர்நடக்கையினாலும்தான்.

அனனியா, சப்பீராள் (அப். 5, 1—5); ரோ. 2, 23. 24.

263. ஆதலால் முதலாம் மன்றாட்டை எப்படி விரித்து மன்றாடலாம்?

அன்புள்ள பரமதகப்பனே, உம்முடைய திருவசனம் எப்போதும் எங்களிடத்தில் தப்பிதமில்லாமல் சுத்தமாய்ப் போதிக்கப்பட்டு நாங்கள் உமது பிள்ளைகளுக் கொத்தபடி அதன்படி நடக்க எங்களுக்குத் துணைசெய்தருளும் என்று மன்றாடலாம்.

பிரார்த். 79, 2. 3; 116, 1; 122, 9. 10.

---

## இரண்டாம் மன்றாட்டு.

வினா:—இரண்டாம் மன்றாட்டேன்ன?

விடை:—உம்முடைய இராச்சியம் வருவதாக.

வினா:—நாம் இப்படி மன்றாடுவதற்கு அர்த்தம் என்ன?

விடை:—பராபரனுடைய இராச்சியம் நம்முடைய மன்றாட்டில்லாமல் வரும் ஆனால் அது நம்மிடத்திலேயும் வரவேண்டுமென்று இந்த மன்றாட்டிலே மன்றாடுகிறோம்.

வினா:—அவருடைய இராச்சியம் நம்மிடத்தில் வருவதெப்படி?

விடை:—நாம் அவருடைய கிருபையினால் அவருடைய பரிசுத்த வசனத்தை விசுவசித்து இம்மையிலும் மறுமையிலும் தேவ சாயலாய்ப் பிழைத்து நடக்க பரமபிதா தமது பரிசுத்த ஆவியை நமக்குக்கொடுத்தால் அவருடைய இராச்சியம் நம்மிடத்தில் வரும்.

264. இரண்டாம் மன்றாட்டை நாம் எதற்காக மன்றாடுகிறோம்?

தேவனுடைய இராச்சியம் பரம்பி மகிமை இராச்சியமாக நிறைவேறுவதற்காகத்தான்.

கடுகுவிதை (மத். 13, 31. 32); இராசாவின் கலியாணம் (மத். 22, 1. 14); மாற். 1, 15; தீமோ. 2, 13.

265. தேவனுடைய இராச்சியத்தின் வருகைக்கு நம்முடைய ஜெபம் ஏன் அவசியமில்லை?

அது நம்முடைய ஜெபமில்லாமலும் உலகமெங்கும் மகிமையாய் பரம்பும்.



தானாய் வளரும் பயிரைப்பற்றிய உவமை (மாற். 4, 26. 29); மத். 24, 14; யோவா 10, 16.

266. அப்படியிருந்தாலும் நாம் ஏன் அது வர வேண்டுமென்று ஜெபிக்கிறோம்?

அது நம்முடைய மன்றாட்டில்லாமல் நம்மிடத்தில் வந்து தங்க மாட்டாது.

லூக். 11, 13.

267 அது நம்மிடத்தில் வருவதெப்படி?

பரிசுத்த ஆவியானவர் நமக்குள் விசுவாசத்தையும் புதிய ஞான உயிரையும் உண்டாக்குவதால்தான்.

லூக். 17, 20. 21; யோவா. 6, 29; ரோ. 14, 17; 1 கொ. 4, 20; பிரார்த். 99, 4.

268. ஆதலால் நாம் இரண்டாம் மன்றாட்டை எப்படி விரித்து மன்றாடலாம்?

அன்புள்ள பரமதகப்பனே, உமது பரிசுத்த ஆவியை எங்களுக்குக் கொடுத்து எங்களையும் முழு உலகத்தையும் உமது குமாரனாகிய இயேசுகிறிஸ்துவுக்குக் கீழ்ப்படுத்தி அவருடைய மகிமையில் எங்களுக்குப் பங்கு கொடுத்தருளும் என்று மன்றாடலாம்.

மத். 9, 37. 38; 2 தெச. 3, 1.

---

## மூன்றும் மன்றாட்டு.

வினா:—மூன்றும் மன்றாட்டேன்ன?

விடை:—உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறது போல் பூமியிலேயுஞ் செய்யப்படுவதாக.

வினா:—நாம் இப்படி மன்றாடுவதற்கு அர்த்தம் என்ன?

விடை:—[illegible] கிருபையுமுள்ள சித்தம் நம்முடைய மன்றாட்டில்லாமல் செய்யப்படும். ஆனால் அது நம்மிடத்திலேயுஞ் செய்யப்பட வேண்டுமென்று இந்த மன்றாட்டிலே மன்றாடிக் கொள்ளுகிறோம்.

வினா:—அவருடைய சித்தம் நம்மிடத்தில் செய்யப்படுவதெப்படி?

விடை:—பராபரன் தம்முடைய நாமம் அர்ச்சிக்கப்படவுந் தம்முடைய இராச்சியம் வரவும் ஒட்டாதிருக்கிற பிசாசு, லோகம், மாமிசம் என்றவைகளின் ஆலோசனையையுஞ் சித்தத்தையும் முறித்துத் தடுத்து, நம்மை தம்முடைய வசனத்திலேயும்

விசுவாசத்திலேயும் மரணபரியந்தம் திடப்படுத்திக் காப்பாற்றினால் அவருடைய நன்மையுங் கிருபையுமுள்ள சித்தம் நம்மிடத்தில் செய்யப்படும்.

269. இவ்விடத்தில் தேவனுடைய சித்தம் என்பதென்ன?

தமது நாமம் அர்ச்சிக்கப்படவும் தமது இராச்சியம் வரவும் தேவன் பரிசுத்த அன்போடு உலகத்துக்கும் நமக்கும் நிர்ணயித்த யாவும் தான்?

1 தீமோ. 2.

யோவா. 6, 39. 40; எபே. 1, 5.

270. ஆகையால் இந்த மன்றாட்டில் நாம் மன்றாடுவதென்ன?

பரமண்டலத்தில் தேவதூதர்களாலும் பரிசுத்தவான்களாலும் செய்யப்படுவதுபோல்அவருடைய சித்தம் பூமியிலேயும் செய்யப்பட வேண்டுமென்பதே."

சங். 103, 20. 21; அபி. 7, 15.

271. நாம் ஏன் இப்படி மன்றாட வேண்டும்?

தேவன் தமது சித்தத்தை நமது மன்றாட்டில்லாமலும் செய்வார். ஆயினும் அது நம்மிடத்திலேயும் செய்யப்பட வேண்டும்..

சங். 33. 9—11; 143, 10; ரோம. 11, 33-36; பிரார்த். 109, 4; 91, 2.

272. பராபரனுடைய சித்தம் நம்மிடத்தில் செய்யப்படுவதெப்படி?

அவருடைய சித்தம் எப்போதும் நன்மையும் கிருபையுமுள்ளது என்று நாம் நிச்சயமாய் விசுவாசித்து அவர் நமக்கு அனுப்பும் எல்லா இன்பம் துன்பங்களிலும் அவருடைய எல்லாக் கற்பனைகளுக்கும் சந்தோஷத்தோடும் உற்சாகத்தோடும் கீழ்ப்படிவதால் தான்.

ரோ. 12, 12; நம்பிக்கையிலே சந்தோஷமாய் இருங்கள் உபத்திரவத்திலே பொறுமையாயிருங்கள் ஜெபத்திலே உறுதியாய்த் தரித்திருங்கள்.

யோபு. (யோபு. 1, 11); இயேசுநாதர் (மத். 26, 36—46); எசா. 55, 89; எரே. 29, 11; 1 பேது 4, 19; 5, 6; பிரார்த். 113, 109; 246. 99, 10. 11.

273. இப்படி அவருக்குக் கீழ்ப்படிவது எதனால் பாரமாகிறது?

கிருபையும் நன்மையும் உள்ள தேவசித்தத்தை விரோதித்து நம்மை கெடுக்கப் பார்க்கிற பிசாசு, லோகம், மாமிசம் என்றவைகளின் துராலோசனையினாலும் சித்தத்தினாலும் தான்,



கோதுமையும் களையும் (மத். 13, 36-43); 1 பேது 5, 8. 9; 1 யோ 5, 19; ரோமர் 8, 7; பிரார்த். 214, 4—7.

274. தேவனுடைய சித்தம் நம்மிடத்தில் செய்யப்படுவதற்கு எது அவசியம்?

தேவன் எல்லாத் துராலோசனையையும் சித்தத்தையும் மறுத்துத் தடுத்து நம்மைத் தம்முடைய வசனத்திலேயும் விசுவாசத்திலேயும் திடப்படுத்திக் காப்பாற்றுவதே.

ஏரோது (மத். 2, 13. 14); 1 மோ. 50, 20; சங். 33, 10; 2 தெச. 3, 3; 1 பேது. 5, 10; எபி. 13, 21; பிரார்த். 263, 6.

275. ஆகையால் இந்த மன்றாட்டை எப்படி விரித்து ஜெபிக்கலாம்?

அன்புள்ள பரமதகப்பனே கர்த்தாவின் சித்தம் நல்லதே அதின்படி ஆகட்டும் என்று சொல்லி எல்லாச் சோதனைகளிலும் பொறுமையாயும் விசுவாசமாயும் நிலைத்திருக்க எங்களைப் பலப்படுத்திக் காப்பாற்றியருளும் என்று ஜெபிக்கலாம்.

எரே. புலம்பல் 3, 26; கர்த்தருடைய இரட்சிப்புக்குக் காத்தும் அமர்ந்தும் இருக்கிறது நல்லது.

1 சாமு. 3, 18; எபி. 10, 36. பிரார்த் 245; 246.

---

## நாலாம் மன்றாட்டு.

வினா:—நாலாம் மன்றாட்டேன்ன?

விடை:—அன்றன்றுள்ள எங்கள் அப்பத்தை எங்களுக்கு இன்று தாரும்.

வினா:—நாம் இப்படி மன்றாடுவதற்கு அர்த்தமென்ன?

விடை:—பராபரன் எல்லா மனிதருக்கும் பொல்லாதவர்களுக்குங் கூட அன்றன்று வேண்டிய அப்பத்தை நம்முடைய மன்றாட்டில்லாமல் கொடுத்துக் கொண்டுவருகிறார். ஆனால் நாம் நமது அன்றாடக அப்பத்தை அவர் கையிலிருந்து பெற்றுக்கொண்டு நன்றியறிதலோடு சாப்பிடுவதற்கான புத்தியை நமக்குத் தந்தருள வேண்டுமென்று இந்த மன்றாட்டிலே மன்றாடிக்கொள்ளுகிறோம்.

வினா:—அன்றன்றுள்ள அப்பமாவதென்ன?

விடை:—அன்னம், பானம், வஸ்திரம், வீடு, வாசல் நிலம், ஆடு, மாடு, பணம் முதலிய உலகத்துக்கடுத்தவைகளும், உத்தம வஸ்துக்களும், பத்தியுள்ள சமுசாரம் பிள்ளைகள் பணிவிடைக்காரர்களும்,

மும் உண்மையுமுள்ள அதிகாரிகளும் நல்ல ஆளுகையும், சமாதானமும், காலசவுக்கியமும், சரீரசவுக்கியமும் ஒழுக்க வணக்கமும், நற்சிநேகசம்பந்தமும் அயலகத்தாருறவும் இவை முதலிய இச்சீவனுக்குத் தேவையானவைகளெல்லாம் நமது அன்றன்றுள்ள அப்பமென்று சொல்லப்படும்.

276. இந்த மன்றாட்டிலே நாம் எதற்காக ஜெபிக்கிறேம்?

நாம் பிழைப்புக்கு வேண்டிய எல்லாவற்றையும் யோக்கியமாய்ச் சம்பாதித்து அதைச் சுசத்தோடும் சந்தோஷத்தோடும் அனுபவிக்கும்படி தேவன் நமக்கு ஒத்தாசை செய்ய வேண்டுமென்பதற்காகவே.

277. நாம் இந்த மன்றாட்டு அவ்வளவு அவசியம் அல்லவென்று ஓர்வேளை நினைக்கிறதந்குக் காரணம் என்ன?

பராபரன் தமது பேரன்பினலே அன்றன்றுள்ள அப்பத்தை நமது மன்றாட்டில்லாமல் நமக்கும் பொல்லாதவர்களுக்கும் கூடக் கொடுக்கிறார்.

மத். 5, 45.

278. அப்படியிருந்தாலும் நாம் அன்றன்றுள்ள அப்பத்துக்காக ஏன் ஜெபிக்கிறேம்?

நாம் அதைப் பெற்றுக்கொள்வதற்கு மாத்திரம் அல்ல தேவன் அதைத் தயவாய்க் கொடுக்கிறார் என்று அறியும்படிக்கும் நாம் அதை நன்றியறிதலோடு வாங்கும்படிக்கும் தான். அப்போது மாத்திரம் அது நமக்கு ஆசீர்வாதத்துக்கென்று பலிக்கும்.

இயேசுநாதர் இருமுறை அநேகரைப் போஷித்த திருஷ்டாந்தம். (மத். 14, 13—21; 15, 32—39); சங். 145, 15, 16. 1 தீமோ. 4, 4. 5; யாக். 1, 17; பிரார்த். 99, 10.

279. அன்றன்றுள்ள என்கிற வார்த்தைக்கு அர்த்தம் என்ன?

நாம் நம்முடைய சொந்த கையால் நமது பிழைப்புக்கு வேண்டியதைச் சம்பாதித்துப் போதும் என்ற மனதுடனே நமது சொந்த அப்பத்தை சாப்பிடவேணும் என்பதே.

நீதி. 30, 8; மாயையையும் பொய் வசனிப்பையும் எனக்குத் தூரமாக்கும். தரித்திரத்தையும் ஐஸ்வரியத்தையும் எனக்குக் கொடாதேயும்.

2 தெச. 3, 10—12; 1 தீமோ. 6, 6—10; எபி. 13, 5.

280. எங்களுக்குத் தாரும் என்று கர்த்தர் ஏன் சொல்லச் சொல்லுகிறர்?

நமக்காக மாத்திரம் அல்ல நமது சகோதரனை பிறத்தியானுக்காகவும் நாம் கவலைப்பட்டு ஜெபிக்க வேண்டியபடியினலேதான்.



ஏசா. 58, 7; 1 யோ. 3, 17; எபி. 13, 16.

281. இன்று என்று ஏன் சொல்லச் சொல்லுகிறர்?

நாம் மன சஞ்சலத்தோடு வரும் காலத்துக்காகக் கவலைப்படாமல் அன்றன்றுள்ள அப்பத்துக்காக ஜெபிக்க வேண்டுமென்கிறார்.

மத். 6, 31—34; 1 பேது. 5, 7; பிரார்த். 113, 2.

---

## ஐந்தாம் மன்றாட்டு.

வினா:—ஐந்தாம் மன்றாட்டு என்ன?

விடை:—எங்கள் கடன்காரருக்கு நாங்கள் மன்னித்து விடுகிறதுபோல் நீரும் எங்கள் பாவக் கடன்களை எங்களுக்கு மன்னித்துவிடும்.

வினா:—இதன் அர்த்த மென்ன?

விடை:—பரமண்டலங்களிலிருக்கிற பிதா நமது பாவங்களைப் பாராமலும் அவைகளின் நிமித்தம் நமது மன்றாட்டுகளை அல்லத்தட்டாமலும் எல்லாவற்றையும் கிருபையாய்க் கொடுத்தருள வேண்டுமென்று இந்த மன்றாட்டிலே மன்றாடுகிறேம். ஏனெனில் நாம் கேட்கிற மன்றாட்டுகளில் யாதொன்றுக்கும் பாத்திரராயிராமலும் அதற்குப் பாத்திரமான கிரியைகளைச் செய்யாமலும் அநுதினமும் மிகுதியாய்ப் பாவங்களைச்செய்து ஆக்கினைக்கு மாத்திரம் பாத்திரராயிருக்கிறேம். ஆகிலும் அந்தப்படி நாமும் நமக்குப் பொல்லாங்கு செய்தவர்களுக்கு முழுமனதோடே மன்னித்துக் கொண்டு சந்தோஷத்துடனே அவர்களுக்கு நன்மை செய்யச் சித்தமாயிருக்கிறேம்.

282. நாம் தேவனுக்குமுன் எதனால் குற்றமுடையவர்களாகிறேம்?

அவரை அநுதினமும் கோபப்படுத்தி நம்மை அவருடைய தண்டனைக்குட்படுத்துகிற நம்முடைய பாவத்தினலும் மீறுதலினலும் தான்.

சங். 38, 5; 51, 6; லூக். 5, 8; யாக். 2, 10.

283. இந்தக் குற்றம் நம்மை விட்டு நீங்குவதெப்படி?

தேவன் அதை நமக்குக் கிருபையாக மன்னிப்பதால் மாத்திரம்.

சங். 19, 13; மத். 18, 23—27; பிரார்த். 166, 2—8; 167, 1.

284. ஆதலால் அனுதினமும் ஜெபிக்க வேண்டுவ தென்ன?

பரமதகப்பன் கிறிஸ்துவின் முகத்தைப் பார்த்து நமது பாவங்களைப் பாராமலும் அவைகளை நினையாமலும் இருக்க வேண்டும் என்பதே.

சங். 25, 7; 51, 11; 130, 3; லூக். 15, 18—21; 18, 13. பிரார்த். 162, 1—2.

285. அப்பேர்ப்பட்ட மன்றாட்டை நாம் எப்போது மாத்திரம் சந்தோஷத்தோடும் முழு நம்பிக்கையோடும் ஜெபிப்போம்?

நம்மை வருத்தப்படுத்தினவர்களுக்கு மன்னிக்கவும் பிறர் நமக்குச் செய்த துரோகத்தை நினையாமல் தீமைக்குப் பதிலாக நன்மை செய்யவும் நாம் தயாராயிருக்கும் போதெல்லாம்.

மத். 18, 21—35; இயேசுநாதர் (லூக். 23, 34); ஸ்தேவான் (அப். 7, 59); மத். 5, 23—25; 6, 14. 15; ரோ. 12, 20; எபேசி. 4, 32; பிரார்த்தனை 77, 3.

---

## ஆறாம் மன்றாட்டு.

வினா:—ஆறாம் மன்றாட்டென்ன?

விடை:—எங்களைச் சோதனைக்குட் பிரவேசிக்கப் பண்ணாதிரும்.

வினா:—இதற்கர்த்த மென்ன?

விடை:—பராபரன் ஒருவனையுஞ் சோதிக்கிறதில்லை. ஆனால் பிசாசு, லோகம், மாமிசம் என்றவைகள் அவிசுவாசம், அவநம்பிக்கை முதலான கனபாவதோஷங்களிலேயுந் துன்மார்க்கங்களிலேயும் நம்மை உட்படுத்தி மோசம் போக்காதபடிக்கும் நாம் அவைகளால் சோதிக்கப்பட்டாலும் வெல்லப்படாமல் முடிய அவைகளை ஜெயிக்கும்படிக்கும் அவர் நம்மை காத்து நடத்த வேண்டுமென்று இந்த மன்றாட்டிலே மன்றாடிக்கொள்ளுகிறோம்.

286. சோதனைக்குள் பிரவேசிக்கப் பண்ணுவதென்றால் என்ன?

நம்மை பாவம் செய்யக் கூடிய மோசமான நிலைமைக்குட்படுத்துவது தான்.

யோபு. 1+2; மத். 4, 1; லூக். 4, 1.

287. நம்மை தீமைக்கு ஏவுகிறதார்?



பிசாசு, லோகம், மாமிசம், என்ற தேவனுடைய விரோதிகளே அல்லாமல் அவர் ஒருபோதும் நம்மைத் தீமைக்கு ஏவுகிறதில்லை.

யாக். 1, 13—14; சோதிக்கப்படுகிற ஒருவனும் பராபரனால் சோதிக்கப்படுகிறேன் என்று சொல்ல வேண்டாம். ஏனென்றால் பராபரன் பொல்லாங்குகளால் சோதிக்கப்படாதவருமாயிருக்கிறார். ஒருவனையும் அவர் சோதிக்கிறவருமல்ல. அவனவன் தன் சுய இச்சையால் இழுப்புண்டு ஆசைபதம் தோன்றி சோதிக்கப்படுகிறான்.

மத். 18, 7; கலா. 5, 16. 17; 1 பேது. 5, 8; 1 யோவா. 2, 15—17.

288 அவைகள் நம்மை எதற்குச் சோதிக்கின்றன?

நாம் தப்பான விசுவாசத்தினாலாவது அவநம்பிக்கையினாலாவது பராபரனை விட்டுப் பாவத்திற்குச் சம்மதிப்பதற்கே.

1 மோ. 4, 13; எரே. 17, 9; மத். 26, 33—35; மத். 27, 3—5; லூக். 8, 12; 15, 13; கலாத். 5, 19—21.

289. அவைகள் தங்கள் நோக்கத்தை எதினால் நிறைவேற்றப் பார்க்கின்றன?

தேவனுக்கு ஊழியம் செய்வது பைத்தியமும் பாரமான அடிமைத்தனமும் என்றும் பாவத்துக்கு ஊழியம்செய்வது நம்மை விடுதலையாக்கி நமக்கு ஞானமும் பாக்கியமும் தருகிறதென்றும் நயமும் பயமுமாய் நமக்குக் காட்டுவதால் தான்.

முதல் பாவம் (1 மோ. 3, 1—6); பிலேயாம் (4 மோ. 22, 16. 17; இயேசுநாதருடைய சோதனை (மத். 4, 8—9); குருடனாய்ப்பிறந்தவன் (யோவா. 9, 24—34); யோவா 8, 31—36; 2 கொரி. 11, 14; யாக். 4, 4.

290. நமது பெலவீனத்தை அறிந்து நாம் எதற்காக ஜெபிப்போம்?

தேவன் நம்மை சோதனைக்குக் காப்பாற்ற வேண்டுமென்றும் நாம் அதற்குட்பட்டாலும் நாம் பொல்லாங்குகளை தோற்கடிக்கும்படி நம்மை பெலப்படுத்தி இரட்சிக்க வேண்டுமென்றும் மன்றாடுவோம்.

யோவா. 16, 33. உங்களுக்கு என்னில் சமாதானம் உண்டாயிருக்கும்படி இவைகளை உங்களுக்குச் சொன்னேன். லோகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு, ஆனால் திடன்கொள்ளுங்கள், நான் லோகத்தை ஜெயித்தேன் என்றார்.

1 கொரி. 10, 12—13. ஆனபடியினாலே நிற்கிறவனாக தன்னை எண்ணுகிறவன் விழாதபடிக்குப் பார்க்கக் கடவான். மனுஷ சோதனை அல்லாமல் வேறே சோதனை

உங்களைப் பிடித்ததில்லை. பராபரனே உண்மையாயிருக்கிறார் அவர் உங்கள் பலத்துக்கு மிஞ்சினதாய் நீங்கள் சோதிக்கப்படவொட்டாமல் நீங்கள் உத்தரிக்கக் கூடும்படி சோதனையுடனேகூட போக்கையும் உண்டாக்குவார்.

மத். 18, 7; யோ. 17, 15; 1 பேது. 4, 12; பிரார்த். 264, 1—3.

291. இந்த மன்றாட்டின்படி நமக்கு ஏற்படும் கடமை என்ன?

நாம் பாவம் செய்வதற்கான சமயங்களைத் தேடாமலும் பொல்லாத எண்ணங்களை நமது இருதயத்திலே வைக்காமலும் எப்பொழுதும் விழித்து ஜெபம்பண்ணி சோதனை வரும்போது தேவவசனத்தைக்கொண்டு அதை மேற்கொள்ள வேண்டுமென்கிற கடமை தான்.

மத். 26, 41. நீங்கள் சோதனைக்குட்படாதபடி விழித்திருந்து ஜெபம் பண்ணுங்கள். ஆவி மனதுள்ளதுதான் மாமிசமோ பலனற்றிருக்கிறது.

யாக். 1, 12. சோதனையைச் சகிக்கிற மனிதன் பாக்கியவான். ஏனென்றால் அவன் உத்தமனானபின்பு கர்த்தர் தம்மை நேசிக்கிறவர்களுக்கு வாக்குத்தத்தம்பண்ணின ஜீவகிரீடத்தைப் பெறுவான்.

இயேசுநாதர் (மத். 4, 1—11); (எபி. 2, 18); எபே. 6, 10—17. யாக்கோ. 4, 7; பிரார்த். 44, 5; 214.

---

## ஏழாம் மன்றாட்டு.

வினா:—ஏழாம் மன்றாட்டென்ன?

விடை:—தீமையிலிருந்து எங்களை இரட்சித்துக்கொள்ளும்.

வினா:—இதற்கர்த்த மென்ன?

விடை:—பரமண்டலங்களிலிருக்கிற பிதா ஆத்மாவுக்குஞ் சரீரத்திற்கும் பொருள்களுக்குங் கனத்திற்கும் விக்கினமான எல்லா தீமைகளிலுமிருந்து நம்மை இரட்சித்து, நாம் சாகும் நேரத்தில் நமக்குப் பாக்கியமான மரணத்தை அளித்து அழுகையின் பள்ளத்தாக்காகிய இந்த லோகத்திலிருந்து பரலோகத்திலே தம்மண்டைக்கு நம்மைக் கிருபையாய் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று எல்லாவற்றிற்குந் தொகுப்பாய் இந்த மன்றாட்டிலே மன்றாடிக்கொள்ளுகிறோம்.

292. ஏழாம் மன்றாட்டு நமது ஜெபங்களின் தொகை யென்று ஏன் சொல்லப்பட்டிருக்கின்றது?



தீமையிலிருந்து இரட்சித்துக்கொள்ளும் என்கிற மன்றாட்டிலே நம்முடைய எல்லா ஜெபமும் அடங்கி இருப்பதால்.

293. பரமதகப்பன் நம்மை எந்தத் தீமையிலிருந்து இரட்சிக்க வேண்டும்?

பாவத்தினால் உண்டாகிய நமது சரீரத்தையும், ஆத்துமத்தையும், பொருளையும், கீர்த்தியையும் கெடுத்து பூமியை அழுகையின் பள்ளத்தாக்காக்கும் பாவத்தால் உண்டான சகல பொல்லாப்பிலிருந்தும் தான்.

சங். 90, 10. எங்கள் ஆயுசு நாட்களில் எழுபது வருஷமும் வெகு பலத்திருந்தால் எண்பது வருஷமும் உண்டு. அவைகளில் மேன்மையானதோவென்றால் பிரயாசமும் வீணுந்தானே. ஏனெனில் கடுக அறுப்புண்டு பறந்து போகிறோம்.

1 மோ. 3, 17—19; யோபு. 7, 1—3; அப். நட. 14, 22; ரோம. 8, 20—23.

294. பரிபூரண ரட்சிப்பு எப்போது வரும்?

நித்திய ஜீவனும் நீதியும் வாசம் பண்ணுகிற புது பூமியிலே தான். அங்கே தேவன் எல்லாக் கண்ணீரையுந் துடைப்பார்.

ரோ. 8, 18. ஏனென்றால் இக்காலத்துப் பாடுகள் நம்மில் வெளிப்படப்போகிற மகிமைக்குப் பாத்திரமானவைகள் அல்ல என்று எண்ணுகிறேன்.

சங். 126, 5. 6; ஏசா. 60, 20; 2 பேது. 3, 13; எபி. 4, 9; அபி. 7, 14—19; 21, 3—4.

295. ஆகையால் நாம் விசேஷமாய் எதற்காக ஜெபிக்கிறோம்?

பாக்கியமான முடிவுக்காகத் தான்.

சங். 31, 6; லூக். 2, 29; 2 தீமோ. 4, 18; அபி. 14, 13; பிரார்த். 201, 3; 109, 12; 306; 312, 1; 309, 1.

296. இப்பூமியிலும் பரமதகப்பன் நம்மைத் தீமையிலிருந்து எப்படி இரட்சிக்கிறார்?

அவர் அதை நீக்கி அல்லது அதைச் சுமக்கத் துணையாய் இருந்து அதை நமது நன்மைக்கென்றே பலிக்கச் செய்வதால் தான்.

யோபு. 5, 19; சங். 42, 12; 63, 20. 21; 121, 5.—8; ரோம. 8, 28; 2 கொரி. 1, 8—10; 12, 7—9; பிரார்த். 264; 109, 6. 9. 10; 263; 246; 99, 11.

297. பூலோகத்தின் தீமை நமது நன்மைக்கென்று பலிப்பது எப்படி?

நமது பொறுமையை அதிகரிக்கச் செய்து, பாவத்தின்மேல் வெறுப்பையும் புண்ணியத்தின்மேல் வாஞ்சையையும் நம்மில் உண்டாக்கி நம்மைப் பெலப்படுத்தி வளர்க்கும் எத்தனமாய் நமது பரமதகப்பன்.

ரோம. 5, 3—5; 12, 12; 2 கொரி. 4, 17. 18; எபி. 10, 36; 12, 5. 7. 11; யாக். 1, 2—4. 12; பிரார்த். 99, 10.

நமக்கு வரும் தீமையைக் கையசடுவதால் அது நமது நன்மைக்கென்று பலிக்கும்.

---

## கர்த்தருடைய ஜெபத்தை முடிக்கிற வார்த்தை.

வினா:—கர்த்தருடைய ஜெபத்தை முடிக்கிற வார்த்தை என்ன?

விடை:—அதேதெனென்றால் ராச்சியமும் வல்லமையும், மகிமையும் உமக்கென்றைக்கும் உண்டாயிருக்கிறது. ஆமென்.

வினா:—ஆமென் என்கிற வார்த்தைக்கு அர்த்தம் என்ன?

விடை:—இந்த மன்றாட்டுகள் பரமண்டலங்களிலிருக்கிற பிதாவுக்குப் பொருந்தினவைகள் என்றும் அவர் அவைகளைக் கேட்டுக் கொடுக்கிறார் என்றும் நாம் நிச்சயித்துக் கொள்ள ஆமென் என்கிற வார்த்தையைச் சொல்லுகிறோம். ஏனென்றால் நாம் இப்படி மன்றாட அவர் தாமே நமக்குக் கற்பித்து நமது மன்றாட்டைக் கேட்டு அருளிச் செய்வோமென்று வார்த்தைப்பாடு கொடுத்தார். ஆமென் ஆமென் என்கிறது மெய்யாகவே மெய்யாகவே அப்படியே ஆகும் என்பதாம்.

298. கர்த்தருடைய ஜெபத்தை எப்படி முடிக்கிறோம்?

பரமதகப்பனுடைய நித்திய ஆளுகையையும் வல்லமையையும் மகிமையையும் குறித்த விசுவாசத்தோடு ஆமென் என்று சொல்லி முடிக்கிறோம். 1 நாளா. 29, 10—12; எபே. 3, 20. 21.

299. ஆமென் என்கிற வார்த்தையை எதற்காகச் சேர்க்கிறோம்?

இந்த மன்றாட்டுகள் பரமதகப்பனுக்குப் பொருந்தினவைகள் என்றும் அவர் அவைகளைக் கேட்டு கொடுக்கிறார் என்றும் நிச்சயத்துக் கொள்ளுவதற்காகத் தான்.

யாக். 1, 6—7.

300. அவைகள் அவருக்கு ஏன் பொருந்தினவைகள்?



ஏனென்றால் அவர் தாமே தமது குமாரனைக் கொண்டு அவ்வாறு ஜெபிக்கக் கற்பித்தார்.

301. அவர் அவைகளைக் கேட்டுக் கொடுப்பார் என்பது எதனால் நமக்கு நிச்சயம்?

இயேசுவின் நாமத்தில் நாம் கேட்கிறதையெல்லாம் தாமும் தமது தகப்பனும் கொடுப்பதாக இயேசுநாதர் தாமே வாக்களித்திருக்கிறார்.

மத். 7, 7; கேளுங்கள் அப்போது உங்களுக்குக் கொடுக்கப்படும், தேடுங்கள் அப்போது கண்டு பிடிப்பீர்கள் தட்டுங்கள் அப்போது உங்களுக்குத் திறக்கப்படும்.

யோ. 16, 23; 2 கொரி. 1, 20; பிரார்த். 211, 6—8.

302. இயேசுவின் நாமத்தில் ஜெபிப்பது என்றால் என்ன?

அவரை நம்பி அவருடைய சித்தத்திற்கு ஏற்ற பிரகாரம் ஜெபிப்பது தான்.

1 யோ. 5, 14.

303. அவர் கேட்பார் என்கிற நிச்சயத்தை கடைசியில் எதனாலே தெரிவிக்கிறோம்?

ஆமென் என்கிற வார்த்தையினாலே தான். வேதத்திலிருந்து எடுக்கப்பட்ட இந்த எபிரேய வார்த்தைக்கு மெய்யாகவே மெய்யாகவே அப்படியாகும் என்கிற அர்த்தம் உண்டு.

1 நாளா. 16, 36; சங். 41, 14; 72, 19; எரே. 28, 6; 2 கொரி. 1, 20; பிரார்த். 212, 9; 278, 5.

---

# நான்காம் ஆதி நியாயம்.

## ஞானஸ்நானக் கட்டளை.

### I. முதலாவது.

வினா:—ஞானஸ்நான மாவதென்ன?

விடை:—ஞானஸ்நானம் வெறுந் தண்ணீராயிராமல் அது பராபரனுடைய கற்பனையினால் ஸ்தாபிக்கப்பட்டதும் அவருடைய வசனத்தோடு கூடியதுமான தண்ணீராயிருக்கிறது.

வினா:—பராபரன் கற்பித்த அந்த வசன மென்ன?

விடை:—பரிசுத்த மத்தேயு எழுதின கடைசி அதிகாரத்தில் நமது கர்த்தராகிய இயேசுகிறிஸ்து திருவுளம் பற்றினது தான். அதாவது நீங்கள் (லோகமெங்கும்) போய்

சகல சாதிகளையும் சீஷராக்க அவர்களுக்குப் பிதாக் குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே ஞானஸ்நானம் கொடுங்கள் என்பதே.

304. ஞானஸ்நானத்தில் நாம் பார்க்கக் கூடிய வஸ்து என்ன?
தண்ணீர்.

305. இந்தத் தண்ணீரோ எத்தன்மையானது?

அது பராபரனுடைய கற்பனையினால் ஸ்தாபிக்கப்பட்டதும் அவருடைய வசனத்தோ கூடியதுமான தண்ணீர்.

எபே. 5, 26; பிரார்த். 133, 5. 6.

306. பராபரன் கற்பித்த அந்த வசன மேன்ன?

பரிசுத்த மத்தேயு எழுதின கடைசி அதிகாரத்தில் நமது கர்த்தராகிய இயேசுகிறிஸ்து திருவுளம் பற்றினது தான். அதாவது: நீங்கள் (லோகமெங்கும்) போய் சகல சாதிகளையும் சீஷராக்க அவர்களுக்குப் பிதாக் குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே ஞானஸ்நானம் கொடுங்கள் என்பதே.

307. இந்தக் கட்டளையில் இன்னம் என்ன அடங்கியிருக்கிறது?

தண்ணீரோடு கூடிய தேவ வசனம்.

303. கிறிஸ்துவின் கட்டளைப்படியோ நாம் எப்படி ஞானஸ்நானங் கொடுக்கவேண்டும்?

பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே தான்.

309. ஆகையால் வாஸ்தவத்தில் ஞானஸ்நானம் கொடுக்கிறதார்?

பிள்ளையைத் தமது ஐக்கியத்தில் சேர்த்துக் கொள்ளுகிற திரியேக பராபரன் தான்.

கலா. 3, 26. 27; எனெனில் எல்லாரும் கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவாசத்தினாலே பராபரனுடைய பிள்ளைகளாயிருக்கிறீர்கள். ஏனென்றால் கிறிஸ்துக்குள் எத்தனை பேர் ஞானஸ்நானம் பெற்றீர்களோ அத்தனை பேரும் கிறிஸ்துவைத் தரித்துக் கொண்டீர்கள். பிரார்த். 132, 2.

310. ஆகலால் ஞானஸ்நானம் பெற வேண்டியவர்கள் யார்?

வானராச்சியத்தில் சேர விரும்புகிற எல்லா மனுஷருக்குந் தான். யோ. 3, 5, அப். நட. 2, 38.

---



## II. இரண்டாவது.

வினா:—ஞானஸ்நானத்தால் உண்டாகும் பிரயோசனம் என்ன?

விடை:—அதினால் பாவங்கள் மன்னிக்கப்பட்டு மரணமும் பிசாசின் வல்லமையும் நீங்கிப்போய் நித்திய மோட்சம் கொடுக்கப்படும். ஏனென்றால் பராபரன் இதற்காகத் திருவுளம் பற்றின வசனமும் கொடுத்த வார்த்தைப்பாடும் எப்படிச் சொல்லுகிறதோ அப்படியே அவைகளை விசுவாசிக்கிற யாவருக்கும் ஞானஸ்நானத்தினால் கிடைக்கும்.

வினா:—பராபரன் இதற்காகத் திருவுளம் பற்றின வசனமும் கொடுத்த வார்த்தைப்பாடு மேன்ன?

விடை:—பரிசுத்த மாற்கு எழுதின கடைசி அதிகாரத்தில் நமது கர்த்தராகிய இயேசுகிறிஸ்து திருவுளம் பற்றினது தான். அதாவது விசுவாசித்து ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப் படுவான் விசுவாசியாதவனோ ஆக்கினைக் குள்ளாகத் தீர்க்கப்படுவான் என்பதே.

311. ஞானஸ்நானத்தால் எப்படிப் பாவங்கள் மன்னிக்கப்பட்டு மரணமும் பிசாசின் வல்லமையும் நீங்கிப்போகும்?

அதனால் நமது இரட்சகர் நம்மைத் தமது ஐக்கியத்தில் ஏற்றுக்கொண்டு தமது பாடுகள் மரணத்தினால் முழு மனுஷ சாதிக்காகவும் சம்பாதித்த இரட்சிப்பை நம்மில் ஒவ்வொருவருக்கும் சொந்தமாக்குகிறார்.

அப். நட. 2, 38; ரோ. 6, 3; 1 கொரி. 6, 11; கலா. 3, 26. 27;

கொலோ. 1, 12—14; பிரார்த். 133, 2—4; 132, 7.

312. ஞானஸ்நானத்தினால் நித்திய மோட்சம் எப்படிக் கொடுக்கப்படும்?

பராபரன் அதினால் நம்மைத் தமது பிள்ளைகளும் நித்திய ஜீவனின் சுதந்தரருமாக்கிக் கொள்ளுகிறார். ரோ. 8, 17; கலா. 4, 7.

313. நாம் ஞானஸ்நானத்தால் நித்திய மோட்சத்தை அடைவதற்குச் செய்ய வேண்டிய தென்ன?

ஞானஸ்நானத்தைப் பற்றி பராபரன் கொடுத்த வசனத்தையும் வார்த்தைப்பாடுகளையும் நாம் விசுவாசித்து ஏற்றுக்கொள்வது அவசியம். பிரார்த். 133, 7.

314. ஞானஸ்நானம் பெற்றும் ஆக்கினைக்குத் தப்பாதவன் ஆர்?

அதில் கொடுக்கப்பட்டதை அசட்டை பண்ணுகிற அவிசுவாசி. பிரார்த். 132, 6.

## III. மூன்றாவது.

வினா:—இத்தனை மகிமையான நன்மைகள் தண்ணீரால் வரக்கூடுவதெப்படி?

விடை:—இந்த நன்மைகள் தண்ணீரால் அல்ல அதோடு கூடிய பராபரனுடைய வசனத்தினாலும் அந்த வசனத்தை நம்புகிற விசுவாசத்தினாலுமே வரும். பராபரனுடைய வசனத்தையல்லாத தண்ணீர் ஞானஸ்நானமாயிராமல் வெறுந் தண்ணீராயிருக்கிறது. ஆனால் பராபரனுடைய வசனத்தோடு கூடிய தண்ணீர் ஞானஸ்நானமாயிருக்கிறது. அது கிருபையாய் இரட்சிக்கிற ஜீவதண்ணீரும் பரிசுத்த ஆவி நடப்பிக்கிற மறு ஜெனன முழுக்குமாம். இதைப்பற்றிப் பரிசுத்த பவுல் தீத்துவுக்கு எழுதின நிருபத்தின் மூன்றாம் அதிகாரத்திலே சொல்லுகிறதாவது: மறுஜெனனமாக்குதலும் பரிசுத்த ஆவியின் புதிதாக்குதலுமுடைய ஸ்நானத்தால் பராபரன் நம்மை இரட்சித்தார். அவர் பரிசுத்த ஆவியை நமது இரட்சகராகிய இயேசுகிறிஸ்துவினால் நம்முடைய பேரில் பரிபூரணமாக ஊற்றினார். நாம் அவருடைய கிருபையால் நீதிமான்களாக்கப்பட்டு, நாம் நம்புகிறபடி நித்திய ஜீவனின் சுதந்தரராவதற்கு அப்படிச் செய்தார் இது உண்மையான வார்த்தை.

315. இந்த வார்த்தைகளினால் நாம் அறியவேண்டியதென்ன?

ஞானஸ்நானத்தின் இரட்சிக்கிற வல்லமை தண்ணீரால் அல்ல பராபரனுடைய கட்டளையும் வார்த்தையுமாகத் தண்ணீரோடு கூடிய தேவவசனத்தினால் தான் விளங்கும்.

316. அதனால் ஞானஸ்நானம் என்ன எத்தனம் ஆகிறது?

பரிசுத்த ஆவி நம்மைப் பாவத்திலிருந்து எடுத்துத் தேவனுடைய பிள்ளைகளாக்கிக் கொள்ளும் கிருபையின் எத்தனந்தான். யோ. 3, 5. 6.

317. ஆதலால் அதற்கு என்ன பேருண்டு?

கிருபையாய் இரட்சிக்கிற ஜீவதண்ணீரும் பரிசுத்த ஆவி நடப்பிக்கிற மறு ஜெனன முழுக்கும் என்கிற பெயர்.

318. லுத்தர் இவ்விஷயத்தில் இன்னும் எதைக் கவனிக்கச் செய்கிறார்?

ஞானஸ்நானத்தினால் உண்டாகும் மகிமையான நன்மைகளை அடைவதற்கு உண்மையான விசுவாசம் தேவை என்பது.

---

## IV. நான்காவது.

வினா:—தண்ணீரால் ஞானஸ்நானம் கொடுக்கிறதென்பதற்கு ஞாய அர்த்தம் என்ன?

இன்னும் மீதியாயிருக்கிற நம்முடைய பழைய மனிதன் சகல பாவங்களோடும் ஆகாத இச்சைகளோடும் அனுதின மனஸ்தாபத்தினாலும் தவசினாலும் அமிழ்ந்திச் சாகவும் பராபரனுக்கு முன்பாக நீதியோடும் சுத்தாங்கத்தோடும் என்றென்றைக்கும் பிழை



க்கிற புதிய மனிதன் நம்மில் மறுபடியும் அநுதினமும் உயிர்த்தெழவும் வேண்டுமென்பதே அதற்கு அர்த்தமாம்.

வினா:—இது எவ்விடத்தில் எழுதியிருக்கிறது?

பரிசுத்த பவுல் ரோமருக்கு எழுதின நிருபத்தின் ஆறாம் அதிகாரத்திலே தான். அதாவது கிறிஸ்து பிதாவின் மகிமையினாலே மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டது போல் நாமும் நவமான ஜீவனில் நடந்துகொள்ளும்படிக்கு ஞானஸ்நானத்தினால் அவருடனே கூட மரணத்துக்குள் அடக்கம் பண்ணப்பட்டோம் என்பதே.

319. ஆதிச்சபையில் ஞானஸ்நானம் எப்படி கொடுக்கப் பட்டது?

ஞானஸ்நானத்தை விரும்புகிறவன் முழுவதும் தண்ணீரில் மூழ்குவான், இது முடியாத இடங்களில் தண்ணீரால் தெளிக்கப்படுவான்.

320. இப்படி மூழ்குவது என்ன அர்த்தம் கொள்ளும்?

ஞானஸ்நானம் பெற்றவன் சிலுவையில் அறையுண்டு உயிர்த்தெழுந்த இரட்சகரோடு அநுதினமும் செத்து உயிர்த்தெழ வேண்டுமென்பதே.

321. அநுதினமும் நம்மில் அமிழ்ந்திச் சாக வேண்டியதென்ன? மனிதன் என்கிற பழைய

ஆதாமின் பிள்ளைகளாகிய நமக்குள் இருக்கிற பழைய பாவக்குணம் தான்.

யோ. 3, 6; ரோ. 8, 13; கலா. 5, 24; எபே. 4, 22.

322. அநுதினமும் உயிர்த்தெழுந்து பலப்பட வேண்டியது எது? பிள்ளைகளுக்குள் இருக்கும் புதிய மனி

கிறிஸ்துவினால் மறுபடிப் பிறந்த தேவனுடைய தன் என்ற புதிய குணம். கொலோ. 3, 1—4. 10;

2 கொ. 5, 17; எபே. 4, 23—24;

323. ஆதலால் நாம் ஞானஸ்நானத்தால் நமக்கு ஏற்படும் கடமை என்ன? நம்மைப் பரிசுத்தப்படுத்த வேண்டு

நாம் அனுதின மனஸ்தாபத்தினாலும் தவசினாலும் [illegible] சாஸ்திரியார் [illegible] முழு மென்கிற கடமை தான். இதைப்பற்றி [illegible] சொல்லும்போது [illegible] என் இயேசுகிறிஸ்து குணப்படுங்கள் என்று [illegible] இருக்க வேண்டும் என்று [illegible] சீவியமும் இடைவிடாத குணப்படுதலா [illegible] பிராத். 2, 22, 6—8. 12. கிறார்.

மத். 16, 24; கலா. 5, 24; 1 பேத். 3, 8;

## V. பிள்ளைகளுடைய ஞானஸ்நானம்.

324. நீ ஞானஸ்நானம் பெற்றதெப்போது?

நான் பிறந்தபிற்பாடு என்னுடைய பெற்ரேர் என்னை ஞானஸ்நானத்துக்குக் கொண்டுவந்தார்கள். அப்போது என்னுடைய ஞானத்தாய்தகப்பன்மார் எனக்குப் பதிலாய்ப் பிசாசை விட்டுவிட வாக்களித்து, திரியேக பராபரனைப்பற்றிய விசுவாசத்தை அறிக்கையிட்டார்கள்.

325. முழுக்கிறிஸ்தவத் திருச்சபையிலும் சிறு பிள்ளைகளுக்கு ஞானஸ்நானம் ஏன் கொடுக்கப்படுகிறது?

அவர்களுக்குத் தேவையான பாவமன்னிப்பும் அவர்கள் சுதந்தரிக்க வேண்டிய வானராச்சியமும் மறுபிறப்பின் சாக்கிரமெந்தாகிய ஞானஸ்நானத்தால் மாத்திரம் அவர்களுக்குச் சொந்தமாகக் கிடைக்கக் கூடியதால் தான்.

மத். 18, 1—5; மாற். 10, 13—16; யோ. 3, 6.

326. எந்த நம்பிக்கையோடு சிறு பிள்ளைகளுக்கு ஞானஸ்நானம் கொடுக்கிறோம்?

ஞானஸ்நானம் பெற்ற பிள்ளைகள் தாங்கள் ஞானஸ்நானத்தால் பெற்றுக்கொண்ட நன்மையையும் கடமையையும் அறிந்துகொள்ளும்படி பிற்காலத்தில் கிறிஸ்தவ விசுவாசத்திலும் போதகத்திலும் வளர்க்கப்படுவார்கள் என்கிற நம்பிக்கையில் தான். இந்த வளர்ப்புக்காகப் பெற்ரேரும் ஞானத்தாய்தகப்பன்மாரும் விசேஷமாய்க் கவலைப்பட வேண்டும்.

மத். 28, 19, 20; எபே. 6, 4;

---

## VI. திடப்படுத்தல்.

327. இவர்களுடைய கடமை எதோடு முடிவடையும்?

திடப்படுத்தலோடு தான்.

அதினால் ஞானஸ்நானம் பெற்றுப் போதுமானபடி போதிக்கப்பட்ட பிள்ளைகள் இராப்போசனத்தில் சேர்ந்து தங்கள் கிறிஸ்தவ விசுவாசத்தில் உறுதியும் திடமும் அடைகிருர்கள்.

328. திடப்படுத்தலானது எப்படி நடந்தேறும்?

பிள்ளைகள் சுவிசேஷ லுத்தரன் சபையின் விசுவாசத்தைப்பற்றிப் பரீட்சிக்கப்படுச் சொந்த வாயினால் அதை அறிக்கையிட்டு இதற்கு உண்மையாய் இருப்போம் என்று வார்த்தைப்பாடு கொடுத்த பிற்பாடு குரு பிள்ளைகளுக்காக ஜெபித்து அவர்கள் தலைமேல் கை வைத்து அவர்களை ஆசீர்வதித்துத் திடப்படுத்துவார்.

---

# ஐந்தாம் ஆதி நியாயம்.

## (பீடத்தின் சாக்கிரமெந்து அல்லது திருராப்போசனம்.)

---

## I. முதலாவது.

வினு:—கர்த்தருடைய இராப்போசனமாவதென்ன?

விடை:—அது நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் கட்டளையினாலே கிறி
ஸ்தவர்களாகிய நாம் அப்பத்திற்குள்ளும் இராட்ச இரசத்திற்குள்ளும் தின்று குடி
க்கிற அவருடைய மெய்யான சரீரமும் இரத்தமுமாயிருக்கிறது.

வினு:—இது எவ்விடத்தில் எழுதியிருக்கிறது?

பரிசுத்த மத்தேயு, மாற்கு, லூக்கா, என்றவர்கள் எழுதின சுவிசேஷங்களிலும் பரி
சுத்த பவுல் கொரிந்தியருக்கு எழுதின முதல் நிருபத்திலும்தானே. அவைக
ளாவன:—நம்முடைய கர்த்தர் இயேசுகிறிஸ்து தாம் காட்டிக் கொடுக்கப்பட்ட அன்
றிராத்திரியில் அப்பத்தை எடுத்துக் கொண்டு இஸ்தோஸ்திரம் பண்ணி அதைப் பிட்
டுத் தம்முடைய சீஷர்களுக்குக் கொடுத்துத் திருவுளம் பற்றினதாவது: நீங்கள்
இதை வாங்கித் தின்னுங்கள் இது உங்களுக்காகக் கொடுக்கப்படுகிற என்னுடைய
சரீரமாயிருக்கிறது. இதை என்னை நினைக்கிறதற்காகச் செய்யுங்கள் என்று திரு
வுளம் பற்றினுர்.

பின்னையும் அந்தப்படியே இராப்போசனம் பண்ணின பின்பு அவர் பாத்திரத்தை எடு
த்துக் கொண்டு இஸ்தோத்திரம் பண்ணி அவர்களுக்குக் கொடுத்துத் திருவுளம் பற்
றினதாவது: இதிலே எல்லாரும் குடியுங்கள்; இந்தப் பாத்திரம் பாவமன்னிப்புக்
கென்று உங்களுக்காகச் சிந்தப்படுகிற என்னுடைய இரத்தத்தில் புதிய ஏற்பாடா
யிருக்கிறது. இதை நீங்கள் குடிக்கும்போதெல்லாம், என்னை நினைக்கிறதற்காகச்
செய்யுங்கள் என்று திருவுளம் பற்றினுர்.

329. ஞானஸ்நானத்தைத் தவிர நமது சபையில் வழங்கும் வேறு சாக்கிரமெந்து எது?

பரிசுத்த இராப்போசனம்.

330. இந்தச் சாக்கிரமெந்தில் (ஞானதிரவியத்தில்) காணப்படுகிற பொருள் என்ன?

அப்பமும் இரசமும்.

33[illegible]. இந்தச் சாக்கிரமெந்தில் (ஞானதிரவியத்தில்) காணப்படாத பொருள் என்ன? 1 கொரி. 10, 16.

இயேசு கிறிஸ்துவின் மெய்யான சரீரமும் மெய்யான இரத்தமும்.

332. கிறிஸ்துவின் சரீரமும் இரத்தமும் அறியப்படாத வண்ணமாய் அப்பத்தோடும் இரசத்தோடும் கூட இருக்கிறதென்று எப்படி நிச்சயமாய்த் தெரியும்?

முதல் மூன்று சுவிசேஷகரும் அப்போஸ்தலனாகிய பவுலும் எழுதிய ஆண்டவருடைய கட்டளையினாலும் வாக்குத்தத்தத்தினாலும் தான்.

மத். 26, 26—29; மாற். 14, 22—24; லூக். 22, 19. 20.

1 கொரி. 11, 23—25 பிரசங். 134, 1—2.

333. ஆண்டவர் பரிசுத்த இராப்போசனத்தைக் கட்டளையிட்டதெப்போது?

தாம் காட்டிக் கொடுக்கப்பட்ட அன்றிராத்திரியில் தமது சீஷரோடு கடைசிப் பாஸ்காப் பண்டிகையை ஆசரித்து பஸ்கா ஆட்டுக்குட்டியைச் சாப்பிடும் போது.

334. இந்த ஞான திரவியத்துக்கும் பஸ்காவுக்கும் என்ன சம்பந்தம்?

அவரே மெய்யான பஸ்கா ஆட்டுக்குட்டி; பரிசுத்த இராப்போசனமோ புதிய ஏற்பாட்டின் பஸ்கா அல்லது உடன்படிக்கையின் விருந்து.

335. எந்த வார்த்தைகளால் ஆண்டவர் இதை வற்புறுத்துகிறார்?

இந்தப் பாத்திரம் என்னுடைய இரத்தத்தில் புதிய ஏற்பாடாயிருக்கிறது என்கிற வார்த்தைகளால் தான்.

336. இந்த வார்த்தைகளால் நாம் அறிவதென்ன?

இரட்சகருடைய இரத்தப்பலியினால் பராபரனுக்கும் மனிதருக்கும் ஒரு புதிய உடன்படிக்கை ஏற்பட்டிருக்கிறதென்றும், இயேசுகிறிஸ்து உண்டு பண்ணின ஒப்பரவாக்குதலின் இரத்தம் இராப்போசன பாத்திரத்தில் இருப்பதால் அந்தப் பாத்திரம் நம்மை இந்த உடன்படிக்கையில் நிலைப்படுத்திக் காப்பாற்றுகிறதென்றும் அறிந்து கொள்ளுகிறோம்.

எரே. 31, 31—34; எபி. 9, 11—15; 10, 14.

337. அந்தப்படி திரு இராப்போசனத்துக்கு இன்னும் என்ன அர்த்தம் உண்டு?

அதிலே திருச்சபை இயேசுகிறிஸ்துவின் பலி மரணத்தை நன்றியறிதலோடு நினைவுகூர்ந்து அதனால் உண்டான ஒப்புரவாக்குதலையும் மீட்பையும் அறிக்கையிடுகிறது.

1 கொரி. 11, 26; ஆகையால் நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து இந்தப் பாத்திரத்தில் குடிக்கிறபோதெல்லாம் கர்த்தருடைய மரணத்தை அவர் வருமட்டும் அறிவிக்கிறீர்கள்.



338. திரு இராப்போசனத்தில் சேரக்கூடியவர் யார்?

தங்களுக்கு இரட்சிப்புத் தேவை என்றும் தாங்கள் இயேசுகிறிஸ்துவினால் இரட்சிக்கப்பட்டவர்கள் என்றும் தேவ வசனத்தைக் கொண்டு தங்களைச் சோதித்து நிச்சயித்துக் கொண்ட எல்லாக் கிறிஸ்தவர்களும் தான்.

## II இரண்டாவது.

வினா:—நாம் இப்படித் தின்று குடிப்பதனால் நமக்குண்டாகும் பிரயோசனமென்ன?

விடை: இது பாவ மன்னிப்புக்கென்று உங்களுக்காகக் கொடுக்கப்படுகிறதென்றும் சிந்தப்படுகிறதென்றும் சொல்லுகிற வார்த்தைகளே இதின் பிரயோசனத்தை வெளிப்படுத்தும். இந்த வார்த்தைகளினால் பாவமன்னிப்பும், ஜீவனும், மோட்சமும் கர்த்தருடைய இராப்போசனத்திலே நமக்குண்டு. ஏனெனில் பாவமன்னிப்பு எங்கேயோ அங்கே ஜீவனும் மோட்சமும் இருக்கும்.

339. திரு இராப்போசனத்தில் நாம் பாவ மன்னிப்பைப் பற்றி எப்படி நிச்சயம் அடைவோம்?

கிறிஸ்துவின் சரீரமும் இரத்தமும் பாவமன்னிப்பின் முத்திரையானதால் தான்.

340. பாவ மன்னிப்போடு நமக்கு நித்திய ஜீவனும் மோட்சமும் ஏன் கூடக் கொடுக்கப்படும்?

ஏனென்றால் நம்மைப் பராபரனிடத்திலிருந்து பிரித்து வைக்கும் பாவக்குற்றம் மன்னிக்கப்பட்டவுடனே நாம் மறுபடி பராபரனோடு உறவாடி அதனால் மெய்யான ஜீவனை அடைந்து இப்படிப் பராபரனோடு உண்டான ஐக்கியத்தினால் இகபர பாக்கியத்தை அநுபவிக்கிறோம்.

யோ. 6, 35. இயேசு அவர்களுக்குச் சொன்னதாவது நான் ஜீவனுடைய அப்பமாயிருக்கிறேன் என்னண்டை வருகிறவன் பசியாயிருப்பதில்லை என்னிடத்தில் விசுவாசிக்கிறவன் ஒருக்காலும் தாகமாயிருப்பதில்லை என்றார்.

யோ. 6, 22; கலா. 2, 20.

341. திரு இராப்போசனத்துக்குத் திரு விருந்து என்கிற பேர் ஏன் கொடுக்கப்பட்டது?

அதிலே சேருகிற எல்லாரும் அந்த ஒரே போஜனத்தினால் ஐக்கியப்படுவதால் தான்.

ரோ. 15, 5; 1 கொரி. 10, 17.

## III மூன்றாவது.

வினா:—தின்று குடிப்பது இத்தனை பெரிய நன்மைகளைச் செய்வதெப்படி?

விடை:—தின்றுகுடிப்பது இவைகளைச் செய்கிறதல்லவே இது பாவ மன்னிப்புக்கென்று உங்களுக்காகக் கொடுக்கப்படுகிறதென்றும் சிந்தப்படுகிறதென்றும் சொல்லுகிற வார்த்தைகளே இவைகளைச் செய்கிறது. தின்று குடிப்பதோடு இந்த வார்த்தைகளே கர்த்தருடைய இராப்போசனத்தில் பிரதானபொருளாயிருக்கிறது இந்த வார்த்தைகளை விசுவாசிக்கிறவன் இவைகளில் சொல்லியிருக்கிற பாவமன்னிப்பைப்பெற்றிருக்கிறான்.

342. கிறிஸ்துவின் வார்த்தைகள் தின்று குடிப்பதோடு திரு இராப்போசனத்தில் பிரதான பொருள் என்று ஏன் சொல்லப்பட்டிருக்கிறது?

அவைகளால் மாத்திரம் தின்று குடிப்பது சாக்கிரமெந்தாகும், அவைகளில்லாமல் திரு இராப்போசனத்தினால் உண்டாகும் பிரயோசனம் நமக்குத்தெரியாது.

343. திரு இராப்போசனத்தின் பிரயோசனத்தை எப்படி அடைவோம்?

விசுவாசத்தினால் மாத்திரம்; அதில்லாமல் நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்படாமல் அதிகரிக்கும்.

1 கொரி. 11, 27—29.

---

## IV நான்காவது.

வினா:—கர்த்தருடைய இராப்போசனத்தைப் பாத்திரமாய் வாங்கத்தக்கவன் ஆர்?

விடை:—உபவாசமுதலிய சரீர ஒடுக்கம் புறம்பான நல்லொழுக்கம் தானே. ஆனால் இது பாவமன்னிப்புக்கென்று உங்களுக்காகக் கொடுக்கப்படுகிறதென்றும் சிந்தப்படுகிறதென்றும் சொல்லுகிற வார்த்தைகளை விசுவாசிக்கிறவனே இதற்கு நல்ல ஆயத்தப்பட்டவனும் பாத்திரனுமாய் இருக்கிறான். இந்த வார்த்தைகளை விசுவாசியாதவனும் சந்தேகப்படுகிறவனும் இதற்கு அபாத்திரனும் ஆயத்தம் இல்லாதவனுமாய் இருக்கிறான். ஏனெனில் உங்களுக்காக என்கிற வார்த்தைக்குப் பூரண விசுவாசமுள்ள இருதயமே தேவை.

344 திரு இராப்போசனத்தை வாங்கப் போகும்போது நாம் நம்மை எப்படி ஆயத்தப்படுத்துவோம்?



நம்முடைய கவனத்தையும் தியானத்தையும் கெடுக்கிற எல்லாவற்றையும் விலக்கி மெய்பக்தியோடும் சுத்தத்தோடும் பீடத்தண்டை சேருவோம்.

345. நாம் எதைப்பற்றி விசேஷமாய் நம்மைப் பரிசோதிக்க வேண்டும்?

உங்களுக்காகப் பாவமன்னிப்புக்கென்று கொடுக்கப்படுகிறது சிந்தப்படுகிறது என்கிற வார்த்தைகளை நம்புகிற விசுவாசம் நம் மனதில் உண்டோ என்பதைப்பற்றி.

1 கொரி. 11, 28. ஆகையால் மனுஷன் தன்னைத்தான் சோதித்தறிந்து இப்படியே இந்த அப்பத்திலே புசித்து இந்த பாத்திரத்திலே குடிக்கக்கடவான்.

1 சா. 16, 7; எபி. 11, 6; பிரார்த். 134, 1; 9.

346. நம்மை நல்லாயத்தமும் பாத்திரமுமில்லாதவர்களாக்கும் முக்கியமான காரணங்கள் என்ன?

சுயநீதி, பாவநேசம், அவநம்பிக்கை, பிறத்தியானுக்கு மன்னியாத சிந்தை என்றவைகளே.

லூக். 5, 32; யோ. 3, 19; யாக். 1, 6—8; மத். 5, 23; 24.

347. ஆனால் நம்முடைய பலவீனத்தினிமித்தம் ஏன் திரு இராப்போசனத்தில் சேராமல் இருக்கக் கூடாது?

ஏனென்றால் திருஇராப்போசனம் நம்முடைய விசுவாசத்தைப் பலப்படுத்தவே ஏற்பட்டிருக்கிறது. விசுவாசிக்கிறேன் ஆண்டவரே, என் அவிசுவாசத்திற்கு ஒத்தாசை செய்யும் என்று கெஞ்சுகிற எவனையும் இரட்சகர் தள்ளிவிட மாட்டார்.

யோ. 6, 37. பிதா எனக்குக் கொடுக்கிறதெல்லாம் என்னண்டை வரும் என்னண்டை வருகிறவனை நான் புறம்பே தள்ளுகிறதில்லை.

சங். 51, 19; மத். 5, 3; 4—6. மத். 11, 28—30; மாற். 9, 24.

---

## V பாவசங்கீர்த்தனம்.

348. இராப்போசன விருந்தாடிகள் அதற்குத் தங்களை எப்படி ஆயத்தப்படுத்துவார்கள்?

திருச்சபை ஏற்படுத்திய பாவசங்கீர்த்தனத்தினால்தான்.

349. இதனுடைய இரண்டு பங்குகள் என்ன?

பாவ அறிக்கையும் பாவ மன்னிப்புந்தான்.

350. பாவ சங்கீர்த்தன ஜெபமெங்ஙனே?

இரக்கமுள்ள பராபரனே, ஏழைப் பாவியாகிய நான் உமக்கு முன்பாக விழுந்து உம்முடைய கிருபையையும் பொறுமையையும் தேட வருகிறேன். நான் மனதினாலும் வாக்கினாலும் நடக்கையினாலும் வெகு விதமான பாவக்குற்றங்களைப் பண்ணினேன் என்று மனஸ்தாபப்பட்டு அறிக்கையிடுகிறேன். ஆதயவுள்ள சுவாமி, நியாயமாய் இருக்கிறபடி என்னை நரகத்திலே தள்ளாமேயும். தேவரீர் என் இரட்சகராகிய இயேசுகிறிஸ்துவின் பாடுகளையும் மரணத்தையும் பார்த்து நான் செய்த பாவங்களை எல்லாம் மன்னித்து என்னை இரட்சியும். நான் திரும்ப பாவத்திற்குள் சோதிக்கப் பட்டால் அதற்குச் சம்மதியாமல் அதை அறுவறுக்கவும் உமக்குப் பிரியமான பின்னையாய் நடக்கவும் பரிசுத்த ஆவியைக்கொண்டு எனக்குப் புத்தியையும் பலத்தையும் தந்தருளும். இனி நான் சாகும்வேளையில் உம்முடைய மோட்சராச்சியத்தில் சேருவதற்கு என்னை ஆயத்தம்பண்ணியருளும், சுவாமி, ஆமென்.

351. இதை அறிக்கையிட்ட நாம் எதைப் பெற்றுக்கொள்ளுகிறோம்?

குரு நமது தலைமேல் கைவைத்து திரியேக பராபரனுடைய நாமத்தில் நமக்கு அறிவிக்கிற பாவமன்னிப்பையே.

சங். 32, 5; லூக். 28, 13; 1 யோ. 1, 8, 9.

352. குருவின் பாவ மன்னிப்பு பராபரனுடைய மன்னிப்பு என்று எதனால் நிச்சயமாய் அறிவோம்?

நம்முடைய நாதர் இயேசுகிறிஸ்து கிருபையின் எத்தனங்களைக் கையாடத் தேவ ஊழியத்தை ஸ்தாபித்து இந்த தேவ ஊழியத்துக்கு குணப்படுகிறவர்களுக்குத் தமது நாமத்தில் பாவங்களை மன்னிக்கவும் குணப்படாதவர்களுக்குப் பாவங்களை மன்னிக்காமல் சுமத்தி வைக்கவும் அதிகாரம் கொடுத்தாரே தான். மத். 16, 19; 18, 18; யோ. 20, 22; 1 கொரி. 4, 1; 2 கொரி. 5, 19. 20.

353. பாவ மன்னிப்பினால் உண்டாகும் ஆறுதல் யாருக்கு இல்லை?

உண்மையாய்க் குணப்படாமல் மாயமான பாவ சங்கீர்த்தனம் செய்கிறவனுக்கே.

சங். 139, 23. 24; மத். 15, 7. 8.

354. லுத்தரின் சபையைச் சேர்ந்த ஒவ்வொரு கிறிஸ்தவனும் விசேஷமான பாவத்துக்காக ஆறுதலையும் போதனையையும் தேட என்ன செய்யக்கூடும்?

அவன் இதைத் தனிப் பாவ சங்கீர்த்தனத்தில் குருவுக்கு அறிக்கையிட்டுப் பாவ மன்னிப்பைக் கேட்கக் கூடும்.

சங். 32, 3—5.

அவன் ஏன் சந்தேகமின்றி அதைக் குருவுக்குத் தெரிவிக்கலாம்?

ஏன்றால் குரு பாவசங்கீர்த்தனத்தில் தமக்குச் சொல்லப்பட்ட இரகசியத்தை வெளியிடலாகாது. வெளியிட்டால் தமது ஊழியத்தை இழக்கும்படி நேரிடும்.

## சாக்கிர மெந்துக்களுடைய தன்மையும் நோக்கமும்.

ரு ஞானஸ்நானத்துக்கும் திரு இராப்போசனத்துக்கும் என்ன பொதுப்பெயர்

ரமெந்துக்கள் அல்லது ஞான திரவியங்கள்.

ாக்கிரமெந்து என்றால் என்ன?

விசுவாசத்தை உண்டாக்கவும் பலப்படுத்தவும் கிறிஸ்துவினால் கிருபையாய் ஸ்தாபிக்கப்பட்டு காணப்படுகிற பூலோகத்துக் கடுத்த அடையாளங்களோடு கூடிய பரிசுத்த செய்கை தான்.

119460

## VI. ஆருவது.

ிஸ்து தமது வசனத்தை மாத்திரமல்ல சாக்கிரமெந்துக்களையும் கிருபையின் சாதனங்களாகக் கட்டளையிட்டதால் நாம் அறிந்து கொள்வதேன்ன?

மது பெலவீனத்துக்கு இரங்கிப் பலவிதமாய் திருவசனத்தினாலும் திருச்செயல்களாலும் தமது இரட்சிப்பை நமக்கு நிச்சயப்படுத்தச் சித்தமுடையவராகிய நடைய கிருபையின் ஐஸ்வரியம் தான்.

8. 38. 39; ஏனெனில் மரணமானாலும் ஜீவனானாலும் தூதரானாலும் துரைத்தனங்களானாலும் வல்லமைகளானாலும் வருங்காரியங்களானாலும் உயர்த்தியானாலும் தாழ்த்தியானாலும் வேறெந்த சிருஷ்டி என்கிலும் நம்மை நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவுக்குள்ளான பராபரனுடைய சிநேகத்தை விட்டு பிரிக்கமாட்டதென்று நிச்சயித்திருக்கிறேன்.

265, 3.

OFFICE OF THE REGISTRAR OF B...